# உதயன்

சுடர் 31 கதிர் 053 வள்ளுவர் ஆண்டு 2047 தை 04, திங்கட்கிழமை 18.01.2016


ரூ. 137 இலட்சம் (13,704,134.40) NLB

## ஆளும் கட்சியினருடனான கூட்டத்தை தன்னிச்சையாக இடைநிறுத்தினார் விக்கி

### மூவருடனான மந்திராலோசனையே இதற்கு காரணமெனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 18

ஆளும் கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்றுத் திடீரென இடைநிறுத்தியுள்ளார்.

மாகாண சபையின் ஆளும் கட்சியின் மூன்று உறுப்பினர்கள் முதலமைச்சரை நேற்று முன்தினம் மாலை சந்தித்ததன் பின்னரே இந்தச் சந்திப்பு, முதலமைச்சரால் தன்னிச்சையாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக, ஆளும் கட்சி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும், ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில், கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தின் தொடர்ச்சியாகவே நேற்றைய கலந்துரையாடல் பக். 25

## மைத்திரி - மகிந்தவை ஒன்றிணைக்க முயற்சி

கொழும்பு, ஜன.18

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் இணைக்க மீளவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான ஜோன் செனவிரட்ன மற்றும் எஸ்.பி. திஸாநாயக்க ஆகியோர் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த இரண்டு பேரும் நல்லாட்சி அரசில் அமைச்சுப் பதவிகளை வகித்து பக். 22

## சிரந்திக்கு எதிராக வழக்குத் தொடர அரசு தீர்மானம்

கொழும்பு, ஜன.18

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாரியார் சிரந்தி ராஜபக்சவுக்கு எதிராக தற்போதைய வெளிவிவகார அமைச்சு வழக்குத் தொடரவுள்ளது.

இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே லீடர் செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சீனா வழங்கிய நிதியை சிரந்தி அரச வங்கியில் வைப்புச் செய்யாது, தனியார் வங்கியில் வைப்புச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் சீனா வழங்கிய நிதி இவ்வாறு தனியார் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. சிரந்தியின் நடவடிக்கை குறித்து வெளி விவகார அமைச்சினால் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவிலும் முறைப்பாடு வழங்கப்படவுள்ளது.

இந்தமுறைப்பாடு தொடர் பக். 25

# புதிய அரசமைப்பால் பாதிப்பு எதுவுமில்லை

### அடித்துக் கூறுகிறார் பிரதமர் ரணில்

கொழும்பு, ஜனவரி 18

இலங்கையில் பௌத்த மதத்துக்கும், ஒருமைப்பாட்டுக்கும் எந்த பாதிப்புகளும் புதிய அரசமைப்பின் மூலம் ஏற்படாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக்காலை அலரிமாளிகையில் விசேட உரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:- பக். 22



## 3 இந்திய மீனவர் சனியன்று கைது

யாழ்ப்பாணம், ஜன. 18

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 93 இந்திய மீனவர்கள் நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்ட நிலையில், குறித்த குற்றச்சாட்டில் அதேதினம் அதிகாலை 3 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 3 மீனவர்களையும் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச் சாட்டில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் 3 பேர் காங்கேசன் பக். 22

முச்சந்தி முரளி



அப்ப மாற்றம் எதுவும் இல்லை எண்டுறியளோ...

## 13 ஆவது திருத்தத்தைத் தாண்டாமல் புதிய அரசமைப்பில் அதிகாரப்பகிர்வு

### வேண்டுமென்கிறார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, ஜன.18

புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் ஊடாக, நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதற்கு ஆதரவு வழங்கப்படும் என தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

எனினும் புதிய அரசமைப்பில், அதிகாரப்பரவலாக்கல் 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு மிகையாகாமல் இருக்க வேண்டும் என்பதுடன், இந்திய மாதிரியில் அதிகாரப் பகிர்வு இணைக்கப்படக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு நாரஹேன்பிட்டிய அபயராம விகாரரையில் நேற்று உரை பக். 25



## உயிரிழப்பில் சந்தேகம்; தகனக்கிரியை நிறுத்தம்

### சடலத்தை நேற்று மீட்ட பொலிஸார் வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்.போதனா வைத்தியசாலையில் காய்ச்சலினால் உயிரிழந்தவர் என்றுகூறிச் சடலம் விடுவிக்கப்பட்ட நிலையில் அவரது உயிரிழப்பில் சந்தேகம் நிலவுவதாகக் கூறப்பட்டதால் தகனம் செய்யப்படவிருந்த உடல், பொலிஸாரால் மீட்கப்பட்டு மீளவும் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரிய பக். 25

## இணைத் தலைவர்களுடன் இன்று ஜனாதிபதியும் பிரதமரும் சந்திப்பு

### மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் விளக்கமளிப்பதற்கு

கொழும்பு, ஜன.18

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட இணைத் தலைவர்களை இன்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் சந்திக்கின்றனர்.

அரசினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் இணைத் தலைவர்களின் பொறுப்பு - கடமை தொடர்பில் விளக்கமளிப்பதற்காகவே மேற்படி பக். 24

## ஜனவரிக்குள் கைதாவர் தாஜுதீன் கொலை சந்தேக நபர்கள்

கொழும்பு, ஜன.18

பிரபல ரக்பி வீரர் வசிம் தாஜுதீனின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இந்த மாத இறுதிக்குள் கைது செய்யப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொலையுடன் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு தொடர்பு உள்ளமை, பக். 22

## கத்தி முனையில் அச்சுறுத்தி 12 பவுண் நகைகள் கொள்ளை

### பன்னாலையில் 7 பேர் கொண்ட குழு துணிகரம்

யாழ்ப்பாணம், ஜன.18

இரவு வேளை வீட்டுக்குள் நுழைந்த 7 பேர் கொண்ட குழு கத்தி முனையில் அச்சுறுத்தி, 5 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய உடைமைகளைக் கொள்ளையடித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினமிரவு, தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்னாலை, முருகன் கோவிலுக்கு அண்மையாக இடம்பெற்றுள் ளது.

இது தொடர்பில் தெல்லிப்பழை பக். 25

## பெப்ரவரி 13 இல் ஜேர்மனி பயணமாகிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.18

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்தமாதம் ஜேர்மனிக்கான நான்கு நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

அடுத்த மாதம் 13ஆம் திகதி இந்தப் பயணம் ஆரம்பமாகும் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் ஜேர்மனிப் பயண பக். 24

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வட மாகாண சாலைகளில் பிரச்சினைகள் தீர்க்கப்படும்

*போக்குவரத்து பிரதி அமைச்சர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன.18

வடக்கு மாகாணத்தில் உள்ள 7 சாலைகள் தற்போது எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து எதிர்வரும் காலத்தில் அவை நிவர்த்தி செய்யப்படும் என்று தெரிவித்தார் போக்குவரத்து பிரதி அமைச்சர் அசோக்க அபயசிங்க.

இலங்கையில் உள்ள 12 பிரதான பிராந்தியங்களில் வடக்கு போக்குவரத்து பிராந்தியம் தற்போது முதல் நிலையில் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு தனிப்பட்ட பயணம் மேற்கொண்டிருந்த அமைச்சர் கோண்டாவில் சாலைக்குச் சென்றிருந்தார். அங்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது-

ஏழு சாலைகளில் சாரதிகள் பற்றாக்குறை தொடர்பாக சாலை முகாமையாளர்கள் கூறியிருந்தனர். இது தொடர்பில் அமைச்சருடன் கலந்தாலோசிக்கவுள்ளேன். ஆளணி மற்றும் பஸ்கள் பற்றாக்குறையாக உள்ள சாலைகளுக்கு தேவையான வசதிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் நிவர்த்தி செய்யப்படும். எதிர்காலத்தில் பிராந்தியங்கள் ஊடாக, சாலைகளின் முன்னேற்றத்தை மேற்கொள்ள சாலைகளில் இருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பொலிஸார், இராணுவத்தினர் பயணம் செய்வதற்குரிய பணவவுச்சரில் இங்கிருந்தே நேரடியாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்காலங்களில் வடக்கு மாகாணத்தில் உள்ள சாலைகளில் உள்ள ஆளணி வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதே போல் ஊழியர்களுக்கு வழங்கப்படாத சம்பள நிலுவைகளும் இனி வரும் காலங்களில் வழங்கப்படும் - என்றார்.

கோண்டாவில் சாலை முகாமையாளர் செல்லத்துரை குணபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய முகாமையாளர்கள், பிராந்திய கணக்காளர்கள், வடமாகாணத்தில் உள்ள ஏழு சாலைகளின் முகாமையாளர்கள், பொறியில் முகாமையாளர்கள், உட்பட சாரதிகள் மற்றும் ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

(ற-107)

# விறகு எரித்துக் குளிர் காய்ந்த கர்ப்பிணி தீ பற்றி படுகாயம்

*வவுனியா, சூடுவெந்தபுலவில் சம்பவம்*
*சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பி வைப்பு*

வவுனியா, ஜன.18

எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிறைமாத கர்ப்பிணியான இளம் பெண் ஒருவர் நேற்று மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று வவுனியா வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

வவுனியா சூடுவெந்தபுலவு 100 வீட்டுத்திட்டம் பகுதியில் வசித்து வந்த 25 வயதுடைய ஏழு மாத கர்ப்பிணிப் பெண்ணே இவ்வாறு கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கடும் பனி காரணமாக குளிராக இருப்பதாக தெரிவித்து விறகுகளை அடுக்கி நெருப்பு வைத்து குளிர் காய்ந்துள்ளார். இதன்போது எதிர்பாராத விதமாக அவர் அணிந்திருந்த உடையில் தீ பிடித்து எரிந்துள்ளது. தீயை அணைக்க முற்பட்டபோது அருகில் எரிந்து கொண்டிருந்த விளக்கிலிருந்த மண்ணெண்ணையும் நிலத்தில் சிந்தியதில் குறித்த தீ மண்ணெண்ணெயில் பற்றி பரவலடைந்துள்ளது.

அவரது கணவரின் பலமணி நேரம் போராட்டத்தின் பின்னர் குறித்த தீ அணைக்கப்பட்டு உடம்பில் தீகாயத்துடன் குறித்த நிறைமாத கர்ப்பிணி கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் சிகிச்சையின் பின்னர் குறித்த கர்ப்பிணியின் சிசுவுக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதைக் கருதி நேற்று மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட வைத்தியசாலை வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-21,402)

# தாதியர் பயிற்சிக்காக ஆயிரம் மாணவர்கள் இணைக்கப்படுவர்

*சுகாதார அமைச்சு அறிவிப்பு*

கொழும்பு, ஜன.18

தாதியர் பயிற்சிக்கு புதிதாக 1000 மாணவர்கள் இணைக்கப்படவுள்ளனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரத்னவின் ஆலோசனைப்படி இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆரோக்கியமான ஒரு தலைமுறையை உருவாக்கி தரமான சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக சுகாதார சேவையின் மனித வளங்களை அதிகரிப்பது இந்தத் திட்டத்தின் குறிக்கோளாக இருக்கின்றது என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

3 வருடங்களின் பின்னர் அந்த மாணவ தாதியர்கள் நாடு பூராகவும் உள்ள போதனா வைத்தியசாலைகள், ஆரம்ப வைத்தியசாலைகள், மாவட்ட வைத்தியசாலைகள் மற்றும் கிராமிய வைத்தியசாலைகள் உள்ளிட்ட சுகாதார நிலையங்களில் சேவைகளில் இணைத்துக் கொள்ளப்படுவர் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (வ)



கிளிநொச்சி கமக்கார அமைப்பால் கிளிநொச்சி இரணைமடுக்குளம் நீர்ப்பாசனத்துக்குத் திறந்து விடப்பட்டு 96 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கனகாம்பிகை அம்மன் கோவிலில் 96 பானைகளில் பொங்கல் விழா இடம்பெற்றது. இரணைமடுக் குளத்தின் கீழான 22 திட்டக்குழுக்கள் கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் 96 பானைகளில் பொங்கி ஆண்டு நிறைவு விழாவை சிறப்பித்தனர். நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், அரசியல் பிரமுகர்கள், இரணைமடு திட்டக்குழுக்கள், கிளிநொச்சி கமக்கார அமைப்புகளின் சம்மேளன செயலாளர் சிவமோகன், கமக்கார அமைப்பினர், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (ற-ஜ-21,ரி3)

# சாதாரண தரப் பரீட்சைக்கான பாடங்களைக் குறைக்க முடிவு

*தேசிய கல்வி நிறுவகம் தகவல்*

ஜீ.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கான பாடநெறிகளை குறைப்பதற்கு தேசிய கல்வி நிறுவகம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய புதிய பாடநெறிகளை ஒழுங்கு செய்துள்ளதாக தேசிய கல்வி நிறுவகத்தின் தலைவர் கலாநிதி குணபால நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

அடுத்த வருடம் முதல் ஜீ.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கான புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் பரீட்சைக்கு தோற்றுவதற்காக கட்டாயப்படுத்தப்பட்ட பாடங்கள் தொடர்பிலும் மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்யப்படும் பாடங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஜீ.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கான பாடநெறிகளை, தற்போது 9 ஆகவிருக்கும் பாடங்களை 6 அல்லது 7 வரை குறைப்பது தொடர்பில் ஆராயப்படுகிறது. மாணவர்களின் நன்மை கருதியே இவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன -என்றார். (வ)

# 2015 இல் 5 லட்சம் பேர் எச்.ஐ.வி. பரிசோதனை

கடந்த வருடம் சுமார் ஐந்து லட்சம் பேர் எயிட்ஸ் பரிசோதனை மேற்கொண்டுள்ளனர் என்று தேசிய எயிட்ஸ் நோய்த் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

எச்.ஐ.வி நோய்த் தொற்று பரவியுள்ளதா என்பது தொடர்பில் குருதிப் பரிசோதனையை ஐந்து லட்சம் பேர் கடந்த ஆண்டு தனியார் மற்றும் அரச வைத்தியசாலைகளில் மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் குருதிப் பரிசோதனையை அரச வைத்தியசாலைகளில் மூன்று லட்சம் பேரும், தனியார் வைத்தியசாலைகளில் இரண்டு லட்சம் பேரும் மேற்கொண்டுள்ளனர்.

பாதுகாப்பற்ற பாலுறவு கொண்டிருந்தால் எச்.ஐ.வி நோய்த் தொற்று உடலில் பரவியுள்ளதா என்பது குறித்து பரிசோதனை செய்து கொள்ளுமாறு மக்களிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இவ்வாறான பரிசோதனை மேற்கொண்டுள்ளனர் என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ஜ)

# விபத்துக்குள்ளான பொலிஸிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை

*வழக்குத் தொடர நடவடிக்கை*

கொழும்பு, ஜன.18

சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்று விபத்துக்குள்ளான பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாரதி அனுமதிப்பத்திரம், காப்பீட்டுச் சான்றிதழ் மற்றும் வாகன அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்தியதாக கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது. இவர் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றபோது ஆடைத் தொழிற்சாலைக்குச் சொந்தமான பஸ்ஸுடன் மோதுண்டுள்ளார்.

இந்தச்சம்பவம் தொடர்பில் முறைப்பாட்டைப் பதிவு செய்ய வந்த போக்குவரத்துப் பொலிஸாருடன் சுமார் ஒரு மணித்தியாலமாக வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

அதன் பின்னரே முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது என்றும் முறைப்பாட்டின் போது மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிளிடம் உரிய மோட்டார் சைக்கிளை செலுத்துவதற்குரிய ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை என்றும் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-ஜ-4)



நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு அருகில் உள்ள காடு தீயால் எரிந்து நாசமாகியுள்ளது. கடந்த சனிக்கிழமை மாலை 5 மணியளவில் இனந் தெரியாதோரால் குறித்தக் காட்டுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. சுமார் 3 ஏக்கர் வரையிலான மானா புல் காடு எரிந்து நாசமாகியுள்ளது என்று நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டு கிளிநொச்சியில் உலகத் தமிழ் பண்பாட்டு மையம்

## 100 கோடி ரூபா செலவில் அமைக்க புதுச்சேரி மாநாட்டில் தீர்மானம்

சென்னை, ஜன.18

கிளிநொச்சியில் உலகத் தமிழ் பண்பாட்டு மையம் அடுத்த ஆண்டு 100 கோடி ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

புதுச்சேரியில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச மாநாட்டில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இந்த மாநாட்டில் இலங்கை, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா, சுவிற்சர்லாந்து. தென்னாபிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து 50 தமிழ் பேராளர்களும், இந்தியாவில் இருந்து 150 தமிழ் பேராளர்களும் கலந்து கொண்டுள்ள னர்.

இந்த மாநாட்டில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனேடிய செயற்பாட்டாளர் நடா.ராஜ்குமார் தகவல் வெளியிடுகையில்,

2017ஆம் ஆண்டு உலகத் தமிழ் பண்பாட்டு மையம் 100 கோடி ரூபா செலவில் கிளிநொச்சியில் அமைக்கப்படும்.

ஐ. நா.அமைப்பு போன்று இது உருவாக்கப்படும். இதில் தமிழ் பேசும் மக்கள் வாழும் 160துக்கு மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் இடம்பெறுவர். பண்பாடு மற்றும் மொழி தொடர்பான முடிவுகளே இதில் எடுக்கப்படும். அரசியல் முடிவுகள் எடுக்கப்படமாட்டாது என்றார்.

(வ-5)

# 13ஆவது திருத்தம் மூலம் தமிழர் பிரச்சினை தீராது

## *கூறுகின்றது ஜே.வி.பி.*

கொழும்பு, ஜன. 18

தமிழ் மக்களின் பிரச்சினைகளை 13ஆவது திருத்தச்சட்டதின் மூலம் ஒருபோதும் தீர்க்க முடியாது. மக்களின் பிரச்சினைகள் எவை என்பது தொடர்பில் அறிந்து,அதனை அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

13ஆவது திருத்தச் சட்ட வரைவு மூலம் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. 13ஆவது திருத்தச்சட்டம் தோல்வி கண்டு விட்ட திருத்தமாகும். இது இந்தியாவால் எம்மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்ட ஒன்று. இதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியாது. கடந்த 30 வருடகாலமாக இதனால் தீர்வு கிடைக்கவில்லை. இனியும் தமிழ் மக்களின் எந்த வொரு பிரச்சினையும் இதன் மூலம் தீர்க்கப்படப் போவதில்லை.

13ஆம் திருத்தத்தை முன்னிறுத்தியே வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டது. ஆனால், அவர்களுக்கு தங்களின் வேலைகளை இதன் மூலம் செய்துகொள்ள முடியவில்லை. 13ஆம் திருத்தம் தமிழ் மக்களின் தலைவர்களுக்குத் தேவையானதைப் பெற்றுக் கொடுத்தாலும்,மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை.

நாட்டின் அரசமைப்பு ஒற்றையாட்சி முறையிலா? அல்லது சமஷ்டி ஆட்சிமுறையிலா? வேண்டும் என்பதை விடுத்து மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழியைத்தேட வேண்டும். எனவே, மக்களுக்கு எது நன்மை பயக்குமோ அதற்கான யோசனைகள் அரசமைப்பில் உள்ளடக்கும் அரசமைப்பே தேவையாகவுள்ளது.பொருளாதாரப்பிரதிபலன் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு அனைத்து மக்களுக்கும் சமவுரிமை கிடைக்க வேண்டும் என்பதே. இரண்டாம் தர மக்கள் என்று எவரும் இருக்கக் கூடாது. அதனைத் தாண்டி நாட்டை ஐக்கியப்படுத்த வேறுவழியில்லை என்பதே உண்மை.

தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளும் இலங்கையின் அரச கரும மொழிகளாகும் என்பதை ஏற்றுக்கொள்ளும் புதிய அரசமைப்பே தேவையாகவுள்ளது. அரசின் புதிய அரசமைப்பில் உள்ளடக்கும் விடயங்கள் என்னவென்பது வெளிப்படைத்தன்மையாக இல்லை. அதனை அரசு வெளியிட வேண்டும் என்றார். (கு-சி)

### யாழ்.மத்தியகல்லூரியில் இன்று பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்.மத்திய கல்லூரியின் பொங்கல் விழா நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் இந்தப் பொங்கல் விழாவில் விசேட வழிபாடுகளும் நடைபெறவுள்ளதாக இந்துமா மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.

(வ-ரி5)

# புதிய அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்ற அரசு தீவிர முயற்சி

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்பு திருத்த யோசனைகளை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்வதற்கு அரசு தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதிய அரசமைப்புத் திருத்தம் தொடர்பிலான யோசனைகள் கடந்த 9ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றில் உள்ள பங்கியுள்ள சில விடயங்களுக்கு அரசின் பங்காளியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது எதிர்ப்பைத் தெரிவித்திருந்ததுடன், கடந்த 12ஆம் திகதி நாடாளு மன்றத்தில் 9 திருத்த யோசனை களை அந்தக் கட்சி முன்வைத்திருந்தது.

இந்தத்திருத்த யோசனைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டதாக அந்தக்கட்சி தெரிவித்தபோதிலும், அவற்றைப் பிரதமர் நிராகரித்ததாக கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், யோசனை திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டு எதிர்வரும் 26ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்ற அமர் வில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசமைப்பு திருத்த யோசனை நிறைவேற்றப் படும் என அமைச்சரவைப்பிரதிப்பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன கூறியிருக்கிறார்.

இந்நிலையில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குப் புதிய அரசமைப்பொன்றை கொண்டுவருவதற்கான யோசனை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உடன்பாட்டுடன் உள்ளதாகவும், இந்த அரசமைப்பு யோசனையை மூன்றில் இரண்டு பெரும் பான்மையைப் பெற்று நிறை வேற்றிக்கொள்வதற்காக நல்லாட்சி அர சின் முக்கியஸ்தர்கள் சிலர் எதிர்க் கட்சி ஆசனங்களில் அமர்ந்துள்ளவர்களுடன் பேச்சுக்கள் நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஈழ மக்கள் ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகளிடம் பேச்சுகள் நடத்தி அரசமைப்புக்கான ஆதரவைக்கோரியுள்ளது.

அத்துடன், புதுமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரையும் இவர்கள் நெருங்கி ஆதரவைக் கோரியுள்ளனர். களுத்துறை மாவட்ட ஐ.ம.சு.மு. நாடாளுமன்ற உறுப்பினர் பியால் நிஷாந்த அண்மையில் இது தொடர்பிலான கருத்துக் களை முன்வைத்திருந்தார்.

புதுமுக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைகளை வழங்கி,அவர்களது ஆதரவைப் பெற்றுக்கொள்ள அரசு முயற்சி செய்வதாக அவர் இதன்போது தெரிவித்திருந்தார். (கு-சி)

**தவறிவிட்டது**

பரமநாதன் டினேஸ் ஆகிய எனது அ.அட்டை இல 9111 450 22V மற்றும் சாரத்திய அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரிச் சான்றிதழ், வங்கி அட்டைகள் ஆகிய முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கோப்பாய்க்கும் அள வெட் டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள வும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 182 7479, 077 4674657

**தவறிவிட்டது** தொடர்பு: 077 6118 855

அப்புத்துரை நிரஞ்சன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (813101058V) மற்றும் அடங்கிய எனது பேர்ஸ் மாகியப்பிட்டி பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**வேலையாள்கள் தேவை**

கொழும்பில் இயங்கும் நிறுவனத்துக்கு பெயின்ரர், உதவியாளர்கள் தேவை.

தொடர்பு: 077 230 9164

In Jaffna, Vavuniya & Mannar

தொழில் புரிபவர்களுக்கான பகுதி / முழு நேர வகுப்புக்கள்

**Spoken English**

| | |
|---|---|
| Monday to Friday | 8.30 to 12.30pm |
| Monday to Thursday | 6pm to 8pm |
| Sat. & Sunday | 9am to 1pm |

**Spoken Sinhala**

பாடநெறி முடிவில் அரச கருமமொழித் திணைக்களப் பரீட்சை நடாத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்

Saturday only | 9 - 1pm OR 1 - 5pm | 6 Months

Hot line : 0777-596148

BRITISH COLLEGE

23, Kachchari nallur Rd, Jaffna. Tel : 021-4927113

103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041

39, Convent Rd, Mannar. Tel : 023-4924124

Galaxy Star

வெற்றி வாரம் 026 திகதி 17.01.2016

6 05 13 39 40

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசுப் பொதி ரூ. 2,511, 280/-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

திகதி 17.01.2016 | வெற்றி வாரம் 1930 | ஊதா

மிதுனம் வெற்றி இலக்கங்கள் 23 42 59 60

செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி ரூ 2,787,820/-

**உடனடி பதவி வெற்றிடம்**

» Mobile Application Developers for i phone and Android Platform

» Computer Language (Java அல்லது Visual Studio அல்லது PHP) இல் திறமை / அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

» ஆர்வம் உள்ளவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் உங்கள் சுயவிவரக் கோவையினை கீழே குறிப்பிடப்பட்ட email முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

Student Success Centre

320, Main Street, Jaffna. | 021 221 5569, 077 008 0075 | jaffnassc@gmail.com

**SPOKEN ENGLISH**

WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்

பாடப்புத்தகங்கள், Video DVD, சான்றிதழ் முற்றிலும் இலவசம்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 23.01.2016 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.

23.01.2016 இற்குமுன் விண்ணப்பித்தல்வேண்டும்! ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே!

SAMSON Experts in English Training

279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.

021 320 3313 077 1570 486

**தேவை**

எமது நிறுவனத்திற்கு மிக்ஷர் உற்பத்தி செய்யக்கூடியவர்களும் மற்றும்பொதி செய்யக்கூடியவர்களும் ( ஆண், பெண் இருபாலாரும்) தேவை.

உடனடித்தொடர்புக்கு

194, யாழ் வீதி, மானிப்பாய். 075 049 5685

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சீமாட்டி லீலாவதி நினைவுப் பேருரை

**"வட இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவினுள் மனிதநேய விழுமியப் பேணலும் கல்வியின் பங்களிப்பும்"**

பேருரை வழங்குநர்: கலாநிதி திருமதி அனுஷ்யா சத்தியசீலன்
கல்வித்துறை,கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இடம்: கைலாசபதி கலையரங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திகதி: 22.01.2016

நேரம்: பிற்பகல் 3.00மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பதிவாளர்.

## University of Jaffna

**Sir Pon Ramanathan Memorial Lecture**
*On*
**Conserving Buddhist stupas and religious nationalism in Srilanka**

Speaker : Prof.Jegath Weerasinghe,
Director,
Institute of Archaeology,
University of Kelaniya.

Place : Kailasapathy Auditorium,
University of Jaffna.

Date : 21.01.2016

Time : 3.00 p.m

**All are cordially invited.**

Registrar

## பகுதிநேர வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, காப்புறுதி ஆலோசகராக, யாழ். மண்ணில் 50 வருடங்களாகச் சேவையாற்றிவரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

- 2 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள்:
  யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை

### அடிப்படைத் தகைமைகள்

- G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18- 55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக்கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 30.01.2016ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல: 5086
C/O உதயன்
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்



## தேவை

இசை. தவில். நாதஸ்வரக்கலைஞர்கள் தேவை. மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் உள்ள ஆலயத்தில் தங்கி இருந்து நித்திய. நைமித்திய பூசைகள். திருமணவைபவங்கள் மற்றும் ஏனைய வைபவங்களிற்கு வாசிப்பதற்கு 50வயதிற்கு மேற்பட்ட தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் தேவை. மாதச்சம்பளம். தனிவீடு மற்றும் ஏனைய படிகள் வழங்கப்படும்.

தொடர்பு: 077 952 2047

## மதுரா அழகுக்கலை பயிற்சி நிலையம்



(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)

புதிய பிரிவு ஆரம்பம்

டிப்ளோமா(அழகுக்கலை, ஹெயா செற்றிங், கேக் ஐசிங், ஸ்கின் அனலைசிங்), ரெயிலரிங், ஹான்ட் வேர்க் ஆகிய பயிற்சிகள். பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பயிற்சிக் காலம் 3 மாதம். பயிற்சி நிறைவில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
கென்வக்கேன் மேக்கப் 1000/=

20.01.2016 அன்று பயிற்சி நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

மகளிர் மட்டும்.

தொடர்பு: 077 936 2642
பழைய வீதி, கோப்பாய்.

## வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு: 077 992 7146

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அருகில் பெரிய அனெக்ஸ் வீடு இணைந்த குளியலறையுடன் வாடகைக்குண்டு

## வீடு விற்பனைக்கு

தொடர்பு: 077 322 0722

மானிப்பாய் பிரதான வீதியில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக மூன்று அறைகள். இரண்டு குளியல் அறைகள் உடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் ஐந்து பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

## ELOCUTION வகுப்புக்கள்

3 வயது முதல் 10 வயது வரையான பிள்ளைகளின் ஆங்கில உச்சரிப்பு முறையை மேம்படுத்தக் கூடிய வகுப்புக்கள்,

**திங்கள், புதன், வெள்ளி நாள்களில் 3.30 - 5.30 வரை**

Beefort International School
136,Navalar Road, Jaffna

## கசிப்பு காய்ச்சியவர் கைது

சாவகச்சேரி, மிருசுவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரை யாழ்ப்பாணபிராந்திய விசேட புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் மாலை கைது செய்து தம்மிடம் ஒப்படைத்துள்ளனர் என்று சாவகச்சேரிப் பொலிஸார்தெரிவித்தனர். கைதானவர் அதே பகுதியைச்சேர்ந்த 45 வயதுடைய நபர் என பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் கோடா 20 லீற்றர், மற்றும் 9 போத்தல் கசிப்பு என்பவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர். (ற-107)

## சட்டவிரோதமாக கடத்தப்பட்ட மாடுகள் மீட்பு

பருத்தித்துறை, அல்வாய் பகுதியில் இருந்து சட்ட விரோதமான முறையில் நான்கு மாடுகளை ஏற்றிச்சென்ற சிறிய லொறி ஒன்றை நேற்றுக்காலை கைப்பற்றியுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் மாடுகளை ஏற்றி லொறி ஒன்று யாழ்ப்பாணப் பகுதிக்கு கொண்டு செல்வதாக நெல்லியடிப் பொலிஸாருக்கு இரகசிய தகவல் நேற்றுக்காலைகிடைக் பெற்றிருந்தது.

வதிரிப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் குறித்த வாகனம் வருவதை அவதானித்துள்ளனர். 100 மீற்றர் முன் வாகனம் வரும் போது நிறுத்துமாறு பொலிஸார்சமிக்ஞை காட்டியுள்ளனர்.

இந்த நிலையில் வாகனத்தை செலுத்தி வந்தவர்கள், பொலிஸாரைக் கண்டதும் வாகனத்தைநிறுத்திவிட்டு பற்றை வழியாக தப்பிச்சென்றுள்ளனர். நான்குமாடுகளுடன் மீட்கப்பட்ட சிறிய லொறியை பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-107)

வவுனியாவில்

## கல்வியுலகின் புதிய சகாப்தம்

# EDI
Educational Development Institute

கவிஞன் பப்ளிகேசன் அருகாமை, டிரான்ஸ்போமர் சந்தி, பண்டாரிகுளம், 076 8078451

### புதிய பிரிவுகள் ஆரம்பம், 17.01.2016

தரம் 1,2,3,4 இற்கான பிரிவுகள் | தரம் 5 புலமைப்பரிசில் பிரிவுகள்

விசேடமாக பேச்சு சிங்கள, பேச்சு ஆங்கில, மனக்கணித மற்றும் கணனிப் பயிற்சி வகுப்புக்கள் திறமைமிகு பயிற்றப்பட்ட ஆசிரியை குழாம்

இருபது வருடகாலம் அதிக மாணவர்களை சித்தியடையச் செய்த
அனுபவமுள்ள ஆசிரியர்
**திரு.கா.துணைவன்**
B.A (Gen), BEd(Primary), M.A(Tamil), MATE, PGDEM
இவ்வாசிரியரின் வகுப்புக்கள் எமது கல்வி நிலையத்தில் மட்டுமே

**தரம் 6 - 11 வரை**
**தனித்துவம் மிக்க எமது ஆசிரியர்குழாம்**

கணிதம்
திரு.S.ரூபன்
திரு.S.புஸ்பன்

விஞ்ஞானம்
திரு.K.ராகவன்

ஆங்கிலம்
திரு.S.துவாரகன்
திரு.S.சூரியதாசன்

வரலாறு
திரு.P.கெங்கன்
திரு.N.S.றஜீவ்

தமிழ்
திரு.N.சிவலிங்கம்

சமயம்
திரு.S.சூரியதாசன்

சிங்களம்
திருமதி.பா.சாரதா

சுகாதாரம்
திருமதி தர்சினி

தகவல் தொழில்நுட்பம்
திரு.பாலகலைஞன்

**விசேட கணிதம்**
(மீட்டலுடன் கூடிய வினாவிடை வகுப்புக்கள்)
திரு.எம். என். பால-கண்ணதாசன்

எந்தவொரு பிரிவிலும் 24 மாணவர்கள் மட்டுமே அனுமதி

பெற்றோர்களே
உங்கள் பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கம் என்பவற்றை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல உங்கள் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வேண்டி நிற்கின்றோம்

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- வெளிநாடுகளுக்கு பொதிகளை மிக விரைவாக அனுப்பிக்கொள்வதற்கும்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கும்
- காய்கறிகள், பழவகைகள், கடல் உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணை வகைகள், பால்மா உட்பட அனைத்துப் பாவனைப் பொருட்களையும் அனுப்பிக் கொள்ளலாம்.

**20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்**

# அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1. பிறவுண் வீதி, நாவலர் வீதி, சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் விபத்துக்கள் 27 சதவீதத்தால் குறைவடைவு

*பொலிஸ் புள்ளி விவரங்கள் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் வீதி விபத்துக்கள் 2015 ஆண்டு 27 சதவீதத்தால் குறைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பகுதிகளில் இடம்பெற்ற 101 விபத்து சம்பவங்களில் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்திய போக்குவரத்து புள்ளிவிவரத் தகவல்க்ள் தெரிவிக்கின்றன.

பதிவாகியுள்ள புள்ளி விவரத்தகவலின் பிரகாரம் 21 பெரும் விபத்துக்களும், வாகனங்களுக்கு சிறியஅளவிலான சேதங்கள் ஏற்பட்ட 50 விபத்துக்களும் , பெரும் சேதங்கள் ஏற்பட்ட 17 விபத்துக்களும் நடந்துள்ளன.

2014ஆம் ஆண்டு 139 விபத்துக்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 18 சாவுவிளைவிக்கப்பட்ட திடீர் வாகனவிபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 41 பெரும் விபத்துக்களும், சிறிய சேதங்கள் விளைவிக்கப்பட்ட 51 விபத்துக்களும், 11 சாதாரண சிறு விபத்துக்களும் நடந்துள்ளன.

ஆயினும் 2014ஆம் ஆண்டு இடம்பெற்ற 139 வீதி விபத்துக்களில் கடந்த ஆண்டு 27 சதவீதம் விபத்துக்கள் குறைவடைந்துள்ளன என்று யாழ்ப்பாணம் பிராந்திய போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதிப்போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்தியமை மற்றும் மதுபோதை சாரத்தியம் என்பனவே விபத்துக்களுக்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை இந்த ஆண்டு வீதிவிபத்துக்கள் அற்ற யாழ்ப்பாணத்தை உருவாக்குவோம் என்ற கருப்பொருளில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வீதி விதிமுறைகளை மீறி, வாகனம் செலுத்துபவர்கள் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்கள் மீது பொலிஸார் அதிகூடிய கவனம் செலுத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-107)

## இளைஞருக்கு பச்சை மட்டைத் தாக்குதல்

இரவுவேளையில் வீதியில் நடமாடிய ஊர் இளைஞர்கள் இருவருக்கு இனந்தெரியாதோர் பச்சை மட்டையால் தாக்கியுள்ளனர். அதனால் மட்டைக் கருக்குகள்வெட்டிக் காயமடைந்த இருவரும் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மறவன்புலவில் இடம்பெற்றது.

இரவுவேளையில் வீடுகளுக்குச் செல்வதற்காக வீதியில் நடந்து சென்ற வேளையில் அங்கு மறைந்திருந்தவர்கள், திடீரென பனை மட்டைகளால் தாக்கினர் என்றும் பனை மட்டைக் கருக்குகள் தாக்கி இருவரும் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 09 . 1925

மறைவு 12 . 02 . 2011

**திருமதி லெட்சுமி தம்பிப்பிள்ளை**

திதி: நவமி

அம்மா! உன் இழப்பு எம்மனதில்
ஆறாத வடுக்களாய்........
செய்வழி ஏதும் தெரியாமல்
திகைத்து நிற்கின்றோம்
உன் நினைவிலே வாழ்கின்றோம்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

**குடும்பத்தினர்.**

---

## கண்ணீர் அஞ்சலி



கிளிநொச்சி கல்வி வலய பளைக் கோட்ட ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு.சு.சிவபாலன் அவர்களின்

பாசமிகு தாயார்


திருமதி **கனகமணி சுந்தரம்**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கோட்டக்கல்வி அலுவலர், அதிபர்கள்**
**பளைக் கோட்டம்** (சி.28718) (13.15)

---

## கண்ணீர் அஞ்சலி



எம்முடன் பணியாற்றும்ஜெகதீபனின்

அன்புத் தந்தை

**கந்தையா தங்கராஜா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மின்பொறியியலாளர்,
மின்அத்தியட்சகர் மற்றும் ஊழியர்கள்.
இலங்கை மின்சாரசபை - வாணிபம்
பழைய பூங்கா வீதி, கண்டுக்குளி.

---

## 11 ஆம் ஆண்டு நினைவுகள்



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும்
ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும்
கொண்ட

அமரர் சின்னத்துரை மகாலிங்கம்

(தொழில் நுட்பவியல் கல்லூரி முன்னாள் பிரதம எழுதுநர் கௌரவ செயலாளர், ஊழியர் ஐக்கிய நாணய சங்கம் கொக்குவில்)

மலர்வு 09.06.1949
உதிர்வு 18.01.2005

திதி: 18.01.2016

இன்பங்களும் புது உறவுகளும்
இல்லறம் நாடும் தருணத்தில்
இமைப்பொழுதில் தவிக்கவிட்டுச் சென்ற
உன் அன்பான வருகைக்காக என்றும்
காத்திருப்போம்......
என்றும் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

ஏழாலை மேற்கு.
ஏழாலை.

**குடும்பத்தினர்.**

---

## 13 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **தம்பு சிவபாக்கியன்**

18.01.2016

அன்னை மடியில் 12.01.1922

இறைவன் அடியில் 18.01.2003

தந்தையே
உங்கள் நிக்குச்சுப் பரிஷத்தில்
நாங்கள் சுவாலை விட்டெரிகின்றோம்
நீங்கள் எங்கள் " தீ " க்கு சொல்லிக் கொடுத்ததெல்லாம்
சுட்டெரிக்கவல்ல
சுடரிழந்து திரிகளை தீண்டி விடவே
உங்கள் ஆசை நிறைவேற்றி
அவனியில் நாமுள்ளவரை உங்கள்
நினைவைச் சுமப்போம்

200, செம்பொடிக்றோட்,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

---

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **கந்தையா ரகுநாதன்**

மலர்வு 01.08.1970

உதிர்வு 07.02.2014

திதி: 18.01.2016

பாசத்தின் உச்சியாக பண்பின் சிகரமாகி
குடும்பம் எனும் வீட்டை தாங்கி தூணாக நின்று
உன்னிலே எங்களைக் கண்ட உத்தமனே !
எங்களின் உயிர் காத்த மாமாவே !
காலங்கள் உருண்டாலும் கண்ணுக்குள் நிற்கும் மகிந்தனே
என்றும் எங்களுடன் நிறைந்திருக்கும் தெய்வமே
என்றும் எங்களின் சூரியனே ரகுவே !
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஐல.23, அணைக்கட்டு வீதி, (பண்ட் றோட்)
திருநகர் வடக்கு, கிளிநொச்சி.

**குடும்பத்தினர்.**

---

## அந்தியேட்டி அழைப்பு



**சித்திரம் செல்லையா**

பிறப்பு 17.12.1938

இறப்பு 19.12.2015

கடந்த 19.12.2015 சனிக்கிழமை இறைபதமடைந்த குடும்பத் தலைவி சித்திரம் செல்லையா அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (18.01.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் [illegible]

கந்தரோடை, மடத்தடி,
சுன்னாகம்.

(67744)(11.15)

**குடும்பத்தினர்.**

---

## ஓராண்டு நினைவலைகள்



அமரர்
**சற்குணராசா சுலக்சன்**

தோற்றம் 17.10.1997

மறைவு 30.01.2015

திதி: ஏகாதசி (19.01.2016)

இமை மூடித் திறப்பதற்குள்
ஓராண்டு சென்றதடா!
நினைக்கவே நெஞ்சம் வெடிக்குதடா!

பார்க்குழி வீதி,
தோணிக்கல், வவுனியா.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்லலும்



அன்னையின் மடியில்
12 . 06 . 1974

ஆண்டவன் அடியில்
21 . 11 . 2015

## அமரர் வில்வராஜா சுதாகர்

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்ததும் வைத்தியசாலைக்கும், வீட்டுக்கும் ஓடோடி வந்து பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும், ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் தொலைபேசி, முகநூல் மூலம் ஆறுதல் கூறியோருக்கும், இரங்கல் உரையாற்றி யோருக்கும், கண்ணீர் அஞ்சலி, துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும், பத்திரிகை, பதாதைகள் மற்றும் மலர் வளையங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் அவரின் இறுதிக்கிரியை நல்ல முறையில் நடைபெற உதவி புரிந்தவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அன்பு உள்ளங்களுக்கும் இதுவரை எம்முடன் தோள்கொடுத்துக் கொண்டிருக்கும் நட்புக்கள், உறவுகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த 21.11.2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வில்வராஜா சுதாகர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை **(19.01.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் லட்சுமி மண்டபத்தில்** (திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவ பீடத்துக்கும் இடையில்) நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தயவு செய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

திருநெல்வேலி. (67706)(11.17.18) குடும்பத்தினர்.

# அமரர் சின்னத்தம்பி சிவலிங்கம் (பிரபல இரண வைத்தியர்) அவர்களின் நூற்றாண்டு ஜனன தின நினைவலைகள்

தோற்றம்
14 . 01 . 1916



மறைவு
02 . 01 . 2000

அன்பு, பண்பு, பாசமதை ஒருங்கு சேர
அன்பு மனையாளின் பிரிவின் பின் தனியாளாய்
வேறுதுணை நாடாது தன் மக்கள் ஐவரையும் ஆணி
வேராய் நின்று சமுதாயத்தில் நல்ல அந்தஸ்தினை வழங்கியோன்
சுமை தாங்கியாய் வாழ்ந்த
எம் தந்தையின் அருமை பெருமைகளை
எம்முயிர் இவ்வையகத்தினுள் உள்ளவரை
மறவோம் மறவோம் மறவோமே.

(சி/28677)(11.15)

சிவலிங்கம் வைத்தியசாலை,
140/18, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

**சி.ஸ்ரீகாந்தன் குடும்பம் (யாழ்ப்பாணம்)**
**சி. ஸ்ரீதரன் குடும்பம் (சிலாபம்)**
**சி.ஸ்ரீரதன் குடும்பம் (நீர்கொழும்பு)**
**Dr.சி.ஸ்ரீஜீவகன் குடும்பம் (யாழ்ப்பாணம்)**
**ஸ்ரீஜீவரஞ்சினி பரராசசேகரன் (யாழ்ப்பாணம்)**
**மற்றும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
27.11.1951



மறைவு
28.01.2015

## அமரர் செல்லையா துரைராசா (J.P)

(ஓய்வுபெற்ற போதனா ஆசிரியர்
யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி)

தோற்றம்
27.10.1998



மறைவு
19.12.2014

## அமரர் துரைராசா தனுசன்

(மாணவன் யாழ். இந்துக்கல்லூரி - தரம் -11))

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் உங்கள் அன்பு முகங்கள்
எங்கள் நினைவுகளில் நின்று மறையவில்லை
நாள்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி,மாதங்கள் வருடமாகியும்
உங்கள் நினைவுத் துயரிலிருந்து மீண்டெழ முடியவில்லை எங்களால்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் பாதங்களைத் தரிசிக்கின்றோம்.

உங்கள் நீங்கா நினைவுகளுடன்
**வெடியரசன் வீதி, காரைநகர்.** **குடும்பத்தினர்.**

(67614) (13.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் திட்ட வீடுகளில் குடியமராதோரின் வீடுகளை கையகப்படுத்த நடவடிக்கை

## முல்லைத்தீவு பிரதேச செயலகம் முன்னெடுக்கிறது

முல்லைத்தீவு, ஜன.18
முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களின் ஊடாக வீட்டு வசதிகளைப் பெற்று, இது வரை அவற்றில் குடியமராது உள்ளவர்களின் வீடுகளைக் கையகப்படுத்துவதற்கான மூன்றாம் கட்ட சிவப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால், கள்ளப்பாடு, சிலாவத்தை, தீத்தக்கரை, கொக்குத்தொடுவாய் போன்ற பகுதிகளில் பல்வேறு திட்டங்களின் ஊடாகவும் வீட்டு வசதிகளைப் பெற்றவர்கள் நீண்டகாலமாக அவற்றில் குடியமராதுள்ளனர். அவர்களின் வீடுகளை கையகப்படுத்துவதற்கான மூன்றாம் கட்ட சிவப்பு அறிவித்தல்கள் தற்போது பிரதேச செயலகத்தால் ஒட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ள வீட்டின் உரிமையாளர்கள் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு உடனடியாக குடியமராத சந்தர்ப்பத்தில் வீட்டின் காணி அனுமதிப் பத்திரம் இரத்துச்செய்து காணி அற்ற குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

> “வீடுகளை கையகப்படுத்துவதற்கான மூன்றாம் கட்ட சிவப்பு அறிவித்தல்கள் தற்போது பிரதேச செயலகத்தால் ஒட்டப்பட்டுள்ளன.”

என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாவட்டத்தில் வசிக்கும் பலர் தற்போதும் வீட்டு வசதிகள் ஏதுமின்றி உள்ளனர். அவர்கள் தற்காலிக கொட்டில்களில் பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்க்கையை நடத்துகின்றனர். இந்த நிலையில் முன்னைய ஆட்சிக் காலத்தில் ஆட்சியாளர்களின் ஆதரவு குடும்பங்கள் பலர் பிற மாவட்டங்களில் வாழும் நிலையிலும் இவ்வாறு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டுகள் பல முன்வைக்கப்படுகின்றன. வீட்டுத் திட்டங்களைப் பெற்றவர்கள் பிற மாவட்டங்களில் வசிக்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தநிலையில் வீட்டுத் திட்டங்களின் ஊடாக வீடுகளைப் பெற்றும் அவற்றில் குடியமராதவர்களின் வீடுகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைக்கு குறித்த பிரதேச மக்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-101)



யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய பொங்கல் விழா சங்க வளாகத்தில் தலைவர் மு.ஜெ.சுஜிந்திரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பொங்கல் வழிபாடு மற்றும் சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெற்றன. பொங்கல் விழாவில் சங்க இயக்குநர் சபை உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் போன்றோர் கலந்து கொண்டனர். (ற-ஐ-17)

## வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் பலப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், ஜன.18
வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தை மேலும் பலப்படுத்தி அதன் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தொழிற்சங்கத்தின் தலைவர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வடக்கு மாகாணத்தின் கூட்டுறவுத் துறை சார்ந்த பணியாளர்களின் தேவைகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை சங்கம் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி பெற்றுக் கொடுக்கவுள்ளது.

இதற்கு முன்னோடியாக சங்கத்தை மேலும் பலப்படுத்தவும் கூடுதலான அங்கத்தவர்களை சங்கத்தில் இணைத்துக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சங்கத்தின் துரித செயற்பாடுகளின் காரணத்தால் தான் பணியாளர்களுக்கு முப்பது வீத சம்பள அதிகரிப்பைப்பெற்றுக்கொடுக்க முடிந்தது.

தற்போது அந்த முப்பது வீத சம்பள அதிகரிப்பு சம்பளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அதனைவிட பணியாளர்களுக்கான பதினைந்து வீதக் கொடுப்பனவை கூட சங்கங்கள் இலாபகரமாகச் செயற்படும் பட்சத்திலேயே வழங்கி வருகின்றன. அந்தக் கொடுப்பனவைச் சங்கங்கள் மாதாந்தம் பணியாளர்களுக்கு வழங்குவதற்கும், வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சருடனும் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவில் செயலாளருடனும் கலந்துரை யாடப்பட்டுள்ளது.

இவ்வாறு பணியாளர்கள் எதிர்நோக்கும் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப்பெற்றுக்கொடுக்க ஊழியர் தொழிற்சங்கம் தயாராகி வருகின்றது.

விரைவில் வடக்கில் உள்ள சகல கூட்டுறவுச்சங்கங்களின் ஊழியர் தொழிற் சங்கங்களை அழைத்துக் கலந்துரையாடப்படும்.

இயங்காமல் இருக்கும் கூட்டுறவு ஊழியர் சங்கத்தை மீள இயக்கி வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. பணியாளர்கள் இதற்கு முழுமையாக ஒத்துழைக்க வேண்டும் .என்றார். (ற-ஐ-17)

## சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டுப் போட்டிகள்

சாவகச்சேரி, ஜன.18
சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் எதிர்வரும் மார்ச் எட்டாம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சங்க உறுப்பினர்களிடையே கலாசாரப் போட்டிகளையும், விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது என்று சங்கச் செயலாளர் திருமதி ம.கீர்த்திநாதன் அறிவித்துள்ளார்.

கலாசாரப் போட்டிகளான கவிதை, கட்டுரை, பேச்சு, நடனம், பாடல் போன்ற போட்டிகளையும், குறுந்தூர ஓட்டம், கிடுகு பின்னுதல், தேங்காய் துருவுதல், மாலை கட்டுதல், பலூன் உடைத்தல், வினோத உடை போன்ற போட்டிகளும் நடைபெறவுள்ளன என்றும் அவற்றில் பங்கு பற்ற விண்ணப்பிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் 20 வயதுக்கு உட்பட்டோர், 20 வயதுக்கு மேற்பட்டோர் என இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன. போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் நடத்தி முடிக்கத் திட்டமிட்டுள்ளதால் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள சங்க அங்கத்தவர்கள் தமது விண்ணப்பங்களை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கான பரிசில்கள் மார்ச் எட்டாம் திகதி நடத்தப்படும். சர்வதேச மகளிர் தின நிகழ்வில் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

## தாலிக்கொடி அறுத்தவர்கள் இவர்கள் தகவல் வழங்குவோருக்குப் பணப் பரிசு

### இளவாலைப் பொலிஸார் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.18
இளவாலை வடலியடைப்பில் மோட்டார் சைக்கிளில் சென்று தாலிக் கொடியைக் கொள்ளையடித்தவர்கள் சி.சி.ரீ.வி கமராவில் பதிவாகியுள்ளனர்.



அவர்கள் பற்றிய தகவல்களைத் தருவோருக்குப் பெறுமதியான பணப்பரிசு வழங்கப்படும் என இளவாலைப் பொலிஸார் அறிவித்துள்ளனர். கொள்ளையில் ஈடுபட்டவர்கள் சி.சி.ரீ.வி.கமராவில் பதிவாகியுள்ள படத்தையும் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

சைக்கிளில் சென்ற இரண்டு பெண்களைத்தாக்கி, 4 லட்சம் ரூபா பெறுமதியான 7 பவுண் தாலிக்கொடி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அந்தக் கொள்ளையர்கள் அங்குள்ள சி.சி.ரீ.வி கமராவில் பதிவாகியுள்ளனர்.

அவர்கள் தலைக்கவசம் அணிந்திருப்பதால் அவர்களது அடையாளத்தை உறுதிப்படுத்த பொதுமக்களின் உதவியைப் பொலிஸார் கோரியுள்ளனர்.

NP-BCK 1879 என்ற இலக்கம் கொண்ட மோட்டார் சைக்கிளிலேயே கொள்ளையர்கள் உபயோகித்துள்ளனர். ஆயினும் அந்த இலக்கம் போலியானதென்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



நகையை பறிகொடுத்த பெண்கள், ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தியுள்ளனர். அந்த மோட்டார் சைக்கிளின் இலக்கம் மோட்டார் போக்கு வரத்து திணைக்களத்திடம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். அந்த மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடு போலியான முறையில் தயாரிக்கப்பட்டு, கொள்ளைச் சம்பவங்களுக்கு பயன்படுத்தி வருகின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இலக்கத்தைக் கொண்ட மோட்டார் சைக்கிளை கண்ட யாராவதும் இது தொடர்பில் அச்சமின்றி பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கமான 021 221 1922 அல்லது பொறுப்பதிகாரியின் தொலைபேசி இலக்கமான 0777553 150 என்ற இலக்கத்துக்குத் தெரிவிக்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலையும் ஆனைக்கோட்டை மற்றும் மானிப்பாயில் இதே பாணியில் ஈடுபட்டு சங்கிலிகள் கொள்ளையடிக்கப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களில் ஒருவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ற-ஐ-4,107)

### தேசிய கல்வியியற் கல்லூரியில் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.18
தேசிய கல்வியியற் கல்லூரி யின் பொங்கல்விழா நிகழ் வுகள் எதிர்வரும் 21 ஆம்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிர தம விருந்தினராக கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த. குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளையும் கலந்து கொள்வர். (ஐ-ரி5)

### சிகை அலங்கரிப்பு நிலையம் தீக்கரை

சாவகச்சேரி, ஜன.18
நாவற்குழி சந்தியில் இருந்த சிகை அலங்கரிப்பு நிலையம் கடந்த வியாழக்கிழமை இரவு விசமிகளால் தீக்கரையாக் கப்பட்டுள்ளது. அங்கிருந்த அனைத்து உபகரணங்களும் எரிந்து சாம்பராகின.

தைப்பொங்கல் அன்று பொங்கல் வழிபாடுகளை முடித்துக்கொண்டு கடையைத்திறப்பதற்காக சென்ற கடை உரிமையாளர் கடை தீக்கிரையாக்கப்பட்டதை அவதானித்துள்ளார்.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ற-ஐ-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 56 வைத்தியர்களே சேவை

## 123 வைத்தியர்கள் தேவை

முல்லைத்தீவு,ஜன.18
முல்லைத்தீவு மாவட்டத்தின் வைத்திய சேவைக்காக 123 வைத்தியர்கள் தேவையான சூழலில் தற்போது 56 வைத்தியர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர் என்று மாகாண சுகாதாரத் திணைக்களப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சுகாதார சேவையின் தேவை அதிகமாக உள்ள போதிலும், அங்கு உள்ள வைத்தியர்களின் வசதியானது, தேவையின் 45 வீதத்தைப் பூர்த்தி செய்யாத நிலையில் பெரும் நெருக்கடியின் மத்தியிலேயே வைத்தியர்கள் பணியாற்றுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், பல கிராமிய வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லாதுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாவட்டத்தின் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு 60 வைத்தியர்கள் தேவையாக உள்ளனர். ஆனால், தற்போது 28 வைத்தியர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர். மாவட்டத்தில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளுக்கு 63 வைத்தியர்கள் தேவைப்படும் நிலையில் 28 பேர் மட்டுமே கடமையில் உள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாஞ்சோலையில் அமைந்துள்ள மாவட்ட பொது வைத்தியசாலைகள் தவிர்ந்து, மாங்குளம், மல்லாவி, புதுக்குடியிருப்பு ஆகிய மூன்று ஆதார வைத்தியசாலைகளும், மூங்கிலாறு, தேவிபுரம், குமுழமுனை, உண்ணாப்புலவு, ஒட்டுசுட்டான், நட்டாங்கண்டல்,

> “மாவட்டத்தில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளுக்கு 63 வைத்தியர்கள் தேவைப்படும் நிலையில் 28 பேர் மட்டுமே கடமையில் உள்ளனர்.”


ஐயங்கன்குளம், சம்பத்நுவர, கிரிபெத்வெல ஆகிய 9 கிராமிய வைத்தியசாலைகளுமாக மொத்தம் 13 வைத்தியசாலைகள் உள்ளன.

இதேவேளையில், கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மாவட்டத்தின் வைத்திய சேவைக்கு, மாவட்டம் முழுமையாக 123 வைத்தியர்கள் தேவைப்படுகின்ற நிலையில் தற்போது மாவட்டத்தில் 96 பேர் சேவையில் உள்ளனர். இதில் மாவட்ட பொது வைத்தியசாலையின் சேவைக்கு மட்டும் 60 வைத்தியர்கள் தேவையான போதிலும் 72 வைத்தியர்களே உள்ளனர்.

இதேவேளையில், ஏனைய கிராமிய வைத்தியசாலைகளின் சேவைக்காக 63 வைத்தியர்கள் தேவைப்படும் நிலையில் இங்கு 24 வைத்தியர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர். இதனால் கிராமிய வைத்தியசாலைகளில் அதிகரித்த வெற்றிடம் நிலவுகின்றது. குறிப்பாக வன்னேரியில் ஓர் கிராமிய வைத்தியசாலை உள்ள போதிலும் இன்று வரை வைத்தியர் எவரும் அற்ற நிலையே காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு பொது வைத்தியசாலையுடன் முழங்காவில் பிரதேசத்தில் ஒரு ஆதார வைத்தியசாலை, வன்னேரிக்குளம், அக்கராயன், வட்டக்கச்சி, கண்டாவளை, பூநகரி, ஜெயபுரம், உருத்திரபுரம், தருமபுரம் ,பளை ஆகிய ஒன்பது கிராமிய வைத்தியசாலைகளுடன் மொத்தம் 11 வைத்தியசாலைகள் மாவட்டத்தில் உள்ளன.

(ற-ஜ-101)



நெல் அறுவடை செய்யும் காலம் அண்மித்துள்ள நிலையில், சில இடங்களில் புதிர் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. பூநகரியில் புதிர் எடுக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ற-4)

## இனிய வாழ்வு இல்லத்தின் மாணவருக்கு அன்பளிப்பு



முல்லைத்தீவு,ஜன.18
வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இனிய வாழ்வு இல்ல மாணவர்களுக்கு 50 சூட்கேஸ்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இனிய வாழ்வு இல்லத்தின் நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால், இனிய வாழ்வு இல்லத்தைச் சேர்ந்த 50 சிறுவர்களுக்கு ரூ.65 ஆயிரம் பெறுமதியான 50 சூட்கேஸ்களை அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.அத்துடன்இல்லசிறார்களுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது. (ற-ஜ-86)

## அகில பாரத துறவியர் மாநாடு

யாழ்ப்பாணம், ஜன.18
தென் பாரதக் கும்பமேளா, கும்பகோணம் மகாமக விழாவும், அகில பாரதத்துறவியர் மாநாடும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 18 ஆம், 19ஆம், 20ஆம், திகதிகளில் தமிழ்நாடு, தஞ்சாவூர் மாவட்டம் காவிரி ஆற்றங் கரையில் நடைபெறவுள்ளன.

இந்த விழாவில் கலந்து கொள்வதால் புனிதத் தீர்த்தமாடும் காலம், அதனால் ஏற்படும் சாபவிமோசனம், துறவியர் தரிசனம், புனிதத்தன்மை என்பன பக்தர்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்களாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழாவின் இரண்டாம்நாள் மாலை துறவியர் அலங்கார அணிவகுப்பு மற்றும் மகாமகக் குளத்தில் விசேட வழிபாடும் நடைபெறும். எனவே இலங்கையிலிருந்து இந்த விழாவில் கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள், அகில இலங்கை இந்து மாமன்றத்திடம் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ற-ஜ-ரி5)



## புதிய அப்போஸ்தலிக்க பரிபாலகர் பேசாலை கிராமத்துக்குப் பயணம்

மன்னார், ஜன.18
மன்னார் மறைமாவட்டத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஓய்வுபெற்ற ஆயர் அதி வணக்கத்துக்குரிய ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் பேசாலை கிராமத்துக்குச் சென்று பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் முதல் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார்.

திருப்பலி நிறைவுற்ற நிலையில் அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஓய்வு பெற்ற ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய அருட்பணிப் பேரவை அங்கத்தவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பின் போது ஆன்மிகம், சமூகம் சார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அதில் பேசாலைப் பங்குத்தந்தை செபமாலை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்ரர் சோசை, வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.பிரிமூஸ் சிறாய்வா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ற-ஜ-56)



பட்டிப் பொங்கல் நேற்று பல இடங்களில் கொண்டாடப்பட்டது. முல்லைத்தீவு -கற்சிலைமடுவில் நேற்று முன் தினம் நடைபெற்ற பட்டிப் பொங்கல். (ற-500)

## வவுனியா செட்டிகுளம் பகுதியில் சிறியான் குரங்குகள் அட்டகாசம்

வவுனியா,ஜன.18
யானைகளின் அட்டகாசமாகக் காணப்பட்ட வவுனியா செட்டிகுளம் பகுதியில் தற்போது சிறியான் குரங்குகளின் அட்டகாசமும் அதிகரித்துள்ளது. அவற்றை கட்டுபடுத்துமாறும் செட்டிகுளம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற செட்டிக்குளம் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனனர்.

வவுனியா மாவட்டத்துக்குட்பட்ட செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் தற்போது அதிகரித்துள்ளது. இரவு வேளைகளில் கிராமங்களுக்குள் புகும் குறித்த யானைகள் வயல் காணிகள், தோட்ட காணிகள் மற்றும் மக்களு[illegible] வீடுகள் என்பவற்றை நாசம் செய்கின்றன. இது தொடர்பாக பல முறை வனவிலங்கு அதிகாரிகளிடம் அறிவித்திருந்த போதும் அதற்கான நடவடிக்கைகள் இது வரை எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. இந்த நிலையில் தற்போது சிறியான் குரங்குகளின் அட்டகாசங்களும் அதிகரித்துள்ளன.

குரங்குகளிலேயே வித்தியாசமான குறித்த குரங்கினங்கள் தற்போதுதான் செட்டிக்குளம் பகுதிக்குள் நுழைந்துள்ளன. இவை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் என அனைவரையும் சீண்டுகின்றன என்றும் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லும் போது அவர்களை பயமுறுத்துவதாகவும் இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் கடந்த ஆண்டில் 79 பேருக்கு வயிற்றோட்டம்

யாழ்ப்பாணம், ஜன.18
யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பிரதேசத்தில் கடந்த ஆண்டில் 79பேர்வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.
அதனை விட உண்ணிக் காய்ச்சலுக்கு 63 பேரும், கொப்பளிப்பான் நோய்க்கு 18 பேரும், உணவு நஞ்சாதலுக்கு நான்கு பேரும் இலக்காகி சிகிச்சை பெற்றுள்ளனர்.
கடுமையான வெப்பம் மற்றும் காலநிலை வேறுபாடுகளுக்கு இலக்காகியே கூடுதலான மக்கள் இந்த நோய்களின் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளனர்.
இதேவேளை– டெங்குத் தொற்றுக்கு 588 பேர் இலக்காகி சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.
அதனைவிட கடந்த டிசெம்பர் மாதத்தில் 166 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.
கடந்த மாதத்தில் பெய்த மழையைஅடுத்துநுளம்புப் பெருக்கம் அதிகரித்ததை அடுத்தே டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
நகரை அண்டிய கரையோரப் பகுதிகளிலேயே இந்த டெங்குத் தொற்று அதிகரித்துள்ளமை இனங் காணப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-ஜ-17)



## எம்.ஜி.ஆரின் பிறந்த தின நிகழ்வுகள் நேற்று யாழில்

யாழ்ப்பாணம், ஜன.18
தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் 99ஆவது பிறந்த தினம் தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டது.
யாழ்.கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு, எம்.ஜி.இராமச்சந்திரனின் ரசிகரான கோப்பாய் சுந்தரலிங்கம் மாலை அணிவித்து, தீபம் காட்டி அஞ்சலி செலுத்தி பிறந்த தினத்தைக் கொண்டாடினார்.
எம்.ஜி.இராமச்சந்திரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு தனது சொந்த நிதியில் வறியமக்கள், மாற்றுத் திறனாளிகள், பெண் தலை மைத்துவ குடும்பங்களைச் சேர்ந்த 75 பயனாளிகளுக்கு உடுபுடைவைகள், பணம் என்பவற்றையும் அவர் வழங்கினார்.
இந்த நிகழ்வில் கல்வியங்காடு வர்த்தக சங்க முன்னாள் தலைவர் ரவி மற்றும் வரத்தகர்கள், எம்.ஜி.ஆர் ரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ஜ)

## யாழ்.கேற்வே லயன்ஸ் கழகத்தால் மாணவருக்கு கற்றல் உபகரணம்



சாவகச்சேரி, ஜன.18
யாழ்ப்பாணம் கேற்வே லயன்ஸ் கழகத்தினர் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 80 மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர்.
வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் விடுத்த வேண்டுகோளை யடுத்து இந்த உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.
யாழ்.கேற்வே லயன்ஸ் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306பி1மாவட்ட ஆளுநர் லயன் கிறிஸ்ரி நாணயக்காரவும், சிறப்பு விருந்தினர்களாக நீர்கொழும்பு லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் தேவா பீற்றர் மற்றும் லயன் விக்னேஸ்வரன் ஆகியோரும்– யாழ். மாவட்ட லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ற-ஜ-9)



புத்தூர் இந்துக் கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிக்கும் கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். (ற)

## வலி.கிழக்கு மேட்டுநில வயல்களுக்கு கிணறுகள் மூலம் தண்ணீர் இறைப்பு

யாழ்ப்பாணம், ஜன.18
வலி.கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மேட்டு வயல்களில் மழை நீர் வற்றியதை அடுத்து விவசாயிகள் நெற்பயிர்களுக்கு தண்ணீரை இறைத்து வருகின்றனர்.
சிறுப்பிட்டி, புத்தூர் போன்ற பகுதிகளில் உள்ள மேட்டு வயல்களில் மழை நீர் திடீரென வற்றியுள்ளது.
அனேகமான வயல்களில் நெற்பயிர்கள் நெற்கதிர்கள் காயும் நிலையில் காணப்படுகின்றன. அதை அடுத்து வயல் களில் கிணறு வசதிகளுடைய விவசாயிகள் அதில் இருந்து மோட்டார் வசதியுடன் நீரை இறைத்து வருகின்றனர்.
பெரும்பாலும் அனேகமான விவசாயிகள் அடுத்த மாத முற்பகுதியில் நெல்லை அறுவடை செய்யவும் தயாராகியும் வருகின்றனர். (ற-ஜ-17)

# வல்வெட்டித்துறை உல்லாசக் கடற்கரையில் ரூ.75 லட்சம் செலவில் புதிய அணைக்கட்டு

கரணவாய், ஜன.18
வல்வெட்டித்துறை விக்னேஸ்வரா உல்லாசக் கடற்கரையில் சுமார் 75 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய அணைக்கட்டு வடமாகாண முதலமைச்சரால் கடந்த வெள்ளிக்கிழமை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.
வல்வெட்டித்துறை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையத்தால் தைப்பொங்கல் தினத்தில் நடத்திய



விசித்திர பட்டப் போட்டியும் அணைகட்டுத்திறப்புவிழாவும் நேற்றுமுன்தினம் விக்னேஸ்வரா உல்லாசக் கடற்கரையில் இடம்பெற்றன. நிலையத்தின் தலைவர் [illegible] தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அணைக்கட்டை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்ததோடு, அணைக் கட்டுக்கான பெயர்ப் பலகையையும் திரை நீக்கம் செய்துவைத்தார்.
இதில் வடமாகாண சபை உறுப்பனர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், திருமதி. அனந்தி சசிதரன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ஜ)

## சரஸ்வதி சிலை திறப்பு விழா

சாவகச்சேரி, ஜன.18
கச்சாய் அ.த.க.பாடசாலையில் தென்மராட்சி கல்வி வலய சைவ சமயபாட ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட 'சரஸ்வதி சிலை' இன்று பிற்பகல் 1.30 மணிக்குத் திறக்கப்படவுள்ளது.
தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சரஸ்வதி சிலையைத் திறக்கவுள்ளார்.
பாடசாலை அதிபர் காகுணசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்த மூர்த்தி, ஓய்வுநிலை சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய சைவ சமய பாட ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கம், கொடிகாமம் அருள் நாயகி வர்த்தக நிலைய முகாமையாளர் செல்லப்பா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஜ-9)

## மத்தியஸ்த சபையின் தபால் செலவுகளுக்கு ரூ.500 நிதி ஒதுக்கீடு

கொழும்பு, ஜன.18
இந்த வருடத்துக்கான மத்தியஸ்த சபையின் தபால் செலவுகளுக்கு ரூபா 500 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் செயலாளர் (பதில்) வாசனா – பீ. குணரத்ன அறிவித்துள்ளார்.
இந்த ஒதுக்கீட்டுத் தொகை மேலும் அதிகரிக்கப்பட வேண்டிய தேவை ஏற்படின் செலவுகள் அடங்கிய விவரங்களை உள்ளடக்கிய அறிக்கை, தவிசாளரினால் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
ஆனால் கடந்த காலங்களில் இந்த ஒதுக்கீடு இரண்டாயிரம் ரூபாவாகக் காணப்பட்டது. இந்த வருடம் தபால் செலவுகளை சிக்கனமாகப் பயன்படுத்தும் நோக்குடன் இந்த ஒதுக்கீடானது குறைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மறுசீரமைப்பை விரைவுபடுத்த கட்டளைச் சட்டம்

## நிறைவேற்றுவதற்குத் தீர்மானம்

கொழும்பு, ஜன.18

நல்லாட்சிக்கான தேசிய அரசின் பொருளாதார மறுசீரமைப்புச் செயற்பாட்டை விரைவுபடுத்தி முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக இந்த ஆண்டுக்குள் கட்டளைச் சட்டங்கள் பலவற்றைக்கொண்டுவருவதற்கு அரசு தீர்மானித்துள் ளது.

வேகமான அபிவிருத்தியொன்றை ஏற்படுத்துவதற்கு தற்போதுள்ள சட்டங்கள் பலமானவையாக இல்லாதிருப்பதால், காலம் கடந்துள்ள சட்டங்களை நீக்கிவிட்டுப் பலமான சட்டத் தொகுதியொன்று நிறுவப் படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அபிவிருத்திகளுக்கான விசேட விதிநியமங்களைக் கொண்டுள்ள சட்டமொன்றும் வர்த்தக மற்றும் முதலீடுகளுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் சட்டமொன்றும் விரைவில் முன்வைக்கப்படுமெனவும், இவை மூலமாக முதலீடுகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பும் அமையுமெனவும் குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ-22)

# ஊடகக் கண்காட்சியை நிறுத்தி குற்றவாளிகளைத் தண்டியுங்கள்

## ஜே.வி.பி. கோரிக்கை



கொழும்பு, ஜன.18

ஊடகக் கண்காட்சிகளை நடத்தாது குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள் ளது.

கடந்த அரச ஆட்சிக் காலத்தில் ஊழல் மோசடிகள் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பில், ஊடக கண்காட்சிகளை நடத்தாது, அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அரசை வலியுறுத்தும் நோக்கில் எதிர்வரும் வாரங்களில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது என்று ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு போதியளவு கால அவகாசம் இருந்தும் அரசு வெறுமனே ஊடகக் கண்காட்சிகளை நடத்துவதிலேயே ஆர்வம் காட்டி, அதற்குரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்க காலம் தாழ்த்தி வருகின்றது.

அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன, கடந்த அரச ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் பற்றி ஊடக சந்திப்புக்களில் கருத்து வெளியிடுகின்றாரே தவிர, குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதில்லை.

எனவே ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் எதிர்வரும் வாரங்களில் பல்வேறு வழிகளில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ)

# சிறுவர் பாதுகாப்புப் படையை உருவாக்க ஜனாதிபதி முடிவு



கொழும்பு, ஜன.18

சிறுவர் பாதுகாப்பு ஜனாதிபதி செயலணிப் படையொன்றை நிறுவுவதற்கான அறிக்கையொன்றை முன்வைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். சிறார்களின் பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட சிக்கல்கள், சிறார்களின் அபிவிருத்திகள், சிறார்களின் போசாக்கு மற்றும் சுகாதாரம் சிறார்களை முன்னிட்டு ஏற்படுத்தப்பட வேண்டியுள்ள சட்ட மறுசீரமைப்புக்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன.

சிறார்களின் பாதுகாப்புத் தொடர்பாக . தற்போது நடைமுறையில் உள்ள செயற்றிட்டத்தை மேலும் பலப்படுத்தி, அது தொடர்பாக புதிய செயற்றிட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக ஜனாதிபதி இந்த உத்தரவை அதிகாரிகளுக்குப் பிறப்பித்துள்ளார். (ற-ஐ-22)

# மைத்திரி பங்கேற்றால் மட்டுமே கட்சிக் கூட்டத்தில் பங்கேற்போம்

## சு.க. அமைச்சர்கள் முடிவு

கொழும்பு, ஜன.18

எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்றால் மட்டுமே ஆளும் கட்சியின் கூட்டங்களில் பங்கேற்பது என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்காத ஆளும் கட்சியின் கூட்டங்களில் பங்கேற்கப் போவதில்லை என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற ஆளும் கட்சிக் கூட்டத்தின் போது, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்களை விமர்சனம் செய்திருந்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து ஜனாதிபதி பங்கேற்காத ஆளும் கட்சிக் கூட்டங்களில் அமைச்சர்கள் பங்கேற்கப் போவதில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது, இது குறித்து கடுமையான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சுதந்திரக் கட்சியின் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று குறித்த அமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (ற-ஐ)

# உலகின் மிகப்பெரிய நீலக்கல் தம்புள்ளவில் கண்டெடுப்பு



கொழும்பு, ஜன.18

தம்புள்ள, எலஹெர பிரதேசத்தில் மிகப் பெரிய நீலநிற மாணிக்கக்கல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நீலக்கல்லானது பேருவளை மாணிக்கக் கல் வியாபாரிக்கு கிடைத்துள்ளது.

இந்த நீல மாணிக்க கல்லானது 4 ஆயிரத்து 800 கரட் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இது 482 கிராம்களாகும். எனினும் அதன் பெறுமதி தொடர்பான சரியான விவரங்கள் இதுவரை வெளியிடப் படவில்லை.

இதற்கு முன்னர் அண்மையில் இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட மிகப்பெரிய நீலநிற மாணிக்கக்கல்லின் பெறுமதி 300 மில்லியன் டொலர்கள் என அதன் உரிமையாளர் அறிவித்திருந்தார். அந்த நீலநிற மாணிக்கக் கல் 1404. 49 கரட் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அதை விட அதிக தரமுடைய மற்றொரு நீலநிற மாணிக்கக் கல்லே இவ்வாறு தம்புள்ளை, எலஹெர பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (து-வ)

# கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் குவியும் விவாகரத்து வழக்குகள்

கொழும்பு, ஜன.18

கடந்த ஆண்டில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள விவாகரத்து வழக்குகளின் எண்ணிக்கை ஆயிரத்தையும் கடந்துள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆண்டொன்றில் ஆயிரத்துக்கு மேற்பட்ட விவாகரத்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவேயாகுமென கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் 1004 விவாகரத்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், 2014 ஆம் ஆண்டில் 998 விவாகரத்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டில் 876 விவாகரத்து வழக்குகளும், 2012 ஆம் ஆண்டில் 943 விவாகரத்து வழக்குகளும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

வெறுத்தொதுக்கி, கைவிட்டுச்செல்லல் என்ற குற்றச்சாட்டின் கீழேயே பெருமளவிலான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (ற-ஐ-22)



# கனகாம்பிகை அம்மன் கோயிலில் 96 பானைகளில் பொங்கல் விழா

கிளிநொச்சி கமக்கார அமைப்பினால் கிளிநொச்சி இரணைமடுக் குளம் நீர்ப்பாசனத்துக்குத் திறந்து விடப்பட்டு 96ஆவது ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டு நேற்று முன்தினம் கனகாம்பிகை அம்மன் கோயிலில் 96 பானைகளில் பொங்கல் விழா இடம்பெற்றது.

1901 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கிளிநொச்சி இரணைமடுக் குளம் 1920 ஆம் ஆண்டு விவசாயத் தேவைக்காக திறந்து விடப்பட்டது. இதன் 96 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டே நேற்றையதினம் இரணைமடுக் குளத்தின் கீழான 22 திட்டக்குழுக்கள் கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் 96 பானைகளில் பொங்கி ஆண்டு நிறைவு விழாவை சிறப்பித்தனர். இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், அரசியல் பிரமுகர் கள், இரணைமடுத் திட்டக்குழுக்கள், கிளிநொச்சி கமக்கார அமைப்புகளின் சம்மேளனச் செயலாளர் சிவமோகன், கமக்கார அமைப்பினர், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (து-21-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு



## திரு.விசுவலிங்கம் தனிநாயகம்

உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)

எமது கல்வி வலயத்தில் ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளராக கடமை உணர்வுடனும் பக்தி சிரத்தையுடனும் தமது பணியை செவ்வனே செய்து மொத்த

சேவைக்காலம் 38 வருடங்கள் நிறைவுடன் இன்று (18.01.2016) திங்கட்கிழமை அகவை அறுபதினைப் பூர்த்திசெய்து ஓய்வுபெற்றுச்செல்லும் திரு.விசுவலிங்கம் தனிநாயகம் அவர்களை ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்துடன் குதூகலமாகவும் சுகபலத்துடனும் வாழ இறைவனைப் பிரார்த்தித்து மனதார வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரி கழகம்,
வலயக்கல்வி அலுவலகம், தீவகம்,வேலணை.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




செல்வன்

## ஞானசோதி அல்பிரட் கனிஸ்ரஸ்

பொறியியல் தொழில்நுட்பம் 2A,B
சித்தி பெற்று
*யாழ். மாவட்டத்தில்*
*6ஆவது இடத்தையும்*
***இலங்கையில் 21ஆவது இடத்தையும்***
*பெற்று சித்தி எய்திய*
எங்கள் மைந்தனை உளமார
வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**சித்தப்பா(அருள்நேசன்), சித்தி(நீற்ரா), தம்பி(வெபர்), தங்கை (பெயாறினா)**

# சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்






**18.01.2016**

## விசுவலிங்கம் தனிநாயகம் (SLTS - I)

(உதவிக்கல்விப் பணிப்பாளர் - ஆரம்பக்கல்வி, தீவகவலயம்)

ஆரம்பக்கல்வி - யா/நயினாதீவு ஸ்ரீகணேஷ கனிஷ்ர வித்தியாலயம்
உயர்கல்வி - யா/ நயினாதீவு மகாவித்தியாலயம்

### சேவை விவரம்

ஆசிரியர் - காலி /தலங்கா அ.த.க. பாடசாலை 18.07.77 - 31.07.79
ஆசிரியர் பயிற்சி - கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை 01.08.79 - 31.12.81
ஆசிரியர் - தி/ இரணக்கேணி அ.த.க. பாடசாலை 01.01.82 -14.05.82
ஆசிரியர் - யா/அனலைதீவு தெற்கு, அ.த.க.பாடசாலை 15.05.82 - 31.12.88
ஆசிரியர் - யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம் 01.01.89 -22.06.99
ISA (ஆரம்பக்கல்வி) - வலயக்கல்வி அலுவலகம்,தீவகம் 23.06.99 -14.06.09
ADE (ஆரம்பக்கல்வி) - வலயக்கல்வி அலுவலகம்,தீவகம் 15.06.09 - 18.01.16

முப்பத்தெட்டு ஆண்டுகளாக கல்விச்சேவைதனை கண்ணியமாக ஆற்றி மணிவிழாக்காணும் எங்கள் அன்பு அப்பாவை நயினைத்தாயின் ஆசியுடன் நூற்றாண்டு காண வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்* : **குடும்பத்தினர்.**

**427, கோயில் வீதி, நல்லூர் (நயினாதீவு - 5)**

(67749) (13.15)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகமும், கலாசார பேரவையும் இணைந்து நடத்திய

2015 ஆம் ஆண்டிற்கான பாண்பாட்டு பெருவிழாவில் கலைஞர்கள் கௌரவிப்பில் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த தவில்வித்துவான்

## திரு. இராமமூர்த்தி முருகானந்தம்

அவர்களுக்கு

"கலைஞானச் சுடர்"

விருதினை பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்த யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு.நா.வேதநாயகன் வழங்கிக்கௌரவித்துள்ளார். கௌரவிக்கப்பட்ட எமது பரிபாலனசபை உறுப்பினரும் எமது ஆலய ஆஸ்தான தவில்வித்துவானுமாகிய திரு.இராமமூர்த்தி முருகானந்தம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**

**கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு**
**ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார்**
**(காளிகோயில்) கோயில் பரிபாலன சபையினர்.**

(67746) (13.15)

# சாதனையாளர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 20 மாணவர்களும் சித்தியடைந்ததுடன் 10 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிபெறத் தகுதிபெற்று பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெருமை தேடித் தந்துள்ளனர்.
இவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

Congratulations
Congratulations



| | |
|---|---|
| எ. அன்ரனற் ஜீவிதா | - 3A |
| லி. செபீனா லூர்த் | - 3A |
| றொ. றிபேக்கா | - 2A,B |
| அ.மேரி கசில்டா | - 2A,B |
| அ.சகானா | - 2A,C |
| மா.ஹெலஸ்ரிக்கா | - A 2B |
| எ.கமன்சி | - A, B,C |
| பி.ஆன் றெபேக்கா | - 2AC |
| டொ.யூலியா விவிலினி | - 2AC |
| அ.சுஜி | - 2AC |

Congratulations

## யா/சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலைச் சமூகமும், பழைய மாணவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பிரித்தானிய அமைச்சரின் கருத்து உறைக்க வேண்டும் இந்த அரசுக்கு

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்தவரான பிரித்தானிய அரசின் வெளியுறவு பொது நலவாய பணிமனையின் ராஜாங்க அமைச்சர் ஹியுகோ சுவயர் சில முக்கியமான விடயங்களை இலங்கை அரசுத்தலைவர்களுக்கு இடித்துக் கூறி விட்டுச் சென்றுள்ளார்.

முக்கியமாகக், கடந்த செம்ரெம்பரில் இலங்கை அரசு உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான பிரச்சினைகளில் ஒப்புக் கொண்டதற்கமைவாகத் தான் மேற்கொண்டுள்ள முன்னகர்வுகளில் நம்பகமானதும் குறிப்பிட்டுக் கூறக்கூடியதுமான சாதனைகளைப் புரிந்துள்ளமையை வரும் ஜூனில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் விளங்கப்படுத்தியாக வேண்டும் என்று தமது மூன்று நாள் பயணத்தை முடித்துக்கொண்டு புறப்படுமுன் அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

இலங்கைப் பயணத்தின்போது யாழ்ப்பாணத் துக்கும் வருகை தந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவுடன் தேசிய பொங்கல் நிகழ்விலும் கலந்து கொண்டுவிட்டு மாகாண முதலமைச்சர் உட்பட பல முக்கிய தரப்புகளுடன் மட்டுமன்றி கொழும்பிலும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முக்கிய அமைச்சர்களுடன் அவர் கலந்துரையாடியிருந்தார்.

ஜெனிவா தீர்மானம் நிறைவேறி சுமார் நான்கு மாதங்கள் கழிந்ததன் பின்னர் இலங்கை வந்திருந்தவரான பிரித்தானிய அமைச்சர் இங்கு ஏற்பட் டிருக்கக்கூடிய மாற்றங்கள் நல்லிணக்கச் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து அறிந்துகொண்டே சென்றுள்ளார் என்பது அவர் வெளியிட்டுள்ள கருத்துக்களில் இருந்து தெளிவாகின்றது.

தான் ஒப்புக்கொண்ட கடப்பாடுகளை இலங்கை அரசு ஜூன் மாத வரையறைக்குள் நிறைவேற்றியிருக்க வேண்டும் என்பதில் மனித உரிமை ஆணையாளர் இளவரசர் செயித் றா்த் அல்-ஹூசைன் மிகக் கண்டிப்பாக உள்ளார். அண்மையில் அவருடன் நடத்திய உரையாடலின்போது இதை அறிந்து கொண்டேன் என்று பிரிட்டிஷ் அமைச்சர் கூறினார்.

ஜூனில் நடைபெறப்போகும் கூட்டமானது ஏதோ அலங்காரத்துக்காக நடைபெறும் வைபவமாக இருக்கமாட்டாது. நீண்ட காலத்துக்கான இந் தச் செயற்பாடுகள் முறையாக கையாளப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கை அரசு சிலபல விடயங்களில் முன்னேற்றம் கண்டிருப்பதைப் பாராட்டியுள்ள பிரிட்டிஷ் அமைச்சர், அரசு இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர் பண்டிகையான பொங்கலைத் தேசிய விழாவாகப் பிரகடனப்படுத்தியதுடன் யாழ்ப் பாணத்தில் நடந்த வைபவத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டமையும், தம்மைக் கொலை செய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டில் தண்டனை பெறவிருந்த முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினருக்கு மன்னிப்பு வழங்கி அவரைத் தம்கையால் ஜனாதிபதி வருடிவிட்ட சம்பவமும் தேசிய நல்லிணக்கம் நோக்கிய நல்ல சகுனங்களாக இருக்கலாம். ஆனால் இவையும் இவை போன்றவையும் தமிழ் மக்களை மீண்டும் ஒருமுறை ஏமாற்றமுற செய்பவையாக இருந்துவிடலாகாது என்பதே கவலை.

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்த வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை மீட்டெடுப்பதற்கான மனிதாபிமானப் போரை நடத்துவதாகக் கூறிக்கொண்டு ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்றும், அங்கவீனர்களாக்கியும், பிள்ளைகளை இழந்த பெற்றோர், பெற்றோரை இழந்த பிள்ளைகள் மற் றும் கணவன்மாரை இழந்த கைம்பெண்கள் என்று பெரும் எண்ணிக்கையானவர்களை உருவாக்கி நிலைகுலையச் செய்த முன்னைய ஆட்சியாளரின் கொடூரத் தன்மையை உலகறியச் செய்து அவைகளுக்குக் காரணமாய் இருந்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் இழப்பீடும் கிடைக்கச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இன்றைய சிறிசேன-ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி இருக்கின்றது. அந்த வகையிலான செயன்முறைகளை உடனடியாகவே ஆரம்பிக்க வேண்டும் என்பதைத்தான் பிரித்தானிய அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெனிவா தீர்மானம் "காரம்" குறைக்கப்பட்ட நிலையில் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் அதன் முதல் முன்வடிவுக்கான கடும் ஆலோசனைகளை விதந்துரைத்திருந்தவர் மனித உரிமை ஆணையாளர் செயித். எனவே அவரது வருகை இலங்கையில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுப் போவதாக இருக்காது. தீர்மானம் நிறைவேறியதன் பின்னரான முன்னேற்றங்களை அவதானிப்பதாகவே அவரது வருகை இருக்கும் என்று கூறத்தேவையில்லை.

கலப்பு நீதிமன்றம் என்ற தீர்மான வாசகம் இப்போது உள்ளக பொறிமுறையென்று வியாக்கியானம் செய்யப்படுகின்றது. விசாரணைப் பொறிமுறை எவ்வாறு அமைந்தாலும் அதில் சர்வதேசத்தின் பங்களிப்பு இருக்கவே செய்யும். இல்லை என்றாலும் தொடர்பு இல்லாமல் போகாது. ஆணையாளரின் வருகைக்கு முன்னரே பொறுப்புக் கூறும் பொறிமுறை அமைப்பதற்கான செயற்பாடுகள் முடிவுறுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

புதிய அரசமைப்புத் தொடர்பில் அரசு மக்களின் கருத்தறியும் நடவடிக்கை எடுத்திருந்தாலும் அரசுத் தரப்பில் அதன் நிலைப்பாடு என்னவென்பது இன்னமும் வெளிப்படாமல் இருப்பது குழப்பமாகவே உள்ளது.



# பொங்கல் விழாவில் இரண்டு உண்மைகள்

வந்தியத்தேவர்

யாழ்ப்பாணத்தில் தேசிய பொங்கல் விழா இடம் பெற்றுள்ளது. பாதுகாப்பு வலயத்துள் ராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் உட்பட வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளு மன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா போன்று பல முக்கி யஸ்தர்கள் கலந்துகொண்டனர். நிகழ்வில் கலந்துகொள்ள இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறுதி நேரத்தில் சமுகமளிக்காது விலகிக் கொண்டார்.

### இரண்டு உண்மைகள்

இந்த தேசிய பொங்கல் விழா இரண்டு உண்மைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளது. காணாமற்போன தமது உறவுகளைத் தேடி அலைந்து விசாரணைக்குழுக்கள் முன் அழுது கதறி எப்படியாவது அவர்களைத் தம்மிடம் மீள ஒப்படைக்கும்படி கோரிக்கை விடுத்த உறவினர்கள் இதுவரைகாலமும் ஆட்சியில் உள்ளவர்களால் ஏமாற்றப்பட்டு வந்தனர் என்ற உண்மை தெரிய வந்துள்ளது. காணாமற்போனவர்கள் உயிரிழந்துவிட்டனர் என்ற உண்மையைப் பிரதமர் ரணில் யாழ்ப்பாணத்தில் போட்டு உடைத்துவிட்டார். காணாமற்போனவர்கள் குறித்து மரணச் சான்றிதழ் வழங்க அரச தரப்பு ஏற்கனவே தயாராகி இருந்தது. இதனால்தான்போலும் விசாரணை என்ற பெயரில் மக்களை வீணாக அலைந்திருக்கிறார்கள். அரசு தமிழ் மக்களை ஏமாற்ற எவ்வாறெல்லாம் நாடகமாடியுள்ளது என்பதை பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சரும் புரிந்து கொண்டிருப்பார்.

காணாமற்போனோரின் கதி இவ்வாறெனில் இடம்பெயர்ந்து எங்கோ ஒரு மூலையில் முகாம்களில் முடங்கிப்போய் எல்லாவற்றுக்குமே அடுத்தவரிடம் கையேந்த நிலைக்குத் தள்ளப்பட்ட வலி. வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தையும் இராணுவத்தின் துணையுடன் அரசு திட்டமிட்டே அழித்துள்ளது என்பதை அங்கு சென்ற மக்கள் நேரடியாகவே காணமுடிந்தது. விவசாயத்தின் மூலமே தமது வாழ்வின் வசதி

> காணாமற் போனவர்கள் உயிரிழந்துவிட்டனர் என்ற உண்மையைப் பிரதமர் ரணில் யாழ்ப் பாணத்தில் போட்டு உடைத்து விட்டார். காணாமற்போனவர்கள் குறித்து மரணச்சான்றிதழ் வழங்க அரச தரப்பு ஏற்கனவே தயாராகி இருந்தது.

களை மேம்படுத்திக் கொண்டிருந்த வலி.வடக்கு மக்கள் கடந்த முப்பது வருடங்களாக தமது சொந்த நிலங்களை இழந்து அவஸ்தைப்பட்டுக் கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் அவற்றையெல்லாம் தமதாக்கி விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து கணிசமான வருமானத்தைப்பெற்று கூடவே, அரச சம்பளத்துடன் கூடிய வளமான வாழ்க்கையின் செழிப்பில் மிதக்கிறார்கள். வளமான பூமியைப் பறித்தெடுத்து விட்டு வறண்டு கிடக்கும் தரிசு நிலங்களில் அவர்களைத் தவிக்க விட்டுள்ளனர். இராணுவம் பிடித்து வைத்துள்ள அந்த வளமான பூமியில் வாழைகள், சோளன், கரும்பு, பயறு உட்பட மரக்கறி வகைகள் செழித்து வளர்ந்து இளம் காற்றில் ஆடிக் கொண்டிருக்க, அடுத்த நேர உணவுக்காக வாடிக்கொண்டிருக்கும் அந்த மக்களுக்கு இந்த தேசிய பொங்கல் விழாவில் கிடைக்கப் போவது என்ன?

தமிழர்களின் குறிப்பாக உழவர்களின் நாள் என்று போற்றப்படும் பாரம்பரியம் மிக்க பொங்கல் நாள், இடம்பெயர்ந்து வாழுகின்ற மக்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை.

### இடம்பெயர்ந்தவர்களின் துயரம் களையப்பட வேண்டும்

நிலைமை இவ்வாறு இருக்க பண்டுவஸ்நுவரையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஏரைப்பிடித்தது போல பலாலியில் ரணிலும் இதர பிரமுகர்களும் பொங்கல் விழா நடத்துவதற்குக் கூடினால் அது உழவர் நாளாகி விடுமா? தங்கள் நிலங்களை விடுவிக்குமாறு கோரி அவர்கள் முன்னெடுத்துவரும் போராட்டங்களுக்கும், கோரிக்கைகளுக்கும் மதிப்பளித்து அந்த மக்கள் அனுபவிக்கும் துன்ப, துயரங்களில் இருந்து மீள்வதற்கான வழி வகைகளை அரசு தாமதம் இன்றி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

உழைப்பாளிகளின் உடைமைகளையும் உரிமைகளையும் பறித்து அகதிகளாக அலையவிட்டு நிவாரணத்துக்குக் காத்துக்கிடக்கும் ஜீவன்களாக அவர்களை மாற்ற அரசும் படையினரும் கூட்டிணைந்தால் அது இந்த நாட்டின் ஆரோக்கியத்துக்கு ஏற்றதல்ல.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்

# நிலைப்பாட்டை மாற்றுவாரா விக்கி?

வடக்கு-கிழக்கு தமிழர்களின் நீண்ட காலப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற உண்மையை முன்னைய ஆட்சியாளர்கள் உதட்டளவில் ஏற்றுக் கொண்டார்களே தவிர, அவற்றைத் தீர்ப்பதற்காக உணர்வுபூர்வமான நடவடிக்கைகள் எடுத்த வரலாறு கிடையாது.

போர் முடிந்தால் தமிழர்களின் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிடும் என்ற நிலைப்பாட்டில் செயற்பட்ட அரசியல் தலைவர்கள்தான் அதிகம். அந்தப் போர் தான் தமிழர்களின் பிரச்சினைகளுக்குக் காரணமாக இருந்ததாக அவர்கள் கருதினார்கள். பிரச்சினைக்கான தீர்வைத் தேடித் தான் அந்தப் போர் உருவானது என்ற உண்மையை அவர்கள் ஏற்க மறுத்தனர்.

**உச்சக்கட்டத்தில் தமிழர் பிரச்சினை**

போர் 2009 இல் முடித்து வைக்கப்பட்ட போது தமிழர்களின் பிரச்சினைகள் உச்சத்தில் இருந்தன. இடம்பெயர்வு, காணிகள் இழப்பு, தொழில் இழப்பு, காணாமல் ஆக்கப்பட்டமை என எண்ணற்ற பிரச்சினைகளைத் தமிழர்கள் போரின் முடிவில் சுமந்து நின்றனர்.


போர் முடிந்து 5 வருடங்களுக்கு மேல் மகிந்த இந்த நாட்டை ஆட்சி செய்தார். இந்த 5 வருடங்களுக்குள் அவர் தமிழரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு குறிப்பிடத்தக்க வகையில் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில்தான், மகிந்தவின் ஆட்சி கவிழ்ந்தது. போர் முடிந்து 5 வருடங்களாக அவரால் செய்ய முடியாததை புதிய அரசு வெறும் ஒரு வருடத்துக்குள் செய்துள்ளமை தமிழர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் விடயமாகும்.

காணிகள் விடுவிப்பு, சில அரசியல் கைதிகள் விடுவிப்பு என பல பிரச்சினைகளை இந்த அரசு தீர்த்து வருகின்றது. மகிந்த அரசுடன் ஒப்பிடுகையில் இது மிக வேகமான நகர்வாகும். இருந்தும், இது போதாது எனச் சில கடும்போக்குவாதிகள் குற்றஞ்சாட்டுகின்றமைதான் கவலைக்குரிய விடயம். ஆனால், 30 வருடப் பிரச்சினைகளை வெறும் ஒரு வருடத்துக்குள் தீர்க்க முடியாது என்ற உண்மையை ஏனோ அவர்கள் ஏற்க மறுக்கின்றனர்.

**இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசு தீவிரம்**

இந்த நாட்டில் இனி இனப் பிரச்சினை



என்ற ஒன்று இருக்கக்கூடாது என்ற நோக்கில் இந்த அரசு செயற்பட்டு வருவதை அவதானிக்கலாம். தமிழருடன் தொடர்புபட்ட அனைத்து விடயங்களுடனும் கைகோர்த்துக் கொண்டு- அவர்களுடன் இணைந்து நின்று அவர்களுக்கு இந்த அரசு நம்பிக்கை ஊட்டி வருவதையும் அவதானிக்கலாம்.

அந்த வகையில், யாழில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேசிய பொங்கல் நிகழ்வில் கலந்துகொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழரின் ஒட்டுமொத்த பிரச்சினைகளும் விரைவில் தீர்க்கப்படும் என வாக்குறுதி அளித்து மீண்டும் நம்பிக்கையூட்டியுள்ளார்.

அதிகாரம் பகிரப்படும், தமிழர்களின் பறிபோன 4,500 ஏக்கர் நிலம் விரைவில் விடுவிக்கப்படும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும், கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும், வடக்குக்கு தமிழ் மொழிமூலம் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பல வாக்குறுதிகளை பிரதமர் அந்த நிகழ்வில் வழங்கி இருந்தார்.

மேற்படி பிரச்சினைகள் தொடர்பில் தீர்வை வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று கூறி, இந்த அரசுடனும் தமிழ் தேசியக் கூட்டமைப்புடனும் முரண்பட்டுக் கொண்டு நிற்கும் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனையும் அருகில் வைத்துக் கொண்டுதான் பிரதமர் இந்த வாக்குறுதிகளை வழங்கினார். இந்த உறுதிமொழியை ஏற்று வடக்கு முதலமைச்சர் இனியாவது அவரது நிலைப்பாட்டை மாற்றுவாரா, இந்த அரசுடனும் கூட்டமைப்புடனும் இனியாவது இணைந்து செயற்படுவாரா அல்லது ஒரே இரவில் இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் அவர் தொடர்ந்தும் இருப்பாரா என்ற கேள்வி இப்போது தமிழர் தரப்பில் எழுப்பப்படுகின்றது.

**இணக்கப்பாட்டு அரசியலில் கூட்டமைப்பு**

கடும்போக்கு அரசியலைக் கைவிட்டு இணக்கப்பாட்டு அரசியல் மூலம் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்தல் என்ற நடைமுறைச் சாத்தியமான நிலைப்பாட்டை தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுத்தபோதிலும், அந்த நிலைப்பாட்டுடன் வடக்கு முதலமைச்சர் உடன்படாது அவர் தொடர்ந்தும் கடும்போக்கு-முரண்பாட்டு அரசியலை நடத்தி வருவதை நாம் அறிவோம்.

வடக்கு முதலமைச்சர் சில கடும் போக்கு வாதிகளுடன் சேர்ந்து கொண்டு எல்லாப்

> **வடக்கு முதலமைச்சர் சில கடும் போக்கு வாதிகளுடன் சேர்ந்து கொண்டு எல்லாப் பிரச்சினைகளும் ஒரே இரவில் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பது போன்ற நிலைப்பாட்டில் இருப்பது தமிழருக்கு எந்தவித நன்மைகளையும் கொண்டு வராது.**

பிரச்சினைகளும் ஒரே இரவில் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதுபோன்ற நிலைப்பாட்டில் உள்ளார். பிரதமர் அந்தப் பிரச்சினைகள் எவற்றையும் மறுக்கவில்லை. அந்தப் பிரச்சினைகள் அனைத்துக்கும் மிக விரைவில் தீர்வு முன்வைக்கப்படும் என உறுதியளித்தார்.

தேசிய பொங்கல் விழாவில் பிரதமர் வழங்கிய வாக்குறுதியை வடக்கு முதலமைச்சர் ஏற்றுக்கொண்டு தனது நிலைப்பாட்டை மாற்றுவாரா? அரசுடனும் தமிழ் தேசியக் கூட்டமைப்புடனும் இணைந்து செயற்படுவாரா? என்ற கேள்விகள் இப்போது தமிழர்கள் தரப்பில் முன்வைக்கப்படுகின்றன. இவற்றுக்கு முதலமைச்சரின் பதில் என்ன?

## தனியார் கல்வி நிலையமும் பெற்றோர் படும் பாடும்

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான் பாடக் கற்கைநெறிகள் நடைபெறுகின்ற பிரபலமான தனியார் கல்வி நிறுவனம் அது. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தக் கல்வி நிலையத்தில் ஏ.எல் - 2017 பிரிவில் மட்டும் ஆயிரக் கணக்கான மாணவ, மாணவிகள் பயிலுகின்றனர். இந்தப் பிரிவில் வகுப்புகள் தினமும் நிறைவடைய வேண்டிய நேரம் மாலை 5.15 ஆகும்.

ஆனால் இதில் ஒழுங்கான நடைமுறை பின்பற்றப்படுவதில்லை. வகுப்புக்கு அரைமணிநேரம் பிந்தி வருகின்ற ஆசிரியர் அரைமணிநேரம் பிந்தி வகுப்பை நிறைவு செய்யும் நிலைமை கடந்த காலங்களில் நிகழ்ந்துள்ளது. இதனால் யாழ். மாவட்டத்தின் தொலை தூரப் பிரதேசங்களிலிருந்து வருகை தருகின்றனர். மாணவிகள் இருள் சூழ்ந்த வேளைகளில் அச்சத்துடன் பஸ்களைத்தேடி ஓடும் நிலை உள்ளது. உரிய பஸ்ஸைத் தவறவிட்டு விட்டால் அடுத்த பஸ்ஸுக்காக இரவு 8 மணி வரை கூட காத்திருக்க வேண்டிய அவலம். பெற்றோர்களின் மனநிலையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. எத்தனை அவசர தொலைபேசி அழைப்புகள்? எவ்வளவு அங்கலாய்ப்புகள்?

கடந்த புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு இரசாயனவியல் பாடத்தில் பரீட்சை நடைபெறும் என்பது அறிவித்தல். எனினும் மாலை 4.15 மணிக்கே வினாத்தாள்கள் வழங்கப்பட்டன. ஊழியர்களின் அசமந்தப் போக்கே இதற்குக் காரணம். இதனால் மாலை 6.15 மணிக்கே பரீட்சை நிறைவு பெற்றது. இதனால் பெண்பிள்ளைகள் வீடு போய்ச்சேர்வதில் பட்ட சிரமங்கள், பதற்றங்கள் சொல்லும் தரமன்று.

இரவு 8மணிவரை பயத்துடன் பஸ்ஸை எதிர்பார்த்துக் காத்து நின்ற பெற்றோர்களின் அங்கலாய்ப்புக்கள் கொஞ்சமல்ல இந்தக்கல்வி நிலையத்தில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும் பெண்பிள்ளைகள் இருக்கக்கூடும். இருப்பினும் காசே கதியாகச் செயற்படும் இவர்களுக்கு ஏனோ இந்தப் பிரச்சினை விளங்குவதில்லை. எனவே சம்பந்தப்பட்ட நிறுவனங்களாவது இதில் அக்கறை கொண்டு வகுப்புகள் நிறைவடையும் நேரத்தை சீர் செய்ய வேண்டும் என்பதே பெற்றோரின் வேண்டுகோள் ஆகும்.

இ.தயாளன், கேணியடி குப்பிளான்.

## சமூகப் பொறுப்புள்ள வசனங்கள்

2016 இல் சபதமெடுப்போம் என்ற தலையங்கத்தின் கீழ் சங்கர் மாமா எழுதிய வாசகர் திருமுகம் எனது மனதை மிகவும் தொட்டுவிட்டது. இவர்களைப்போன்ற சிலர் இருப்பதால்தான் எமது நாட்டில் மழை கூடப் பெய்கிறது.

தானுண்டு தனது வேலை உண்டு என்று எத்தனையோ அறிஞர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் வேளை இது. ஆடம்பரம் வீண் செலவு பகட்டு பண்பாட்டுத்திரிபுகளுக்கு அப்பால் சில தூரம் தள்ளி நின்று உண்மையை உறைப்பாக எழுதி இவர் எனது மனதில் ஒரு பெரும் இடத்தைப்பிடித்துவிட்டார். சரசாலை சங்கர் பற்றி எனக்கு மிக இளமையில் இருந்தே தெரியும். அவர் நாமம் என்றும் வாழும். உதயன் இவர்களது திருமுகங்கள் ஆக்கங்களுக்கு மதிப்பளிக்க முன்வந்தமை பாராட்டுக்குரியது. செய்திகளை இரத்தினச்சுருக்கமாக எழுதும் இருங்கலையை உதயன் எப்போதோ கற்று விட்டான். ஆனால் குறை காண வேண்டும் என்றே கருதி இன்னும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்டங்கள் மிகச் சிறிய காலத்துக்கு மட்டும்தான். கெட்டிக்காரன் புழுகு எட்டுநாளைக்கென்னும் பழமொழிதான் எனது ஞாபகத்துக்கு வருகிறது.

சாவகச்சேரி யூரான்

## உதயனின் பல்சுவைப் பக்கச் சிறப்பு

தங்களது உதயனில் தினமும் வெளியிடப்படும் பல்சுவை பக்கத்தில் வரும் விடயங்கள் குடும்பப் பெண்களான என் போன்றவர்களுக்கும், ஏனையோருக்கும் மிகுந்த பயன் தருவதாகவும், பேருதவியாகவும் உள்ளன. வீட்டுத் தளபாடங்களைப் பராமரிப்பது, குளிர்சாதனப் பெட்டி, சமையலறை உபகரணங்கள், சாதனங்களை உபயோகிப்பது, மாபிள் மற்றும் உடைகளில் ஏற்படும் கறைகளைப் போக்குவது, சமையல் பாகங்கள் பற்றிய தகவல்கள், தரை விரிப்புக்களைப் பயன்படுத்துவது, மீன்தொட்டியைப் பராமரிப்பது, அறைக்குள் அழகுச் செடிகளை வளர்ப்பது, கண்ணாடிகளைச் சுத்தம் செய்வது என இப்படியாகப் பல்வேறு வகைசார் பயன்தரு குறிப்புக்கள் தங்கள் உதயனில் வெளிவருவது வரவேற்கத்தக்கதாகும்.


அண்மைக்காலமாக நாளொரு மெருகுடன் உதயன் நாளிதழ் வாசகர் கரங்களில் மிளிர்கிறது. எமது வீடுகளில் சிறுவர், பெரியோர் வரை விரும்பிப் படிக்கும் வகையில் வெளிவரும் தங்கள் பத்திரிகையின் பல்சுவை பக்கத்துக்குத்தான் பெண்கள் மத்தியில் கூடுதல் வரவேற்பு இருப்பதையும், இதற் காகவேனும் நாளிதழை வாங்க வேண்டிய கட்டாயத்திலும் எம்போன்றவர்கள் உள்ளோம். இதற்கான விலையையும் மனநிறைவுடனே கொடுக்கிறோம். இதற்கு மேலான பயனையும் பெறுகிறோம். மேன்மேலும் பல சிறப்பம்சங்களுடன் வெளிவர வேண்டி எதிர் பார்த்து நிற்கிறோம்.

திருமதி லிங்கேஸ்வரி கெங்காதரன்
டச்சு வீதி, சித்தங்கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுபான்மையினரை அமெரிக்கா பாதுகாக்கும்

வொஷிங்டன்,ஜன.18
'உலகம் முழுவதிலும் உள்ள சிறுபான்மை மதத்தவரை அமெரிக்கா பாதுகாக்கும்' என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.
உலக மத சுதந்திர தினத்தை முன்னிட்டு ஒபாமா இதனைத் தெரிவித்துள்ளார்.
மத சுதந்திரத்தை அனைவரும் அனுபவிக்க வேண்டும் என்ற அர்ப்பணிப்புடன் அமெரிக்கா செயற்பட்டு வருகிறது. இதனை அமெரிக்காவின் சுய செயற்பாடு எனக் கூறமுடியாது. தலைமுறைகள் கடந்து, மத சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும் எனும் கொள்கை அர்ப்பணிப்பு எல்லோருக்கும் இருக்க வேண்டும்.
வழிபாட்டுத் தலங்கள், குழந்தைகள், பெரியவர்கள் என மத நம்பிக்கை கொண்ட பல தரப்புக்களுக்கும் அச்சுறுத்தல், வன்முறை என சமீப காலமாகப் பாதிப்பு ஏற்பட்டு வரும் இவ்வேளையில், மதச்சுதந்திரத்தைப் பாதுகாக்கும் கடமையை நிறுவேற்றுவது கடினமானது.
உலகளவில் எல்லாத் தரப்பினரும் மத சுதந்திரத்தை அனுபவவிக்க வேண்டும் எனும் குறிக்கோளுடன் எனது நிர்வாகம் செயற்பட்டு வருகிறது.
சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறையைக் கட்டவிழ்த்து விடுபவர்கள், துன்புறுத்துபவர்களுக்கு எதிராக பல தரப்புக்களின் விரிவான ஒத்துழைப்புடன் நாங்கள் செயலாற்றி வருகிறோம். பாதிப்புக்களில் இருந்து தற்காத்துக் கொள்வது பற்றி சிறுபான்மை மதங்களின் தலைவர்கள், மக்கள் தலைவர்கள் ஆகியோருக்கு ஆலோசனை மேற்கொண்டு வருகிறோம். இதே முயற்சியைக் கடைபிடித்து, மத சுதந்திரம் உலகளாவிய அளவில் நிலைத்து நீடிக்க உலக நாடுகளும் முன்வர வேண்டும். அச்சுறுத்தல் இன்றி தங்களுக்குப் பிடித்த மத நம்பிக்கையுடன் வாழ எல்லாக் குடிமக்களுக்கும் அடிப்படை உரிமை உள்ளது.
மதவெறி காரணமாக கொலையில் ஈடுபடுபவர்கள், சிறுபான்மையினருக்கு அரசியல் காழ்ப்புணர்ச்சி, ஆதாயம் அளிக்க மறுப்பவர்கள் ஆகியோர் இனி ஓரங்கட்டப்பட வேண்டும். எந்தத் தாக்குதலையும் குறிப்பிட்ட மதத்தின் மீதான தாக்குதலாகப் பேதம் கருதாமல், எல்லா மதங்களின் மீதான தாக்குதலாகக் கருதி, எல்லோருக்கு மத சுதந்திரம் கிடைக்க ஒரே தேசம் என்ற குடையின் கீழ் எல்லோரும் அணிதிரள வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)





## ஹோட்டலில் தாக்குதல்
## 28 வெளிநாட்டவர்கள் சாவு

வாகடுகு, ஜன.18
ஆபிரிக்க நாடான பேர்கினா பெஸ்கோவில் அமைந்துள்ள ஆடம்பரக் ஹோட்டல் ஒன்றில் 4 ஜிகாதிப்போராளிகள் கடும் தாக்குதல் நடத்தியுள்ளனர். 15 மணிநேரங்கள் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் விடியவிடிய போராளிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் தாக்குதல் இடம்பெற்றது.
இந்தத் தாக்குதலில் ஹோட்டலில் தங்கியிருந்த 18 நாடுகளைச் சேர்ந்த 28 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர். அத்துடன் ஹோட்டலில் இருந்த 156 சுற்றுலாப்பயணிகள் மீட்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு அல்-குவைதா பொறுப்பேற்றுள்ளது. மீட்கப்பட்ட 156 பேரில் 33 பேர் இடம்பெற்ற தாக்குதலில் காயங்களுக்கு உள்ளானர்கள் என உள்துறை அமைச்சு தகவல் தெரிவித்துள்ளது. (ஐ-ரி4)

# ஒரே நாளி
# 135 பேர் சா



## தாய்வானில் முதல் முறையாக பெண்ணொருவர் ஜனாதிபதியாக

பீஜிங்,ஜன.18
தாய்வானில் முதல் முறையாக பெண் ஒருவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 59 வயதான சாய் இங்-வென் ஆளும் ஜனநாயகமுற்போக்குக் கட்சியைச் சார்ந்தவர். நடைபெற்ற தேர்தலில் இவர் வெற்றி பெற்றுள்ளார். குறித்த கட்சி சீனாவின் ஆதிக்கத்தை எதிர்ப்பதாகும்.
சாய்- இங் தனது வெற்றிப் பேச்சில் தெரிவிக்கும் போது: பீஜிங் தாய்வானுக்கு மதிப்பளிக்க வேண்டும். இரு பகுதியினரும் ஜனநாயகத்தை மதிப்பதுடன் ஆத்திரமூட்டும் செயற்பாடுகளைத்தவிர்க்க வேண்டும். மேலும் சீனாவின் அரசியல் பிரச்சினைகளில் தலையிடுவதாக உறுதி எடுக்கப்பட்டது.
தாய்வான் மக்கள் சீனாவுடன் அடிப்படை உறவைப் பேண விரும்புகின்றனர். எந்த வித ஆத்திரமூட்டும் செயற்பாடுகளிலும் ஈடுபடமாட்டோம் என உறுதியளிக்கிறோம். அத்துடன் தாய்வானில் நிலவும் நிலையான சமாதானத்துக்கு ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு நன்றியை தெரிவித்தார்.
தாய்வான், சீனா ஆகிய இரு நாடுகளுக்கு இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்புக்குப் பின்னர் இந்தத் தேர்தல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஈரான் மீதான பொருளாதாரத் தடை நீக்கம்

வொஷிங்டன், ஜன.18
ஐக்கிய நாடுகள் சபையின் கட்டுப்பாட்டை மீறிய வகையில் அணு ஆயுதங்களை வைத்திருப்பதாக ஈரான் மீது குற்றம் சாட்டிய அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஈரான் மீது பொருளாதார மற்றும் வர்த்தக தடையை விதித்தன. அந்தத் தடையை நீக்க வேண்டுமானால் சர்வதேச அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளை ஈரான் பின் பற்ற வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டது.

தன்வசமுள்ள அணு ஆயுதங்களையும், அணு தயாரிப்புத் திட்டங்களையும் அழிக்க முதலில் மறுத்த ஈரான், பின்னர் சர்வதேச நெருக்கடிக்குப் பணிந்தது. இதையடுத்து, அணு செறிவூட்டல் மற்றும் அணு ஆயுத தயாரிப்பை நிறுத்திக்கொள்வதாக ஈரான் அறிவித்தது.

இதையடுத்து, சர்வதேச அணு ஆயுத தடை முகாமையைச் சேர்ந்த அதிகாரிகள் சுமார் ஓராண்டு காலம் ஈரானில் முகாமிட்டு அங்குள்ள அணு உற்பத்தித் தொழிற்சாலைகளில் ஆய்வு நடத்தினார்கள். மின் உற்பத்தி உள்ளிட்ட ஆக்கப்பூர்வ பணிகளுக்காகச் செயற்பட்டுவரும் திட்டங்களைத் தவிர பிற அணு ஆயுத தொழிற்சாலைகள் மூடப்பட்டன.

இதையடுத்து, சர்வதேச அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் ஈரான் கையொப்பமிட்டது. அதில் உள்ள நிபந் தனைகளை எல்லாம் எதிர்காலத்தில் முழுமையாக பின்பற்றுவதாகவும் உறுதியளித்தது. இந்நிலையில், ஈரான் மீதான பொருளாதாரத் தடையை முழுமையாக நீக்கியுள்ளதாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இன்று அறிவித்துள்ளன.

எண்ணை வளத்தில் குறிப்பிடத்தக்க நாடாகத் திகழும் ஈரான் மீதான பொருளாதாரத் தடையை அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியனும் நீக்கியுள்ள நிலையில் சர்வதேச சந்தையில் ஏற்கனவே வரலாறு காணாத வீழ்ச்சியடைந்து பரல் ஒன்று 30 டொலர்களுக்கு விற்கப்படும் பெட்ரோல் விலை மேலும் சரியும் என கருதப்படுகிறது.

இதற்கிடையில், ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் புதிய உறவு பூத்தை உறுதிப்படுத்தும் வகையில் இருநாடுகளும் தங்களிடம் பிடிபட்டு சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளை பரஸ்பரம் விடுவிப்பதாக அறிவித்துள்ளன. (ஐ)



## ...ில் ...ாவு

மாஸ்கஸ், ஜன.18
சிரியாவில் அட்டூழியம் செய்து வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் டெய்ர் எஸர் நகரின் மீது நடத்திய கொலைவெறித் தாக்குதலில் 135 பேர் உயிரிழந்தனர்.

கிழக்கு சிரியாவில் உள்ள டெய்ர் எஸர் நகரைக் கைப்பற்றும் நோக்கத்தில் பீரங்கி வாகனங்களுடன் வந்த ஐ.எஸ். தீவிரவாதிகள், குண்டுகளை வீசியும், இயந்திரத் துப்பாக்கிகளால் சுட்டும் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் 85 பேரும், சிரியா ராணுவப்படை மற்றும் ஜனாதிபதியின் ஆதரவாளர் படைகளைச் சேர்ந்த 50 பேரும் என 135 பேர் உயிரிழந்துள்ளதாகவும், நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்ததாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தக் கோரக்காட்சியை நேரில் பார்த்த சிலர் சாவு எண்ணிக்கை இருநூறை எட்டியுள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். (ஐ)

## ஆண்களுக்கு குளிக்கத் தடை



பெர்லின், ஜன.18
ஜெர்மனியில் பொது நீச்சல் குளத்தில் ஆண் அகதிகள் குளிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

சிரியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து வெளியேறும் மக்கள் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைந்து வருகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் ஜெர்மனியில் தங்கியுள்ளனர்.

அவர்கள் கலோஜின் நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் முகாம்கள் அமைத்துத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது பெண்களைக் கேலி கிண்டல் செய்த விவகாரத்தில் அகதிகளுக்கு இடையே மோதலும் கலவரமும் ஏற்பட்டது.

இந்த நிலையில் கொலோஞ்ச் அருகேயுள்ள பார்ன்கெய்ம் நகரில் உள்ள பொது நீச்சல் குளத்தில் ஆண் அகதிகள் குளிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஒபாமாவின் அதிர்ஷ்ட கடவுள் அனுமான்

வொஷிங்டன், ஜன.18
அமெரிக்க ஜனாதிபதியான பராக் ஒபாமாவின் பதவிக்காலம் இந்த ஆண்டு இறுதியில் முடிவடைகிறது.

இதனை முன்னிட்டு அமெரிக்க நாடாளுமன்றத்தில்இறுதி உரை நிகழ்த்தியுள்ளார். அதன் போது தனது சட்டைப்பையில் இருந்து சில பொருள்களை வெளியே எடுத்துக் காட்டினார். அவற்றுள் இந்துக் கடவுள் அனுமான் உருவம் பதித்த டொலர், சிலுவை, செபமாலை மற்றும் சிறிய புத்தர் சிலை போன்றவை இருந்தன.

அவர் வெள்ளை மாளிகை வந்தபோது போப் ஆண்டவர் பிரான்சிஸ் அவருக்கு செபமாலை ஒன்றைப் பரிசளித்தார். ஒரு புத்த துறவி புத்தர் சிலையைப் பரிசாக அளித்தார். எதியோப்பியா சென்றபோது ஒருவர் அவருக்குச் சிலுவை டொலரை அளித்தார்.

அதேபோன்று அமெரிக்காவின் லோவாவைச் சேர்ந்த ஒருநபர் அவருக்கு அனுமன் உருவ டொலரை அன்புப் பரிசாக வழங்கினார். இவை, சில நேரங்களில் தான் மனம் தளர்ந்து சோர்வாக இருக்கும் நேரங்களில் தனக்குத் தெம்பும், தன்னம்பிக்கையும் அளிப்பதாக அவர் கூறினார். (ஐ)





## செல்பியால் உயிரிழப்போர் இந்தியாவிலேயே அதிகம்

### ஆய்வில் தகவல்

வொஷிங்டன்,ஜன.18
செல்பியால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் தான் அதிகம் என ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

தொடுபேசிகளின் வருகைக்குப் பின்னர்அரசியல் தலைவர்கள் தொடக்கம் சாமானிய மக்கள் வரையிலும் செல்பி மோகம் ஆட்டி வருகிறது. சாப்பிடுவது தொடக்கம் தூங்குவது வரையிலும் செல்பியில் எடுத்து வருகின்றனர்.

இதனால் ஏராளமான விபரீதங்களையும் சந்திக்க நேர்கிறது. வெளிநாடுகளில் பல ஆபத்தான இடங்களில் செல்பி எடுக்க முயன்ற இளைஞர்கள் தங்களது உயிரையும் இழக்க நேரிட்டுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வில் இது போல் செல்பியால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் தான் அதிகம்என அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

உலக அளவில் கடந்த 20[illegible] உயிரிழந்தவர்களின் [illegible] மேற்பட்டோர் இந்தியாவில் செல்பி எடுக்க முயன்று உயிரிழந்தவர்கள் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பை நேசி

சி. நற்குணலிங்கம்,
நெல்லியடி

இன்றைய சிறார்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. இளமையில் கையாளும் வாசிப்புப் பழக்கமே கல்விக்கு அடித்தளம் என்பதைச் சிறார்களுக்கு உணர்த்தி, வாசிப்புப்பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். வாசிப்பு என்பது மௌனமான முறையில் நிகழ்கின்ற ஓர் உரையாடல் போன்றது. வாசிப்பானது பொருள் உணர்ந்து, ஆழமாக, நிதானமாக, பரந்து பட்டு நேசித்த நூல்களை வாசிக்க வேண்டும். அப்போதுதான் அவை மனதில் ஆழமாகப்பதியும். வாசிப்பில் ஈடுபடும்போது, மனிதனை மனிதனாக மாற்றக்கூடிய நூல்களை நேசித்து வாசியுங்கள், பயன் பெறுவீர்கள்.

> ❝ வாசிப்பின் மூலம் பெற்ற அறிவும் அனுபவமும் தேவை. வாசிப்பும் கற்றலின் ஒரு பகுதி என்பதை உணர்வதுடன் வாசிப்புக்கு நேரம் ஒதுக்கி நேசித்து வாசித்து வாசிப்பின் சுகங்களை அனு பவியுங்கள். பூரணமனிதனாக மாற்றமடைவீர்கள். ❞

தற்போதைய சமூகம் அறிவு மையச் சமூகமாகும், சவால்கள் நிறைந்த சமூகமாகும். இவற்றுக்கு ஈடுகொடுக்க கல்வி மட்டும் போதாது. வாசிப்பின் மூலம்பெற்ற அறிவும் அனுபவமும் தேவை. வாசிப்பும் கற்றலின்ஒரு பகுதி என்பதை உணர்வதுடன் வாசிப்புக்கு நேரம் ஒதுக்கி நேசித்து வாசித்து, வாசிப்பின் சுகங்களை அனுபவியுங்கள். பூரணமனிதனாக மாற்றமடைவீர்கள்.

அறிவு என்பது பிரதானமான தந்திரோபாயச் சொத்தாக மாற்றமடைந்துள்ள 21ஆம் நூற்றாண்டுக்கு ஈடு கொடுத்து வாழ வாசிப்பு அவசியமானதாகும். வாசிப்பின் மூலம் பலரது பல்வேறு வகையான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். வாழ்வின் வெற்றி தோல்விகளின் சுகங்களை அறிந்து கொள்ள, பல்துறை சார் அறிவைப்பெற்றுக்கொள்ள. அவைமூலம் நமது வாழ்க்கைப்போக்கில் மாறுதல்களையும், திருத்தங்களையும் ஏற்படுத்தி சீர்வாழ்வில் ஈடுபட முடியும்.

வாசிப்பை இளமை முதல் முறையாக நேசிக்கத்தவறியமை தான் இன்றைய கலாசார சீரழிவுகளுக்கும் ஒரு காரணமாக அமைகின்றது. வாசிப்பின் மூலம் உளநலம் சீரடைவதுடன் பண்பட்ட மனிதனாக மிளிரவும் சமூகம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படவும், அத்தியாவசியமான சமுதாயக் குறிக்கோள்களை சாதித்துக் கொள்ளவும், சமூகத்துக்கு ஏற்புடையதான மனப் பாங்குகளை விருத்தி செய்யவும், ஆளுமை விருத்தி பெறவும், அறிவு வளம் பெறவும், அதன்வழி மனித நேயம் தோன்றவும், வாழ்வின் விழுமியங்களை அறிந்து கொள்ளவும் அதன் வழி வாழவும் வாசிப்பு உதவுகின்றது. ஏனவே வாசிப்பை நேசியுங்கள்.

சமூகத்தில் ஆரோக்கியமான விழிப்புணர்வு விதைக்கப்பட வேண்டும். விரிவான சிந்திப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். தனியாள் அகத்தடைகள் வெற்றி கொள்ளப்பட வேண்டும். இவை இலகுவாக வாசிப்பின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை ஆசிரியர்கள் மட்டுமல்ல பெற் றோர்களும் பிள் ளைகளுக்கு சிறு பராயம் முதல்



ஊட்ட வேண்டும். இவற்றின் மூலம் தவறான எண்ணங்கள் சீரமைக்கப்படும். எதிர்கால வாழ்வு சிறக்கும். சீரழிவற்ற சமுதாயம் தோற்றம் பெறும்.

**வாசித்துக்கொண்டே இரு**

வாசித்துக்கொண்டே இரு பல கல்விமான்களதும், அனுபவசாலிகளதும் அறிவை, அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியும். அவை உனது வாழ்வுக்கு விடிவெள்ளி.

கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே அது உன்னைக்கொன்றுவிடும். கண்ணைத்திறந்துபார், நீ அதை வென்று விடலாமென அப்துல்கலாம் கூறினார். உழைத்துப்பிழைக்க வேண்டும். உழைப்பு நின்றுவிட்டால் பிழைப்பு படுத்துவிடும். நுழைந்து சாதனை புரிய மனதிலே உழைக்கும் எண்ணத்தைப் பதியவை எனக் கல்விமான் ஒருவர் கூறியுள்ளார். உழைப்பையும், விடா முயற்சியையும் மூலதனமாகச் செலுத்தி வாழ்வில் வெற்றி காணலாம்.

அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் உலக வரலாற்றில் அழியாத இடம் பெற்றதற்கு அடிப்படைக்காரணம் அவரது இடைவிடாத உழைப்பும் விடா முயற்சியுமாகும்.

இவ்வாறான நல்ல விடயங்களை வாசியுங்கள். மாறாக ஆபத்தான பாலியல் தொடர்புகள், புகைத்தல், மது, போதைப்பழக்கம் போன்ற நலவியல் விடயங்களில் அறிவை வளர்க்கக் கூடாது.

ஒவ்வொரு மாணவனும் வாசிப்பை நேசிக்கவேண்டும். வாசித்தல் தொழிற்பாடு அலட்சியப்படுத்தப்படும் காரியமாக ஆகிவிடுவது சமூகத்தின் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு அடிப்படையாக அமைந்து விடும்.

# உங்களுக்கு 2016 எப்படி?

## கடகம்

உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் கடக ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிப் பார்த்தோம். கடகராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.

**விவசாயிகள்**

பயிர் விளைச்சல் மிகச் சிறப்பாக இருக்கும். அரசு வழியிலும் பல மானிய உதவிகள் கிடைக்கப்பெறும். உழைப்பிற்கேற்ற பலன்களை அடைவதால் பரம திருப்தி உண்டாகும். எடுக்கும் முயற்சிகளிலும் நிறைவான லாபம் கிடைக்கும். பொருளாதார மேம்பாடுகளால் புதிய யுக்திகளைக் கையாண்டு மேலும் அபிவிருத்தியைப் பெருக்குவீர்கள்.

**பெண்கள்**

குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருக்கும். தடைப்பட்ட சுபகாரியங்கள் ஆண்டின் முற்பாதியில் கைகூடும். பணவரவுகள் தேவைக்கேற்றபடி அமையும். புத்திர வழியில் சிறுசிறு வீண் செலவுகள் உண்டாகும். ஒகஸ்ட் மாதம் முதல் உற்றார்- உறவினர்களை அனுசரித்து நடப்பது மிகவும் நல்லது. உடல் ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.

**மாணவ- மாணவியர்**

கல்வி பயிலுபவர்கள் ஆசிரியர்களையும் பெரியவர்களையும் மதித்து நடப்பது நல்லது. கல்வியில் ஓரளவு சாதகப் பலனைப் பெறமுடியும். விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடும்போது கவனமாக இருப்பது அவசியம். தேவையற்ற நண்பர்களின் சேர்க்கை அவப் பெயரை உண் டாக்கும். மதிப்பெண் குறையும்.

**மாதப்பலன் (ஜனவரி)**

ஜென்ம ராசிக்கு பஞ்சம ஸ்தானமான 5-ல் சுக்கிரன், 6-ல் சூரியன் சஞ்சாரம் செய்வதால் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி, மறைமுக எதிர்ப்புகள் விலகக்கூடிய அமைப்பு, உடல் ஆரோக்கியத்தில் பலமும் வலிமையும் கூடக்கூடிய அமைப்பு உண்டாகும். குடும்பத்தில் திருமணம் போன்ற மங்களகரமான சுபகாரியங்கள் கைகூடும். பணம் கொடுக்கல்- வாங்கல் சரளமாக நடைபெறும். தொழில், வியாபாரம் செய்பவர்கள் சில போட்டிகளைச் சந்திக்க நேர்ந்ததாலும் எதையும் சமாளித்து ஏற்றம்பெறுவீர்கள். பயணங்களால் அனுகூலம் உண்டாகும். முருகப் பெருமானை வழிபாடு செய்வது உத்தமம்.

**பெப்ரவரி**

மாதக்கோளான சூரியன் சாதகமின்றி சஞ்சரிப்பதும், 4-ல் செவ்வாய் சஞ்சாரம் செய்வதும் வீண் அலைச்சல், கஸ்டங்களை ஏற்படுத்தும் அமைப்பாகும். ஆரோக்கியரீதியாக பாதிப்புகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகளை உண்டாக்கும். நெருங்கியவர்களிடமும் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். பணவரவுகள் சிறப்பாக இருந்தாலும் எதிர்பாராத திடீர் செலவுகளால் கடன்கள் வாங்கக் கூடிய சூழ்நிலைகள் ஏற்படும். முடிந்த வரை ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக்கொள்வது நல்லது. தொழில், வியாபாரம் செய்பவர்கள் சுமாரான லாபங்களைப் பெறமுடியும்.

**[illegible]**

[illegible] வக்ரகதியில் சஞ்சரிப்பதும், அஷ்டம ஸ்தானமான 8-ல் சூரியன் சஞ்சாரம் செய்வதும் சாதகமற்ற அமைப்பாகும். இதனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவதும், உற்றார்- உறவினர்களை அனுசரித்து நடப்பதும் நல்லது. தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு கூட்டாளிகளால் தேவையற்ற பிரச்சினைகள் உண்டாகும். பெரிய முதலீடுகளை ஈடுபடுத்தி செய்ய நினைக்கும் காரியங்களில் சிந்தித்துச் செயல்படுவது நல்லது. புதிய முயற்சிகளை சில காலம் தள்ளி வைப்பது வீண் விரயங்களை குறைக்க உதவும். கொடுக்கல்- வாங்கலில் கவனம் தேவை. சிவ வழிபாடு, துர்க்கை வழிபாடு செய்யவும்.

**ஏப்ரல்**

ஜீவன ஸ்தானமான 10-ல் புதன் சஞ்சரிப்பதும் மாத பிற்பாதியில் சூரியன் 10-ல் சஞ்சாரம் செய்யவிருப்பதும் ஓரளவுக்கு மேன்மைகளை ஏற்படுத்தும் அமைப்பாகும். எதையும் சமாளித்து ஏற்றமான பலனைப் பெறுவீர்கள். பணவரவுகள் தேவைக்கேற்றபடி அமையும். உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வதன் மூலம் எதிலும் சுறுசுறுப்பாக ஈடுபட முடியும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு எதிர்பார்க்கும் லாபங்கள் அமையும்.

**மே**

மாதக்கோளான சூரியன் சாதகமாக சஞ்சரிப்பதும், குரு தன ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்வதும் நல்ல அமைப்பாகும். எந்தவொரு காரியத்திலும் துணிந்து செயல்பட்டு வெற்றியினைப் பெறுவீர்கள். குடும்பத்தில் மங்களகரமான திருமண சுபகாரியங்கள் கைகூடும். கணவன்- மனைவி விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது. தொழில், வியாபாரம் செய்பவர்கள் எதிர்பார்த்த லாபத்தை அடையமுடியும். கடன்கள் படிப்படியாகக் குறையும். புத்திர வழியில் சில மன சஞ்சலங்கள் உண்டாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நிறுத்தப்படுமா?

இரா. தனம்




பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. ஆங்காங்கு இடம்பெற்றுவருகின்ற வன்முறைகளும் பலாத்கார குற்றச் செயல்களும் வெறும் சம்பவங்களாக மட்டுமே பேசப்பட்டு மழுங்கடிக்கப்படுகின்றன. ஆனால் அவை இலகுவில் மறந்து விடக்கூடியன அல்ல. இவை ஒவ்வொன்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தான். அவற்றுள் பாலியல் குற்றங்களின் தாக்கம் எத்தகையது போன்ற வினாக்களுக்கு விடைகளை ஆராய்தல் இன்றைய சூழ்நிலையில் இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது.

பாலியல் வல்லுறவு, பாலியல் இம்சை, கொலை, கருச்சிதைவு போன்ற இன்னோரன்ன வன்முறைகள் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுக்கின்றன. வீட்டுக்குள் அடி உதை போன்ற வன்செயல்கள் கணவனால் அல்லது வேறு ஆள்களால் ஏற்படுத்தப்படுகின்றன.

பெண்களுக்கெதிரான வன் செயல்கள் என்னும் விடயம் ஐக்கிய நாடுகள் சபையினால் சகல நாடுகளிலும் முக்கியத்துவம் பெற்றிருப்பது யாராலும் மறுக்க முடியாத அம்சமாகிவிட்டது. எடுத்துக்காட்டாக சர்வதேச குடும்ப ஆண்டாக 199ஆம் ஆண்டை ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்ததால் வன் செயல் அற்ற குடும்பங்களை உருவாக்குவதற்கான உத்திகளை அமெரிக்காவின் நியூயோர்க்கிலுள்ள யுனிசெவ் இல்லத்தில் வகுக்கப்பட்டமை நோக்கத்தக்கது. இலங்கையில் திருமணமான பெண்கள் 60 வீதமானோர் குடும்ப வன்முறைகளுக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரியவந்துள்ளது. அதிகமான வீட்டு வேலைகள், மோசமான நிதி நிலைமை, குழந்தைகளோடு தொடர்பான விடயங்கள், கூட்டுக்குடும்ப பிரச்சினைகள், பாலியல் மற்றும் மனோ ரீதியான காரணங்கள் பெண்களின் குடும்ப வன்முறைகளுக்கு காரணமாக அமைகின்றன.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஆபாசப்படங்கள் இன்று பிரதான இடத்தைப் பெறுகின்றன. வறுமையிலும் கஷ்டத்திலும் தொழில் தேடி அலையும் பெண்களுக்கு தொழில் தருவதாகக் கூறி இன்று அவர்களை நகரங்களுக்கு அழைத்துச் சென்றும் பலவந்தமாக இழுத்துச் சென்றும் பிறரோடு விபச்சாரம் புரியத் தள்ளும் அவலமான நிலைமையை இன்று அனேக நாடுகளில் மட்டுமன்றி எமது பிரதேசங்களில் கூட கண்டுகொள்ள முடிகின்றது. அது மட்டுமல்ல பாடசாலைகளில் ஆசிரியர்களால் மாணவிகள் இம்சைப்படுத்துகின்றனர். பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்படுகின்றனர். மாணவிகள் பாடசாலை செல்லும் வேளை கடத்தப்படுகின்றனர். ஐந்து வயது ஏழு வயது பாலகர்கள் கூட துன்புறுத்தப்படுகின்றனர். இலங்கையில் பாலியல் துன்புறுத்தல்கள் அதிகமாகிக் கொண்டே போவதால் வருங்காலச் சிறுவர்களின் (குறிப்பாக யுவதிகள்) எதிர்காலம் கேள்விக்குரியதாகவே மாறி விட்டது.

அதிக பணம் சம்பாதிக்கும் நோக்குடன் விளம்பரங்களில் கதைகள், நாவல்கள் ஆகியவற்றை கவர்ச்சிப்படங்களுடன் வெளியிடுகின்றனர். இது மட்டுமல்ல திரைப்படங்களில் ஆடைக்குறைப்பு, ஆபாச நடனங்கள், முத்தக் காட்சிகள், முதலிரவு காட்சிகள் என்பன சகிக்க முடியாத அளவில் காட்சிப்படுத்தப்படுகின்றன. இதனை வெளியிடுபவர்கள் அதிக பணத்தைச் சம்பாதித்து வருகின்றனர். பெண்கள் எதிர் நோக்கும். பாலியல் வல்லுறவு பெண்களைப் பெரிதும் பாதிப்படையச் செய்கிறது.

வெளிப்படையாக மனிதர்களை நோக்குமிடத்து, அடிப்படை மனித உரிமைகளைப் புறக்கணித்துவிட்டு பகுத்தறியக்கூடிய மானிடத் தன்மைக்கு புறம்பாக மனிதன் இன்று தான் பெற்றுள்ள அறிவியல், விஞ்ஞான, தொழில்நுட்பவியல் வளர்ச்சிக்கு ஒவ்வாத வகையில் கட்டு மீறிய விலங்குணர்வை வெளிப்படுத்தி வருகின்றான். வல்லுறவுக்கு உட்பட்ட பெண்ணைத் திருமணம் செய்வது பெரும் சவாலாகவே எமது சமூகத்தில் உள்ளது. இதனால் சிலர் வாழ் நாள் முழுவதும் துன்பங்களையும் சுமைகளையும் தாங்கிக் கொண்டு வருகின்றனர். சிலர் தற்கொலைக்கும் ஆளாகின்றனர்.

1996ஆம் ஆண்டில் இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார் மாணவி கிருசாந்தி. இவரைத் தேடிச் சென்ற அனைவரும் கொல்லப்பட்டமை, புங்குடுதீவு மாணவி வித்தியா பாலியலுக்கு உட்படுத்தப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டமை என்பன இன்றும் எமது இதயத்தை வருடுகின்றது. படித்துப் பட்டம் பெற்று சிறகடித்துச் செல்லும் மாணவச் செல்வங்கள் பாதியிலே காமுகர்களால் கடித்துக் குதறப்படுகிறார்கள்.

மேலும், படு பாதகமான செயலாக வயது முதிர்ந்தவர்கள் இளம் பாலகர்களை கொடுமைக்கு உட்படுத்துவதும் தந்தை மகளைப் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்குவதும் மிகவும் மிருகத்தனாகும். இந்தியாவிலிருந்து மணம் முடித்து தன் கணவனோடு சந்தோசமாக பொழுதைக் கழிக்கலாம் என வந்த றீட்டாவுக்கு ஏற்பட்ட அவல நிலை நாம் அனைவரும் அறிந்ததே. இந்தக்கொடுமைகள் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் இல்லாத நாள்களே இல்லை என்று கூறலாம். இத்தகைய கொடூரச் செயல்கள் மூலம் பெண்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுகின்றன. அகதிகளாக இடம்பெயரும் பெண்களுக்கு ஆதரவற்ற நிலை காணப்படுவதனால் இவர்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

> வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் சமூகத்தில் இனங்காணப்பட்டு கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் மிருகத்தனமான கொடூர செயல்களிலிருந்து விடுதலை பெற முடியும்.

பொதுவாக எமது நாட்டில் கூட தாம் பெற்ற மகளைக் கற்பழித்த தந்தைமார்கள், சகோதரிகளை பாலியல் ரீதியில் துன்புறுத்திய சகோதரன்மார், மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெண்கள் செல்லும்போது வீட்டில் இருக்கும் பராயப் பெண்களோடு தகாத உறவு வைத்துக்கொள்ளும் நெருங்கிய உறவினர்களான சித்தப்பா, பெரியப்பா, மாமா போன்றவர்களின் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. அது மட்டுமல்ல தமது குடும்ப வறுமையின் நிமித்தம் தொழில் தேடிச் செல்லும் பெண்கள் வேலை கொள்வோரால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகிவரும் செய்திகளையும் பார்க்கிறோம். பெண்கள் தமது பாதிப்பை வெளிப்படுத்தினால் தமக்கு அபகீர்த்தி ஏற்பட்டு விடும் என எண்ணி மனதுக்குள்ளே பூட்டி வைத்துக் கொண்டிருப்பதையும், சிலர் தற்கொலைக்கு ஆளாக்குவதையும் காண்கிறோம் அறிகிறோம். ஆனால் இதனை வெளிக்கொணராது மூடி மறைப்பதனால் குற்றமிழைப்போர் தப்பித்துக்கொள்ள வாய்ப்பாக அமைந்து விடுகிறது.

கணவனை இழந்து வாழும் பெண்கள், அடிக்கடி ஆண்களால் தொல்லைக்குள்ளாகின்றனர். இன்று பெண்கள் வேலைக் குச் செல்லும்போதும், வர்த்தக நிலையங்கள் மற்றும் பாடசாலைகளுக்குச் செல்லும் போதெல்லாம் பாலியல் இம்சைக்கு ஆளாகி வருகின்றனர். இன்று பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் தொடர்வதால் கருச் சிதைவுகள் அதிகரிப்பதுடன் பல குழந்தைகள் எவருக்கும் தெரியாமல் புதைக்கப்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் கருச்சிதைவு செய்வது சட்ட விரோதமானது.


சட்டவிரோதமாக பாலியலில் ஈடுபடுவோருக்கு 10முதல்20வருடம் வரையிலான கடூழியச் சிறைத் தண்டனை, தண்டப்பணம் இழப்பீடு என்பது பற்றி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டம் இவ்வளவு கடுமையாக இருந்தும் பாலியல் வல்லுறவு குறைவதாக இல்லை. இதற்கு தற்போது பாவனையிலுள்ள தொலைபேசி, நாகரிக உடை, வேண்டாத இடங்களுக்குச் செல்லுதல், அறிமுகப்படாதவருடன் பழகுவது, உதவி கேட்பது போன்ற காரணங்களைக் கூற முடியும். எல்லாவற்றுக்கு மேலாக தொலைக்காட்சி பார்ப்பது, அவசியமானவற்றைவிடுத்து அவசியம் இல்லாதவற்றை மணித்தியாலக் கணக்காகப் பார்ப்பது, இதில் தாய் தந்தையரின் பங்களிப்பும் ஒரு காரணமாக அமைகின்றது. குறிப்பாக பெண்கள் சமைக்கும்போது கூட நாடகங்களைப் பார்த்துக் கொண்டே சமைக்கிறார்கள், பிள்ளை பரீட்சைக்கு படித்தாலும் கூட அவர்கள் அதை நிறுத்தமாட்டார்கள் எனவே தாய் தந்தையர் உறவுகள் இதில் அக்கறை கொள்ளவேண்டும் பாதிப்புக்குள்ளாவது எமது பிள்ளைகள், எமது உறவுகள், எமது தாய், எமது சகோதரி என்பதை மறக்கக் கூடாது

இவ்வாறாக இவற்றைத் தொகுத்து நோக்குமிடத்து இன்று பெண்களுக்கெதிராக இடம்பெறும் வன்முறைகளும், பாலியல் பலாத்காரங்களும் இன்றைய யதார்த்தபூர்வ உலகில் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியவை ஆகும்.

இத்தகைய வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் சமூகத்தில் இனங்காணப்பட்டு கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் மிருகத்தனமான கொடூர செயல்களிலிருந்தும் அந்தச் செயல்களைப் புரியும் காமுகர்களிடமிருந்தும் பெண்கள் விடுதலை பெறமுடியும். இவர்களின் விடுதலையோடுதான் சமூக விழுமியமான சுதந்திரத்தைப் பெற முடியும் என்றால் அது மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பக்தியும் முக்தியும்

ஒரு சமயம் கண்ணனும் அர்ச்சுனனும் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது கண்ணன் சில நிமிடங்கள் மௌன மாக இருந்து ஏதோ சிந்தித்தார். சற்று நேரத்துக்கெல்லாம் அர்ச்சுனனிடம் பேச்சுக் கொடுத்தார்.

அர்ச்சுனன் கேட்டான், பேச்சின் நடுவே என்ன திடீர் சிந்தனை?

"ஒன்றுமில்லை என் பக்தன் ஒருவன் எனக்கு மலர் அபிஷேகம் செய்தான். அதை அனுபவித்தேன்" என்றார் பரந்தாமன். பஞ்சபாண்டவர்களாகிய எங்களில் உன் பரிபூரண அருளைப் பெற்றவர் யார்? என்று கேட்டான் அர்ச்சுனன். பகவான் சட்டெனப் பதில் சொன்னார். உங்கள் ஐவரில் என் பூரண அருளையும் அன்பையும் பெற்றவன் பீமன் ஒருவனே என்று. எப்போதும் உன் அருகிலேயே இருக்கும் நான், தினந்தோறும் உன்னை வழிபடும் திரௌபதை, எந்த ஒரு சம்பவத்தையும் உன்னைக் கலந்து ஆலோசிக்காமல் செய்யாத தருமர், உன் மீது கவிதைகளை எழுதி ஆராதிக்கும் நகுல சகாதேவர்கள் இவர்களை எல்லாம் விட எப்போதும் சாப்பாட்டு வேலைகளையும் சாப்பாட்டுக்குத் தேவையானவற்றையும் மட்டுமே கவ னிக்கும் பீமன் எப்படி மேலானவன்?" என்று சற்று கோபத்துடன் கேட்டான் அர்ச்சுனன். அதற்கு மாயக் கண்ணன் சிரித்தபடி கூறினான். "அர்ச்சுனா, அவசரமோ ஆத்திரமோ படாதே. எவனாருவன் தன் கடமைகளைச் சரிவரச் செய்கிறானோ அவனே என் பரிபூரண அன்புக்கும் ஆசிக்கும் உரியவனாகிறான் என்பதை நீ உணர வேண்டும் என்று.

நீங்களெல்லாம் என்னைக் கண்டதும் நன்றி செலுத்துவது போல நடந்து கொள்ளுகிறீர்கள். பீமன் என்னைக் கண்டாலும் கூடத் திரும்பிப் பார்ப்பதில்லை. அவன் கடமை எதுவோ அதிலேயே கருத்தாக இருக்கிறான். காலையில் கண் விழித்ததும் நீராடிவிட்டு என்னை நினைத்து மலர்களை என் பாதத்தில் சூட்டுவதாக எண்ணிக் கிருஷ்ணார்ப்பணம் எனப் பொழிகிறான். அதன் பிறகு தன் அன்றாடக் கடமைகளைத் தவறாமல் செய்கிறான். அதனால் அவனே என் பரிபூரண அருளையும் அன்பையும் பெற்றவனாகிறான்" என்றார் பரந்தாமன்.

பார்த்தனால் பதில் சொல்ல இயலவில்லை.

தன்னுடைய கடமைகளைத் தவறாமல் செய்யும் ஒருவன் இறைவனின் அன்புக்குப் பாத்திரமாகிறான்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1126 - சீனப் பேரரசர் குயிஷோங் தனது மகன் கின்ஷோங் பேரரசரா வதற்கு வசதியாக முடி துறந்தார்.
1733 - துருவக் கரடி அமெரிக்காவில் முதன் முதலாக (பொஸ்ரன்) காட்சிப்படுத்தப்பட்டது.
1788 - இங்கிலாந்திலிருந்து 736 குற்றவாளிகள் ஆஸ்திரேலியாவின் பொட்னிகுடாவை வந்தடைந்தனர்.
1896 - எக்ஸ்றே இயந்திரத்தின் செயற்பாடு அமெரிக்க நியூயோர்க் நகரில் முதன் முதலாக செயற்படுத்திக் காண்பிக்கப்பட்டது.
1911 - விமானமொன்று முதன் முதலாக கப்பற் தளத்தில் தரையிறக்கம் செய்யப்பட்டது.
1913 - துருக்கி - கிரேக்கம் கடற்சமரில் ஈடுபட்டன.
1915 - மெக்ஸிகோ புகையிரத விபத்தில் 600 பேர் சாவு
1923 - முதலாவது வானலை தந்திச் செய்தி நெதர்லாந்திலிருந்து ஒல்லாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
1929 - ட்றொஸ்கியை அரசியல் பீடத்திலிருந்து அகற்ற ஸ்டாலின் தீர்மானம்.
1951 - பொய் கூறுவதைக் கண்டறியும் கருவி முதன் முதலாக நெதர்லாந்தில் பயன்படுத்தப்பட்டது.
1955 - சீன தேசிய புரட்சிப் படையும் மக்கள் விடுதலைப் படையும் யிஜியன்ஷான் தீவில் மோதல்.
1960 - அமெரிக்காவும் ஜப்பானும் பாதுகாப்புக் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்து.
1964 - உலக வர்த்தக மையத் திட்டம் பற்றி நியூயோர்க் நகரில் அறிவிக்கப்பட்டது.
1969 - வியட்நாம் சமாதானம் தொடர்பாக விரிவாக்கப்பட்ட நான்கு தரப்பு பேச்சுவார்த்தை பாரிஸில் தொடங்கியது.
1972 - நாட்டில் கறுப்பு பெரும்பான்மையின ஆட்சிக்கு ஆதரவளித் தமைக்காக, தென் ரொடீஸியா முன்னாள் பிரதமரும் அவரது மகளும் கைது.
1974 - இஸ்ரேலும் எகிப்தும் ஆயுதம் தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்து.
1977 - லிஜியோனையர் எனும் புதிரான நோய்க்கு முன்னர் அறியப்படாத ஒரு பக்ற்றீயாவே காரணம் என விஞ்ஞானிகள் இனங்கண்டனர்.
1988 - தென்மேற்கு சீனாவின் விமான விபத்தில் விமானத்திலிருந்த 108 பேரும் சாவு.
1990 - ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மீதான தடை பற்றி தென் ஆபிரிக்க அரசு மீளாய்வு.
1991 - 5 மணித்தியாலம் 11 நிமிடங்கள் இடம்பெற்ற ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ்போட்டியில் பொறிஸ் பெக்கர் இத்தாலியின் ஓமர் காம்றோ ஸைத் தோற்கடித்தார்.
1991 - இஸ்ரேலுக்கு எதிராக ஈராக் ஸ்கட் ஏவுகணைப் பிரயோகம்.
1994 கொழும்பில் கடந்த 17 நாள்களில் 2 ஆயிரம் தமிழர் கைது.
1995 - பிரதேச சுயாட்சியை உறுதி செய்யும் கூட்டாட்சியை பரிசீலிக்கத் தயார் என பாலசிங்கம் கூறியதாக டெயிலி நியூஸ் தகவல்.
1995 - ஜப்பான் பூகம்பத்தில் உயிரிழந்தார் எண்ணிக்கை 2000ஆக உயர்வு. ஒரு லட்சம் பேர் வீடு வாசல் இழப்பு.
2004 - சு.க., ஜே.வி.பி. கூட்டுக்கு ஐக்கிய மக்கள் முன்னணி எனப் புதிய பெயர். தலைவி ஜனாதிபதி சந்திரிகா செயலாளர் ரிஸ்வின் சில்வா.
2009- போர் முடிவடைந்த பின்னரே அரசியல் தீர்வு என இந்தியாவிடம் இலங்கை திட்டவட்டமாகத் தெரிவிப்பு.
2013 - ஷிராணி வழங்கிய இடமாற்றங்களை இரத்துச் செய்தார் மொஹான் பீரிஸ்.




பூக்கள் மலரும் வேளை
தேனீக்கள் வரும் சோலை
வண்டுகள் பாடும் பண்ணை
தேனீக்கள் எடுக்கும் தேனை

சிறுகச் சிறுகச் சேகரிக்கும்
சின்னத் தேனீ சுகித்திருக்கும்
பெருகப் பெருக அடை வளரும்
பெரிய தேனடை உருவாகும்

கொஞ்சம் கொஞ்சம் சேமித்தால்
கஷ்டம் விலகும் சேமிப்பால்
நெஞ்சம் கொஞ்சம் சிந்தித்தால்
பஞ்சம் இல்லை சேமிப்பால்

# வர்ணம் தீட்டலாம் வாங்க!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கம் உயிர் பெறுமா...??

இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்ற ஜனாதிபதித்தேர்தல் அதன் பின்னான நாடாளுமன்றத்தேர்தல் ஆகிய இரண்டும் தமிழ் மக்கள் அதற்கு முந்தைய காலங்களில் கடந்து வந்த கரடுமுரடான பயணப் பாதைகளின் முடிவுறுத்தலாகவும் புதிய சீர்திருத்தங்களின் ஆரம்பமாகவும் அமையப்போகிறது என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தி விட்டிருந்தன. இருந்தும் அந்தப் பயணங்களின் ஒரு வருட காலத்தொடர்ச்சியும், மக்கள் எதிர்பார்த்தது போன்றதான அந்தப்புதிய நகர்வின் மீதான மக்களின் நம்பிக்கையும் எந்தளவில் ஆரோக்கியமானதாக மாற்றம் கண்டது என்பதனையும் சீர் தூக்கிப் பார்த்தால் மக்களின் எதிர்பார்ப்பு எப்போதும் போல ஏற்றத்தோடும் ஏக்கத்தோடும் இருக்கிறது. மாறாக அதற்கான தீர்வுகள் என்பது ஏற்றம் காணவில்லை. ஆரம்பப் புள்ளியிலேயே இருந்து வருகிறது.

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், இன சமத்துவம் என்பன இலங்கையில் நிலைநிறுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களுக்குச் சரியான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும். அதனை உறுதிப்படுத்த தற்போதைய நல்லாட்சி அரசு விரைந்து செயலாற்ற வேண்டும் என்பதான கருத்துக்களும் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் இடம்பெற்றிருந்த ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு அனுசரணையாக கொண்டுவரப்பட்ட போர்க்குற்றம் தொடர்பான இறுதி வரைவிலே சொல்லப்பட்டிருந்தன. இது கூட மேற்படி கூட்டத் தொடரின் முன்பான தமிழர்களின் எதிர்பார்ப்பாக இருந்துவந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச நீதிபதிகள், சட்டவாளர்கள் பிரசன்னத்துடனான கலப்பின நீதிமன்றமூடான விசாரணைகள், அதனூடான தீர்வுகள் மற்றும் முப்பது வருடங்களுக்கு மேலான இன முரண்பாட்டிற்கான நிரந்தர அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்பதான அபிலாசைகளுக்கு இடம்தரவில்லை. மாறாக பொதுநலவாயம், தனித்து அவர்களின் பிரசன்னம். தீர்வில் முன்மொழிவுகளை தெளிவுபடுத்த முடியாது உள் நாட்டுப் பொறிமுறை என்பதாக அடங்கி விட்டது.

இந்த நிலையிலே சொல்லப்பட்ட விடயங்களில் எந்தவித முன்னேற்றகரமான நகர்வுகளும் இடம்பெறாத போதும், நல்லிணக்கம், நல்லாட்சியின் இனங்களுடனான சுமுக ஊடாட்டம் என்பதனை வெளிப்படுத்துவதான நிகழ்வுகளை அரசு வடக்கில் நிகழ்த்தியிருக்கிறது. கடந்த வருடத்தின் இறுதியில் கிறிஸ்து பிறப்பின் வருகையை யாழ்ப்பாணத்தில் தேசிய நத்தார்தின விழாவாக நிகழ்த்திமுடித்தது. அதில் ஜனாதிபதி கலந்துகொண்டு ஆறு மாதங்களுக்குள் வலி வடக்கின் உயர் பாதுகாப்பு வலயங்கள் முற் றாக மக்களிடம் ஒப்படைக்கப்படும் என்ற கருத்தை நத்தார் பரிசு போல பல வியாக்கியானங்களை வரிந்துகட்டி பலூனாய் ஊதி உடைத்தார். உண்மையில் விடுவிக்கப்படுகின்ற இடங்களில் மக்களின் இயல்பு வாழ்வு சாத்தியப்படுமா..? வனாந்தரமான எந்த வித அடிப்படை வசதிகளுமற்று சொத்துக்கள் சூறையாடப்பட்ட சொந்த நிலத்தில் சொந்த உறவாக இருந்தாலும் எப்படி நல்லிணக்கம், நல் இயைபாக்கம் சாத்தியமாக எவ்வளவு காலம் செல்லும் என்பது கேள்விக்குறி.

இந்த நத்தார் தின விழாவின் பின்னான புதிய ஆண்டின் வரவில் (2016 ஆம் ஆண்டு) அண்மையில் மீண்டுமொரு தேசிய விழா என்ற நாமம் சூட்டி தைப் பொங்கல் விழாவை நத்தார் விழாவின் போது ஊதிய பலூனில் இருந்து உருவம் மாற்றி சொன்ன செய்தி, சுட்டிய வலி வடக்கிற்கே போய் பட்டாசாக வெடித்தும் விட்டது. இதற்குச்சமாந்தரமாக முக்கோணக்காதல் போன்று ஏனைய இரு இடங்களிலும் குறிப்பாக மருதனார்மடத்திலே தைப் பொங்கல் விழாவாகவும் வீரசிங்கம் மண்டபத்திலே தேசிய தைப் பொங்கல் விழாவாகவும் நடத்தி முடித்தனர். இதுவும் இன. நல்லிணக்கம் காண முற்படுகிறோம், நாங்கள் ஒன்றாக இருக்கிறோம் என்பதனை வெளிக்காட்டும் மாயத் தோற்றம் தான். தீர்வு என்பதற்கான அறிகுறியுமல்ல, ஆரம்ப வெளியுமல்ல. இதில் எவருக்கும் மாற்றுக் கருத்து என்பது தோற்றம் பெறாது.




இதனை வெளிப்படுத்தும் விதமான ஒரு பரிசு பிரதமரின் செய்தியில் இருந்து வெளிப்பட்டது. இது நத்தார் பரிசிற்கு எதிரான வெடி மருந்தாக நச்சுக் காற்றாக ஊதிவிடப்பட்டது. அது வேறு ஒன்றுமல்ல காணாமற் போனவர்களில் பெரும்பாலானோர் உயிரிழந்தவர்களாகவே கருதப்படுகின்றனர் என்பது தான் அது. உண்மையில் இவ்வாறான மறைமுக கருத்துக்களும் அரசின் எதிர் மறையான மறைமுக அரசியல் காய்நகர்த்தல்களும் பாதிக்கப்பட்ட இனத்திற்கான பொறுப்புக்கூறலை, நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவதற்கான அறிகுறிகளாகத் தென்படவில்லை. ஓர் இனத்தின் நல்லிணக்கப்பாதையையும் நல்லியக்க பாதையையும் வேறு திசைக்கு திருப்புவதாக அமைந்திருக்கின்றன.

இந்த நிலைகள் மாறவேண்டும். இது தொடர்பில் அரசு சிந்தித்துச்செயலாற்ற வேண்டும். அதற்கு உறுதுணையாக அக்கட்சி சார்ந்து ஜனநாயகப் பிரதிநிதித்துவங்கள் இதய சுத்தியுடன் பணியாற்ற வேண்டும்.

# பணம் வாழ்க்கைக்கு அவசியம்

யோ.அபிசன்

(நேற்றைய தொடர்ச்சி)

உலகில் ஆயிரக்கணக்கான வழிகள் விரிந்து கிடக்கும் பொழுது எம்முடைய வழி எது என்பதைத்திட்ட வட்டமாக முடிவு செய்து கொள்ளவேண்டும். எந்தெந்தத் துறைகளிலே வாய்ப்புக்கள் உள்ளன என்று நாம் நினைக்கிறோமோ அதில் தான் எம்முடைய திறமை பளிச்சிடும். எதிலே புகுந்து முன்னுக்கு வந்தால் செல்வத்தைக் குவிக்க முடியும் என்பதைத் தெரிந்து விட்டால் பிறகு எம்முடைய செயல்சுலபமாகமுடிந்துவிடும். நாம் தேர்ந்தெடுத்த துறையில் முழுமுயற்சியுடன் இறங்கிப் பணத்தைப் பெற வேண்டும்.

மேல்நாட்டில் பணக்காரராகத் திகழ்ந்த நப்பில்டு பிரபு கூறுகிறார்; தினமும் பத்து நிமிடம் சிந்திப்பதன் மூலம் புதுத்துறைகள் புலப்படும். பத்துத் துறைகளில் ஒன்றாவது நிச்சயமாக நாம் பின்பற்றக் கூடியதாக இருக்கும். அதில் ஒன்றைப்பின்பற்றினால் கூடப் போதும். பல இலட்சங்களை எளிதில் சேர்த்து விட முடியும். எமக்குத்தோன்றும் எண்ணங்களைக் குறித்து வைத்துக் கொண்டால், பிறகு அவற்றைப்பற்றிச் சிந்தனை செய்ய வசதியாக இருக்கும். நல்ல யோசனை தோன்றி விட்டால் அதை மனதிலே நிலைத்திருக்கச்செய்ய வேண்டும். முதலில் முடியாதது போல் தோன்றினாலும் விரைவில் முடியும் வகையில் மாறி விடும்.

வாழ்க்கையின் முக்கியமான குறிக்கோள் என்ன? அதை அடைய என்ன வழி? நாம் அதை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோமா? என்ன முயற்சி செய்கிறோம்? இன்றைய தினம் புதிதாக நாம் என்ன கற்றுக் கொண்டோம்? எம்மிடமுள்ள குறைகள் என்னென்ன? அவைகளை எப்படிப் போக்குவது? ஒரு நாளில் 24 மணியில் நாம் வேலை செய்ய, விளையாட, தூங்க, பயனுள்ளதைத் தெரிந்து கொள்ள, வீணாகச் செலவிடும் நேரம் எவ்வுளவு? நாம் எதற்குக்கவலைப் படுகிறோம்? இப் போது வாழும் மனிதர்களில் மிக உயர்ந்த வர்கள் என்று எவரை மதிக்கிறோம்? அவர்களிடம் உள்ள எந்தெந்தத் திறமைகளும் குணங்களும் எம்மிடம் இல்லை? இந்தக்கேள்விகளுக்கு எல்லாம் பதில் தெரிந்தால் முன்னேற்றம் தானாக வந்து விடும்.

எம்முடைய மனத்தை அடிக்கடி மாற்றி விடக்கூடாது. வேட்டைநாயின் உறுதியும் ஓட்டமும் எம் மனதுக்குத் தேவை. தனித்து நின்று தான் துரத்திய பொருளைக் கவர்ந்து கொண்டு வரும் நாய் போன்ற வீரம் எமக்கு வேண்டும். எதிர்ப்பைச்சமாளித்து எண்ணியதை இழுத்து வரும் நாயின் திண்ணம் இருக்க வேண்டும்.

எம்மிடம் எத்தனையோ சிறப்புகள் இருந்தும், சில இடர்பாடு ஏற்பட்டதும் சீசீ, இந்தப் பழம் புளிக்கும் என்று திரும்பி விடுகிறோம். நாம் நாயைப் போல் காத்திருக்க வேண்டும். நரியைப் போல ஏமாந்து போய் விடக்கூடாது. நாம் முயற்சி செய்யும்போது இது கிடைக்குமா? கிடைக்காதா? என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எந்த வெற்றிக்கும் சிந்தனை, திட்டம், முன் யோசனை ஆகிய மூன்றும் தேவை. இந்த மூன்றும் இணைந்துதான் வெற்றிக்கு வழிவகுக்கும். பணத்தையோ, பதவியையோ, புகழையோ தேடிய பணக்காரர்களைக்கவனித்தால் வருந்தி வருந்தி நீண்ட காலம் உழைத்த பின்னரே தற்சமயமுள்ள மதிப்பை அடைந்திருப்பதைக் காண முடியும்.

> எந்தப் பிரச்சினையையும் நாம் திறந்த மனதுடன் ஆராய முன் வந்தால் எமக் குப்புதிய புதிய சிந்தனைகள் பிறக்கும். போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று எண்ணிவிடாமல் புது முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும்.

தைரியசாலியும் புத்திசாலியுமான ஒரு மனிதன் வலுவாக எண்ணத் தொடங்கிய காரணத்தால் அவனுக்குப்பின் வாழும் மக்கள் உண்மைகளை நம்பத் தொடங்கினார்கள். தனி மனிதன் கொண்ட நம்பிக்கை, பல கோடி மக்களின் நம்பிக்கையாகப் பரிணமிக்கிறது.

கோடீஸ்வரரான ஹென்றிஃ போர்டு மோட்டார் உலகத்தின் மாமன்னன். நடக்க முடியாத ஒன்றை நடத்திக் காட்டினார். வாணிப மனம் படைத்தவர் தன் மனத்தின் திண்மையிலும், மதியின் திறத்திலும், வெற்றியிலும் நம்பிக்கை உள்ளவர். உலக முழுமைக்கும் தனது நிறுவனத்தின் மோட்டார்களைச் செய்து செல்வச் செழிப்புக்கு வித்திட்டவர். எந்தப் பிரச்சினையையும் நாம் திறந்த மனத்துடன் ஆராய முன் வந்தால் எமக்குப்புதிய புதிய சிந்தனைகள் பிறக்கும். போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று



எண்ணிவிடாமல் புது முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும். புதிய பாதை வகுக்கத் துணிந்தால் பரந்த மனத் தோடும், சிறந்த அறிவோடும் பாடுபட்டால் வெற்றி நிச்சயம். எதை நம்பி எதற்காக முயற்சி செய்கிறோமோ அதை அடைந்தே தீருவோம். இது நான்கு மறையின் தீர்ப்பு. வீட்டின் கூரை, விட்டம் ஆகியவற்றை கற்தூண் தாங்குவது போன்று எம் இலட்சியம் - குறிக்கோள் ஆகியவற்றை ஆசையென்னும் தூண்கள் தாங்கிக் கொள்ளும் படிச்செய்யவேண்டும். வெற்றியாளர்களின் வாழ்க்கையிலே நாம் காண்பது வாழ்வா, சாவா என்பதுதான்.

பாலிலிருந்துதானே வெண்ணெயும், நெய்யும், தயிரும், மோரும் கிடைக்கின்றன. இந்த நான்கு பொருள்களையும் தேடி அலைவதற்குப் பதிலாக எமக்குப் பாலே கிடைத்து விட்டால் மற்ற நான்கையும் பெறுவதற்கு மார்க்கம் கிடைத்துவிடும். பால் எமக்கு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் பணம். பணம் தேடிப்பணக்காரனாக ஆசைப்படுவதும் தவறில்லை. ஆசையே இல்லையென்றால் வாழ்க்கையே போர் அடித்து விடும்.

ஆசை வேட்கை தான் எம்முடைய மூளை, நரம்புகளைத் தட்டி விட்டு மூளையைச் சிந்திக்க வைக்கின்றது. ஆசைப்படா விட்டால் சிந்தனை செய்ய வேண்டிய மூளையின் நரம்புகள் வேலையின்றி உற்சாகம் இழந்து ஓய்ந்து விடும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# தனுஷ் படத்தில் அமலா பால்

ஒரு புறம் நடிப்பதில் பிஸியாக இருந்தாலும் இன்னொருபுறம் நல்ல வித்தியாசமான கதைகளைத் தேடிக் கண்டு பிடித்து அதைப் படமாக்குவதிலும் கவனம் செலுத்தி வருகிறார் தயாரிப்பாளர் தனுஷ். 2015 இல் வெற்றிமாறனுடன் தனுஷ் இணைந்து தயாரித்த "காக்கா முட்டை" உலகளவிலான கவனத்தைப் பெற்றது. அந்தப் படத்தைத் தொடர்ந்து இப்போது "அம்மா கணக்கு" என்ற புதிய படத்துக்குப் பூசை போட்டிருக்கிறார் தனுஷ்.

சமுத்திரக்கனி, அமலா பால், ரேவதி ஆகியோர் இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள். அஸ்வினி ஐயர் எனும் பெண் இயக்குனர் இயக்கும் "அம்மா கணக்கு" படத்துக்கு "ஜிகர்தண்டா" புகழ் கேவ்மிக் யு ஆரி ஒளிப்பதிவு செய்கிறார். படம் குறித்த ஏனைய தகவல்களுடன் கூடிய அதிகாரபூர்வ செய்தி விரைவில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.







## எவ்வளவு நிறை?



காட்டுவழிசென்றஆசிரியர் ஒருவரைப் பிடித்துக் கொண்டனர் கொள்ளைக் கூட்டத்தினர். அவர் கணித ஆசிரியர் என்று தெரிந்து கொண்ட அந்தக் கூட்டத்தின் தலைவன் ஆசிரியருக்கு ஒரு சோதனை வைத்தான். தனது கையில் இருக்கும் பூசணிக்காயின் நிறையை அவர் சரியாகக் கூறினால் விடுதலை என்றும், சரி பார்க்கையில் தவறாக இருந்தால் தலையை எடுத்து விடுவதாகவும் கூறினான். அப்போது ஆசிரியர் சொன்னார், பூசணிக்காய் உனது தலையின் நிறையளவு இருக்கும் என்றார். கொள்ளையர் கூட்டம் குழப்பத்தில் தலையைச் சொறிய ஆரம்பித்தனர்.

படித்ததில் பிடித்தது

Jino Keerththana @Jino_Offl 9h

போராட்டம் நிறைந்த வாழ்க்கையில் மனிதனின் வற்றாத ஆசைகளே வாழ வேண்டும் என்பதை தினமும் நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன.

ஜானகிராமன் @saattooran

எண்ணுவதெல்லாம்
உயர்வைப் பற்றியே
எண்ண வேண்டும்
அந்த உயர்வு கைகூடாவிட்டாலும்
அவ்வாறு எண்ணுவதை விடக் கூடாது.

தலையில் பெரிய கட்டுடன் டாக்டரை பார்க்க வந்தார் நம்ம நாராயணசாமி.
"தலையில ஏன் கட்டு போட்டுருக்கீங்க?"
"என் மனைவி வாழைப்பழ தோல் வழுக்கி கீழே விழுந்துட்டா டாக்டர்"
"அதுக்கு உங்க மனைவிதானெ கட்டு போடணும்... நீங்க ஏன் போட்டுருக்கீங்க?"
"அவள் கீழ விழுந்ததைப் பார்த்து கொஞ்சம் சத்தமா சிரிச்சிட்டேன் டாக்டர்"

Like Comment Share 190 12 53






# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மனதிலும், உடலிலும் புத்துணர்வு நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய முயற்சியில் ஈடுபட்டு, இலாபம் காண்பீர்கள். பெண்கள் சிக்கனத்தால் சேமிக்க முயல்வர். விரும்பிய பொருள் வாங்கி மகிழ்வீர்கள்.

**இடபம்:** உறவினர்களின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. பணக் கடனில் பெரும் பகுதியைச் செலுத்துவீர்கள்.

**மிதுனம்:** நண்பர் வியக்கும் விதத்தில் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்திகரமாகும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். புத்திரர் படிப்பில் முன்னேற்றம் பெறுவர்.

**கடகம்:** எதிர்கால வாழ்வு சிறக்க பணியாற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். சுப விடயத்துக்கு உறவினர் ஒத்துழைப்பர். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**சிங்கம்:** நண்பர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். குடும்பத்தினர்களின் ஆதரவு நம்பிக்கையளிக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**கன்னி:** திட்டமிட்ட பணி நிறைவேறுவதில் தாமதம் உண்டாகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் பணம், நகை இரவல் கொடுக்க, வாங்கக் கூடாது. பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும்.

**துலாம்:** மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்ப முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவீர்கள். தொழிலில் தடை விலகி, வருமானம் அதிகரிக்கும். பெண்கள் ஆடம்பரப் பொருள் வாங்குவர்.

**விருச்சிகம்:** நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். குடும்பத் தேவைக்கு தாராளமாகச் செலவழிப்பீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**தனுசு:** எதிலும் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழிலில் முயற்சிக்கேற்ற முன்னேற்றம் கிடைக்கும். குடும்பச் செலவுக்குப் பெண்கள் திண்டாட நேரிடும். உறவினர்களின் உதவி கிடைக்கும்.

**மகரம்:** பொது விடயங்களில் அக்கறை உண்டாகும். கூடுதல் உழைப்பால் தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். பெண்கள், சேமிப்புப் பணத்தில் செலவு செய்வர். உடல்நலனில் அக்கறை தேவை.

**கும்பம்:** அன்றாட பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக உயரும். எதிரி இடம் தெரியாமல் விலகிச் செல்வர். பிள்ளைகளின் வளர்ச்சி பெருமையளிக்கும்.

**மீனம்:** கௌரவத்துக்காகச் செலவழிக்க நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப்படும். பூர்வீகச் சொத்து மூலம் ஆதாயம் கிடைக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | 7 | | | 3 |
| | 5 | | | 4 | | | | |
| 9 | | | | | | | 6 | 7 |
| | | | | 3 | | | 2 | 5 |
| | | | | | 1 | | 7 | |
| | 8 | | | 9 | | | | |
| 1 | 3 | | 4 | | | | 9 | |
| | | 8 | | | 5 | | | |
| | | | | 1 | | | | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 5 | 2 | 4 | 7 | 6 | 8 | 3 |
| 2 | 3 | 8 | 6 | 1 | 5 | 9 | 4 | 7 |
| 7 | 4 | 6 | 9 | 8 | 3 | 2 | 1 | 5 |
| 6 | 8 | 7 | 3 | 9 | 1 | 4 | 5 | 2 |
| 4 | 5 | 2 | 7 | 6 | 8 | 1 | 3 | 9 |
| 3 | 9 | 1 | 5 | 2 | 4 | 7 | 6 | 8 |
| 8 | 2 | 9 | 1 | 5 | 6 | 3 | 7 | 4 |
| 1 | 7 | 4 | 8 | 3 | 2 | 5 | 9 | 6 |
| 5 | 6 | 3 | 4 | 7 | 9 | 8 | 2 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 700 | 650 | 500 |
| நண்டு | 250 | 400 | 400 | 400 | 300 | 200 | – |
| கணவாய் | 600 | 600 | 600 | 450 | 600 | 650 | – |
| பாரை | 450 | 500 | 600 | 600 | 500 | 400 | 400 |
| சுறா | 300 | 600 | 600 | – | 600 | 600 | – |
| சீலா | 250 | 400 | 500 | 500 | 400 | 300 | 400 |
| விளை | 500 | 500 | 300 | 600 | 450 | 500 | 400 |
| முரல் | 250 | 400 | 400 | 400 | 300 | 300 | – |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 | 300 | 200 | 300 |
| கிழாக்கன் | 400 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 300 | 350 | 300 | – | 450 | 400 | 300 |
| திரளி | 200 | 250 | 200 | 250 | 300 | 200 | – |
| நகரை | 150 | 300 | – | 250 | 300 | 150 | 350 |
| சூடை | 130 | 100 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 200 | 250 | 250 | 200 | 300 | 150 | 200 |
| திருக்கை | 150 | 350 | 250 | 300 | 300 | 300 | 150 |
| மதனம் | 250 | 250 | 220 | 300 | 280 | 400 | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 100 | .300 | 300 | 400 | 400 | – | – |
| வாழை | 150 | 150 | – | 400 | 300 | 200 | 200 |

# இது புதுசு

## எனாமல் வேலைப்பாடுகள் பரிசுப்பொருள்கள்



எனாமல் வேலைப்பாடுகள் செய்த பரிசுப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகிறது. செப்பு உலோகத்தால் கண்ணாடி, சீப்பு உருவாக்கப்பட்டு, அழகிய கலைநுட்ப எனாமல் வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் விலை 900 முதல் 1,000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

## நாளை

தை-05
செவ்வாய்க்கிழமை 19.01.2016
திதி: தசமி பி.ப.01.23
நட்சத்திரம்: கார்த்திகை மு.இ.10.49
ராகுகாலம்: 03.35-05.05 வரை
சுபநேரம்: 11.05- 12.35 வரை

# சமைப்போம் வாங்க
## கருணைக்கிழங்கு கறி



**செய்முறை:**

ஒரு சட்டியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் வெங்காயம் சேர்த்து வதக்கவும். வதங்கியவுடன் தக்காளி, கிழங்கைச் சேர்த்து வதக்கவும். பின்பு குடை மிளகாய் சேர்த்து அத்துடன் உப்பு, மஞ்சள் தூள், மிளகாய்த்தூள், மசாலா தூள் சேர்த்து சிறிது தண்ணீர் சேர்த்துக் கொதிக்க விடவும். தண்ணீர் வற்றியவுடன் இறக்கவும்.

**தேவையானவை:**

கருணைக்கிழங்கு – கால் கிலோ
வெங்காயம், தக்காளி – தலா 2
குடை மிளகாய் – 1 (அனைத்தையும் நீளவாக்கில் நறுக்கிக் கொள்ளவும்).
உப்பு, மஞ்சள் தூள், மிளகாய் தூள் , மசாலா தூள்,
எண்ணெய் – தேவைக்கேற்ப



# வீட்டில் நாய் வளர்க்க ஆசையா?

எந்த அளவுக்கு உங்கள் குழந்தைகளைப் பராமரிக்கிறீர்களோ, அதே கவனத்தை வீட்டு நாய்களுக்கும் கொடுக்க வேண்டியது அவசியம். அவற்றின் வயதுக்கு ஏற்ற தடுப்பு மருந்துகளும் உணவும் கொடுக்க வேண்டும். ஒரு வருடத்துக்கு 11 தடுப்பூசிகள் போட வேண்டியிருக்கும். நாய்களின் கழிவுகளை சரியாக சுத்தம் செய்யாவிட்டால் அதில் உள்ள தட்டைப்புழு, குடற்புழு ஆகியவை நகக்கண்களின் வழியாக சென்று நமது மூளையைத் தாக்கிவிடும். அதனால் வலிப்பு நோய் வருவதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

சில நேரங்களில் நாய்களுக்கு பால், தயிர் சாதங்களால் ஒவ்வாமை ஏற்படும். ஜீரண சக்தி குறைந்து போய்விடும். எந்நேரமும் தங்கள் உடலை கடித்துக் கொண்டிருப்பது, சொறிவது என அவஸ்தைப்படும். அதனால் பால் சாதம் தவிர்க்கலாம். அதன் உடலில் ஏற்படும் உண்ணி தாக்குதலில் இருந்து அவ்வப்போது சுத்தம் செய்து விட வேண்டும். இல்லையென்றால் மஞ்சள் காமாலை தொற்று ஏற்பட்டு விடும். நாயின் ஆரோக்கியம் நம் ஆரோக்கியமும் கூட!



# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 120 | 60 | 60 | 40 | 40 |
| கத்தரி | 150 | 100 | 160 | 170 | 140 | 120 | 110 | 160 |
| கரட் | 180 | 240 | 200–400 | 180 | 160–280 | 320 | 240 | 280 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 60 | 30 | 30 |
| பயிற்றை | 200 | 200 | 160 | 140 | 120–130 | 140 | 110 | 200 |
| பாகல் | 180 | 200 | 160 | 160 | 140–160 | 300 | 140 | 250 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 80 | 60–80 | 120 | 60 | 70 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 80 | 90–100 | 90 | 55 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 140 | 110–120 | 140 | 100 | 160 |
| பூசணி | 50 | 50 | 60 | 50 | 40–50 | 60 | 40 | 50 |
| தக்காளி | 80 | 80 | 80 | 60 | 50–60 | 60 | 55 | 40–50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 50–60 | 30 | 50 | 40 |
| கீரை | 30 | 30 | 40 | 30 | 30–40 | 40 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 50 | 30 | 30 | 10 | 15 |
| பச்சை மிளகாய் | 400 | 300 | 400 | 320 | 300–340 | 600 | 250 | 400 |
| புடோல் | 120 | 120 | 100 | 100 | 80–100 | 120 | 40 | 80 |
| கோவா | 100 | 170 | 160 | 140 | 100–120 | 160 | 55 | 80 |
| வெண்டி | 180 | 120 | 120 | 120 | 100–140 | 120 | – | 120 |
| போஞ்சி | 200 | 240 | 240 | 160 | 180–200 | 260 | – | 200 |
| லீக்ஸ் | 120 | 160 | 120 | 160 | 100–120 | 120 | 110 | 120 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40–50 | 40–50 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 | 70 | 70–80 | 60 | 50 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 120 | 80–100 | 40 | 60 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 300 | 280 | 400 | 230 | 300 | 400 | – | 300 |
| இராசவள்ளி | 120 | 120 | 160 | 120 | 160–140 | 120 | 110 | 100 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நுட்பம்




## எல்ஜியின் ஜி5 விரைவில்

எல்ஜி நிறுவனம் தனது புதிய தொடுதிரைக் கைப்பேசியான ஜி5 ஐ விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

அடுத்த மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள மொபைல் வேள்ட் கொங்கிறஸ் நிகழ்வில் இந்தக் கைப்பேசி அறிமுகம் செய்யப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் சிறப்பம்சங்களாக 5.6 அங்குல அளவுடையதும், 2560 மு 1440 பிக்சல் தீர்மானம் உடைய தொடுதிரை, குவாண்டம் 820 புரஸசர், பிரதான நினைவகமாக 4ஜி.பி. நினைவகம், 64ஜி.பி. சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

இவை தவிர 20 மெகா பிக்சல்களை உடைய பிரதான கமரா, 8 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

## ஐ.எஸ்.ஓ 9.3 பீற்றா வெளியானது

அப்பிள் நிறுவனமானது ஐ.எஸ்.ஓ 9.3 இயங்குதளத்தின் பீற்றா பதிப்பை சோதனைக்காக வெளியிட்டுள்ளது.

எனினும் இதனைப் பயன்படுத்துவதற்கு அப்பிளின் பப்ளிக் பீட்டா டெஸ்ட்டிங் புரோகிராமில் இணைவது அவசியமாகும், அல்லது பதிவு செய்யப்பட்ட மேம்பாட்டாளராக ஆக இருத்தல் வேண்டும்.

இப்புதிய பதிப்பில் நைற் சிவ்ற் மொட் எனும் புதிய வசதி,வைபை அசிற் இற்கான புதிய வசதி என்பன உட்பட மேலும் சில புதிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இதன் அசல் பதிப்பு எப்போது வெளியிடப்படும் என்ற தகவலை அப்பிள் நிறுவனம் இதுவரை தெரிவிக்கவில்லை.




## மைக்ரோ சொப்டின் பிரமாண்ட மாநாடு

மைக்ரோசொப்ட் நிறுவனம் மைக்ரோசொவ்ற் பில்ட் 2016 எனும் மேம்பாட்டாளருக்கான (டெவெலப்பர்) மாநாட்டை மிகவும் பிரமாண்டமாக நடத்தவுள்ளது.

எதிர்வரும் மார்ச் 30ஆம் திகதி மற்றும் ஏப்ரல் 1ஆம் திகதிகளில் சான்பிரான்ஸிஸ்கோவில் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில் கலந்துகொள்ள விரும்பும் பிரபல தொழில்நுட்ப நிறுவனங்கள் முன்பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

இதனை் இம்மாதம் 19ஆம் திகதி முதல் மேற்கொள்ள முடியும் என மைக்ரோசொப்ட் நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த மாநாட்டில் கிளவுட் தொழில்நுட்பம், மொபைல் தொழில்நுட்பம் என்பனவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்படவுள்ளதுடன், மேலும் பல புதிய தொழில்நுட்பங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

## புதிய

நாட்டின் இறைமை மக்களுடையதாகும். இறைமையை உள்ளடக்கும் அடிப்படை விடயம்தான் அரசமைப்பு. புதிய அரசமைப்பை உருவாக்க முழு நாட்டையும் ஒன்றிணைக்க வேண்டும் என்பதுடன், மக்கள் கருத்தைக் கோரும் வேலைத் திட்டமும் உருவாக்கப்பட வேண்டும்.

அது உருவாக்கப்பட்டுள்ளது. அரசமைப்பு நிறைவேற்றும் போது நாடாளுமன்றத்தில் அனைவரும் இணைந்தே நிறைவேற்றவேண்டும். நாட்டுக்கு அரசமைப்பு அவசியமானதாகும். அரசமைப்பு தொடர்பில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதால் அது பற்றி சில கருத்துக்கள் தெரிவிக்க வேண்டியுள்ளது.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்டது தற்போதுள்ள நிறைவேற்று முறைமையுடன் கூடிய ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காகும். ஆனால், அது தொடர்பில் கட்சிகள் ஒவ்வொரு நிலைப்பாட்டில் இருந்தன.

நாங்கள் 19ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றிய பின்னர் நிறைவேற்று முறைமையை ஒழிக்கும் யோசனை தயாரித்து நீதிமன்றத்திற்கு அனுப்பினோம். நீதிமன்றம் சொன்னது இதற்கு மேல் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்க முடியாது. அதற்கு மக்கள் அபிப்பிராயம் அவசியம் என்று. இதன் காரணமாக முடியாது போனது.

தேசிய அரசு அமைக்கப்பட்டதன் பின்னர், அரசமைப்பொன்றை தயாரிக்கத் தீர்மானித்தோம். சோபித தேரரும் புதிய அரசமைப்பொன்றைக் கொண்டுவர இணங்கினார். அவரின் இறுதிக்கிரியையில் ஜனாதிபதியும் நிறைவேற்று முறைமை ஒழிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதனை நடைமுறைப்படுத்தத்தான் நாங்கள் நடவடிக்கையெடுத்து வருகின்றோம். இலங்கை வரலாற்றில் அரசமைப்புகள் உருவாக்கப்பட்டதைப் பார்த்தால், சோல்பரி ஆணைக்குழுவின் இரண்டு சபைகள் இருந்தன. அதற்கு எல்லோரும் இணங்கவில்லை. ஆனால், எல்லோரும் பங்குபற்றினர்.

1971இல் திருமதி பண்டாரநாயக்க அரசமைப்பை உருவாக்கும் போது, இவ்வாறு தான் அரசமைப்புச் சபையொன்றை உருவாக்கினார். அதிலும் எல்லோரும் பங்குபற்றினர். நாங்களும் கருத்துத் தெரிவித்தோம். ஆனால், எங்களின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. என்றாலும் கருத்து வெளியிட உரிமை இருந்தது. அப்படித்தான் அந்த அரசமைப்பு நிறைவேற்றப்பட்டது.

1978ஆம் ஆண்டு நாடாளுமன்றில் நானும் இருந்தேன். அப்போதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இருந்தன. அன்று உருவாக்கப்பட்ட அரசமைப்பு தோல்வியின் காரணமாக எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கத்தை ஒன்றிணைத்து நாடாளுமன்றத்தை செயற்படுத்த முனைந்தபோது அவர், தனி இராச்சியம் ஒன்றை அமைப்பதற்கே எங்களுக்கு மக்கள் ஆணை உள்ளது என்று கூறினார்.

இதன் காரணமாக ஐ.தே.கவும், சு.கவும் இணைந்து ஒரு தெரிவுக்குழுவை அமைத்தோம். அத்துடன், நாட்டின் எதிர்க்கட்சி கலந்துகொள்ளாமல் அரசமைப்பை உருவாக்க பெரியளவில் சக்தியொன்று திரண்டால் அது தொடர்பில் தீர்மானிக்கப்படும். அப்போது நாங்கள் மக்கள் கருத்து கோர வேண்டும் என்று தீர்மானித்து 1982 ஆம் ஆண்டு மக்கள் கருத்தும் கோரப்பட்டது.

13ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டபோது சர்வ கட்சிகளைக் கூட்டி எல்லோரையும் ஒன்றிணைத்து இதனை நிறைவேற்றிக்கொண்டோம். ஒருசில கட்சிகள் வரவில்லை. எனவே, தற்போது தேவையாக உள்ளது அனைவரையும் ஒன்றிணைத்து செயற்படவேண்டும் என்பதாகும்.

நிறைவேற்று முறைமையை ஒழிப்பது தொடர்பில் நான் கட்சித் தலைவர்களுடன் பல தடவைகள் பேச்சுகள் நடத்தினேன். இதில் இணக்கப்பாடு எட்டப்பட்டது. கடந்த வருடம் நவம்பர் 16ஆம் திகதி இது தொடர்பில் அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் நிறைவேற்று முறையை ஒழிக்க புதிய தேர்தல் முறைமை கொண்டுவர தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் அமைச்சரவைக் குழுவொன்று அமைக்க தீர்மானிக்கப்பட்டது. அதன்மூலம் எவ்வாறு தேர்தல் முறைமையை மாற்றுவது என ஆராய யோசனைகள் முவைக்கப்பட்டன. அதில் பிரதமரான நான் தலைவராகவும், நிமல், கிரியெல்ல, ரவூப் ஹக்கீம், சுசில், ரிசாத், சம்பிக்க, விஜேதாஸ ராஜபக்ச, சுவாமிநாதன், மனோ கணேசன், மலிக் சமரவிக்கிரம போன்றோர் நியமிக்கப்பட்டனர்.

அத்துடன், ஜயம்பதி விக்கிரம ரத்னவுடன் பல்வேறுபட்டவர்கள் இந்த வேலைத்திட்டத்தில் ஈடுபட்டனர். இவைதான் விசேடமாக பேசப்பட்டன.

நாடாளுமன்றத்தை அரசமைப்பு சபையாக மாற்றிய பின்னர் மக்களின் கருத்துகள் கோரப்பட்டு புதிய அரசமைப்பொன்றை உருவாக்க முடியும்.

தற்போது எவ்வாறு உருவாக்குவது என்பது தொடர்பில் ஒரு நிலைப்பாட்டுக்குவரும் வேலைப்பாடே நடைபெறுகிறது. அரசமைப்பின் 74ஆவது பந்தியின் அடிப்படையில்தான் நாடாளுமன்றத்தை அரசமைப்பு சபையாக மாற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. மக்கள் கருத்துகளை அறிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள் ளது. அவர்களுக்கு மூன்றுமாதம் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஏப்ரல் மாதமளவில் அதைச் சமர்ப்பிக்க வேண்டும்.

கடந்த 9ஆம் திகதி நான் நாடாளுமன்றத்தை அரசமைப்பு சபையாக மாற்றும் பிரேரணையை முன்வைத்த பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் தாங்கள் யோசனைகள் முன்வைக்கவேண்டும் எனத் தெரிவித்தனர். அமைச்சரவை அனுமதியைப் பெற்ற பின்னர்தான் நான் பிரேரணையை சமர்ப்பித்திருந்தேன். திருத்தங்களை எவரும் முன்வைக்க முடியும். அரசமைப்புச் சபையாக மாற்ற யோசனைகள் முன்வைக்க எல்லோருக்கும் அனுமதியுண்டு.

இது அரசமைப்பொன்றை உருவாக்கும் மார்க்கம் மட்டும் தான். வேறொன்றும் இல்லை. அரசமைப்பு எப்படி இருக்கும் என்று எவருக்கும் தெரியாது. தற்போது இதைச் செய்யமுடியாது என்று ஜீ.எல்.பீரிஸ் போன்றோர் ஊடகங்களில் பரப்புரை மேற்கொள்கின்றனர்.

சிலர் சொல்கின்றனர் ஒருமைப்பாடு, பௌத்த மதம் போன்றவை இல்லாமல் போகும் என்று. இது தொடர்பில் இன்னமும் முழுமையாக ஒன்றும் பேசவில்லை. மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கு முன்னர் நாட்டின் ஒருமைப்பாடு இல்லாமல் போகும், பௌத்தமதம் இல்லாமல் போகும் என்று கூறுகின்றனர். அதைப்பற்றி பின்னர் பேசுவோம். தற்போது சபை மட்டும்தான் உருவாக்கப்படுகிறது.

எல்லோரும் அரசமைப்பின் 6ஆவது பந்தியின் அடிப்படையில்தான் செயற்படவேண்டும். நாட்டைப் பிரிக்க முடியாது.

நானும் ஒரு பௌத்தன். நான் சிங்களவன். நாம் இலங்கையர்கள். இந்த நாட்டை ஒன்றிணைக்கவேண்டும். முன்னோக்கிச் செல்லவேண்டும். சிலர் குழப்ப முயற்சிக்கின்றனர். மக்களின் தேவைகளை நிறைவேற்ற எனக்கும், ஜனாதிபதிக்கும்தான் மக்கள் அதிகாரத்தைக் கொடுத்துள்ளனர். வேறு எவருக்கும் இல்லை.

18ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்து நாட்டை ஏகாதிபத்தியத்துக்கு இட்டுச்சென்றனர். அரசமைப்பை உருவாக்க வலைத்தளங்களிலும் இளைஞர்களிடமும் கருத்து கோரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இளைஞர்கள்தான் வாழப்போகின்றனர். அவர்களுக்குப் பல்வேறு கருத்துக்கள் இருக்க முடியும்.

தொலைநகல், டுவிட்டர் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் பொதுமக்களின் கருத்துக்கள் உள்வாங்கப்படவுள்ளது.உலகில் முதற் தடவையாக இவ்வாறு சமூக வலைத்தளங்கள் ஊடாக பொது மக்களின் கருத்துக்கள் பெறப்பட்டு அரசியலமைப்பை உருவாக்கும் நாடாக இலங்கை அமையப் போகின்றது.

இன்னும் 5 அல்லது 40வருடங்களில் என்ன வேண்டும் என்பதை அவர்கள்தான் தீர்மானிக்கவேண்டும்.

விசும்பாய மக்களின் கருத்துகளைக் கோர கொடுக்கப் பட்டுள்ளது. எல்லோரும் அங்கு தமது கருத்துகளைத் தெரிவிக்கமுடியும். புதிய முறையில் நாட்டை ஒன்றிணைத்துச் செயற்பட வேண்டும். வீட்டில் முடங்கிக் கிடக்க முடியாது. உலகம் எங்களைப் பார்த்துக்கொண்டிருக்கின்றது. இந்த 21ஆம் நூற்றாண்டின் அரைபாதிக்கு ஏற்றவாறு புதிய அரசமைப்பொன்றை உருவாக்க வேண்டும்.

அந்த அரசமைப்பு மக்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு உருவாக்கப்படவேண்டும். இந்த வேலையை 1977ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்தன எங்களிடம் கொடுத்தார். நல்ல அரசமைப்பொன்றை கொண்டுவந்தோம். ஆனால், அதில் ஜனநாயகம் தொடர்பில் எழுந்த பிரச்சினை காரணமாகவே இது நிலைபெறவில்லை. தற்போது உங்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டுள்ளது. - என்றார். (த-வ-சி)

## 3 இந்திய

துறை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, பின்னர் தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை உதவிப் பணிப்பாளர் பா.ரமேஸ்கண்ணா தெரிவித்தார்.

தமிழ்நாடு புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த 3 மீனவர்கள் ஒரு படகில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட போது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 3 மீனவர்களையும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது, குறித்த 3 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 29ஆம் திகதிவரை மறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

அத்துடன், நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் இன்னும் யாழ்ப்பாணத்திலேயே உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விரைவில் இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும் கூறப்பட்டுள்ளது. (வ-4,106)

## மைத்திரி

வருகின்றனர்.எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பெரும் சவாலாக அமையும் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிளவடைந்து தேர்தலில் போட்டியிட்டால் அது ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்கு வழியமைத்து விடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக, மகிந்தவையும் மைத்திரியையும் இணைக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருவதாக தெரிவித்துள்ள அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, சில சுற்று பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார் என் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## ஜனவரிக்குள்

விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சம்பவம் இடம்பெற்ற தினத்தில், நாமல் ராஜபக்ச கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்களுடன் தொலைபேசியில் தொடர்பில் இருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

தாஜுதீனை கொலை செய்யுமாறு உத்தரவிட்டவர்கள் யார் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தொழில்நுட்பரீதியிலான ஆதாரங்களின் அடிப்படையில் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாரியார் சிரந்தி ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, லெப்டினன் யோசித ராஜபக்ச ஆகியோரின் மெய்ப்பாதுகாவலராக பத்து ஆண்டுகள் கடமையாற்றிய கப்டன் திஸ்ஸ உள்ளிட்ட ஆறு சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த ஆறு சந்தேக நபர்களும் நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளது என அதில் கூறப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### பிரம்மஸ்ரீ மகா கணபதீஸ்வர குருக்கள் பாஸ்கரக் குருக்கள்

நேற்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை உதயன் பத்திரிகையில் 6ஆம் பக்கத்தில் வெளிவந்த மேற்படி மரண அறிவித்தலில் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் மற்றும் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயங்களின் பிரதமகுரு விக்னேஸ்வரக் குருக்களின் பெயர் தவறுதலாகச் சேர்க்கப்படவில்லை. எனவே அந்தப் பெயரையும் சேர்த்து வாசிக்கவும் என அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### சின்னத்தம்பி துரைராசா(இராசா)

மஞ்சத்தடி தெற்கு , இணுவிலைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி துரைராசா 16.01.2016 காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், சோதிப்பிள்ளை, இராமநாதன், லில்லிமலர், ஞானமணி ஆகியோரின் அன்புச் சகோ தரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா, தம்பிமுத்து, சிவப்பாக்கியம், சின்னத்துரை, வல்லிபுரம் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சாரதா தேவி மற்றும் சுசீலாதேவி, தபானந்தன் (ஆசிரியர், கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்), கருணானந்தன்(UK) ஆகியோரின் சிறிய தந்தையும் பாலசுப்பிரமணியம்(ஓய்வுபெற்ற பொறியியலாளர் காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத் தாபனம்) , சந்திரலோசினி, குலதினி(UK), சுந்தர லிங்கம்(UK), சண்முகலிங்கம்(ஓய்வுபெற்ற ஆசிரியர்) , தேவ சேனா(France), காலஞ்சென்ற இந்திரசேனா மற்றும் சிவநேசலிங்கம்(France), விஜயசேனா (France), பதுமசேனா(France) , அமிர்தலிங்கம் (France), காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் பேராசிரியர் மகேஸ்வரன் (பேராதனைப்பல்கலைக்கழகம்),மனோகரன்(Germany), பாக்கியலட்சுமி, கதிரமலை(Germany) ஆகியோரின் மாமனாரும் இளமயூரன்(Holand), பரந்தரன்(France), அனுசா, காலஞ்சென்ற சனாதன் மற்றும் சிறீசாம்பவி(Allians Finance Thirunelvely), பிரசாந்தன்(N.S.B Jaffna), ஸ்ரீஷணனீ, ரூசிகா( சமூகவியல் துறை 2 ஆம் வருடம் யாழ் பல்கலைக்கழகம்), துளசிகா( A/L 2016 யா/ இணுவில் மத்திய கல்லூரி), ஆரூரன்(UK), ஆர்த்திகா(UK) ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2016) திங்கட்கிழமைமுற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கமலாம்பிகை பவனம்
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்:-
குடும்பத்தினர்.
021 224 1619



தோற்றம்
26 . 08 . 1989

மறைவு
14 . 01 . 2016

### மகேந்திரதாஸ் மயூரதன்

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் துர்க்காபுரம் தெல்லிப் பழையை வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரதாஸ் மயூரதன் 14.01.2016 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2016) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் மல்லாகம் லிந்துப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.


(67740) (13.15)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### நாகநாதர் சிவகுரு நடராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்- யாழ்.கோண்டாவில் சி.சி.தமிழ் கலவன் பாடசாலை)



குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதர் சிவகுரு நடராசா 15.01.2016 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - செல்லம் தம்பதிகளின் அன்பு மகனும்,காலஞ்சென்ற நாகலிங்கம், தம்பிஐயா, விஸ்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்றவர்களான மாணிக்கம் - தங்காள் தம்பதியரின் மருமகனும், அன்னமுத்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, நாகரஞ்சனி மற்றும் கனடாவில் வசிப்பவர்களான நாகேஸ்வரன், நாகேந்திரன், நாகநாதன், நாகராசா, நாகபூசணி (இலங்கை), நாகராணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனடாவில் வசிப்பவர்களான ஜெயந்தி, சற்குணராணி, குணாயினி, விசாலினி, செல்வச்சண்முகதாசன், குலத்துங்கசேகரம் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அருண்- சாமினி, அஜந்தன், கிருத்திகா, சங்கீதா, தவநீதன் - வித்யா, லோகேஸ்வரன் - சுவானியா, இளங்கீரன், அச்சுதன், துசாந்தி,கிரிசோத்,அபிராம்,திவ்யா, ஆகீசன், ஆருஜன், ஆரதி, நிலன், நிலானிஆகியோரின் அன்புப் பேரனும், விதுலாஸ், ஹர்சாயி, விதுசாயி, ஆவந்திகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


குமரகோட்டம்,
கோண்டாவில்.

(67741)(11,15,16)

தகவல்: ந.நாகேஸ்வரன் (மகன்),
கு.குலத்துங்கசேகரம் (மருமகன்)

தொடர்பு:- 021 205 3602, 077 444 4438

### விசுவாசம் கார்த்திகேசு நடராசா



நெடுந்தீவு கிழக்கு, 13ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவாசம் கார்த்திகேசு நடராசா நேற்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல ஆயுர்வேத வைத்தியர் கார்த்திகேசு - நாகம்மா தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வயானை தம்பதியரின் மருமகனும், வள்ளியம்மையின் கணவரும், கம்ஷவதனி (ஆசிரியை - யா/ நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்), குமுதினி, விந்தன் கனகரத்தினம் (வடமாகாணசபை உறுப்பினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA),றஞ்சினி (பரிசாரகர், ஆதாரவைத்தியசாலை- ஊர்காவற்றுறை),பத்மினி, யோகமலர் (மறைந்த மாவீரர்), வரதராசன், சாந்தினி (மறைந்த மாவீரர்), டெனிஸ்ராஜன் (முன்னாள் உறுப்பினர், கரைச்சிப் பிரதேசசபை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (TNA), சறோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சிறிகணேசராஜா, பெஞ்சமின் யோகராஜா மற்றும் உஷாந்தினி (உஷா), நாகமூர்த்தி, தர்மராசா, ஆனந்தி (உபதபாலதிபர் - நெடுந்தீவு),யசிந்தா, ஜெயபாலன் (பணியாளர், யாழ்.தினக்குரல் பத்திரிகை), நிசாந்தன், நிதர்சன், நிதர்சினி, சஞ்சிகா, ஜீவராஜ், சத்தியராஜன், உஷாந்தினி, நிலோஜினி, ஏஞ்ஜலின் விதுஷா, ஏஞ் ஜலின் லவணிக்கா,ஏஞ்ஜலின் வெரோணிக்கா, மார்க் அன்ரனி, ஜெயராஜ், விதுராஜ், ரமேஷ்ராஜ், ரஜீப்ராஜ், லிவினியா, சரண்ராஜ், பரன்ராஜ், சரணியா, ஆன் டிலஷ்சினி, ஆன் டில்ஷா ஆகியோரின் பேரனும், அபிஷா, தருண் ஆகியோரின் பூட்டனும், காலஞ் சென்றவர்களான திருமதி மேரிதிரேசா அமிர்தம்,திருமதி கனகம்மா, திருமதி சிவகாமிப் பிள்ளை, திருமதி லக்சுமி, திருமதி பொன்னம்மா, நாகலிங்கம், அமரசிங்கம், கிருஷ்ண பிள்ளை, பூவிலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.01.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் நெடுந்தீவு கிழக்கு கட்றான் சல்லி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

13ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு கிழக்கு.

(சி28717)(11,15)

தகவல்:
K.N விந்தன் கனகரத்தினம்
(மகன்- வடமாகாணசபை உறுப்பினர்- யாழ்.திவக அமைப்பாளர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு (TNA)

தொடர்பு:- 077 838 1660, 021 492 6013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

### அமரர் செல்வரத்தினம் பரமேஸ்வரி



கடந்த 19.12.2015 சனிக்கிழமை இறை பதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் செல்வரத்தினம் பரமேஸ்வரி அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (18.01.2016) திங்கட்கிழமை பகல் 11 மணியளவில் நாவலர் வீதியில் உள்ள **தியாகி அறக்கொடை நிறுவனத்தில்** (T.C.T) சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்**

**குடும்பத்தினர்.**

KKBRO
TOUCH YOUR LIFE
CCTV CAMERA



அனர்த்தங்கள் வருமுன் தடுப்போம்
கண்காணிப்பு கமராவின் முன்னோடிகள்
AHD Colour Nightvision Cameras/180 degree Wide Lens Cameras
AHD 1.0MP/1.3MP/HDVR/HD IP/Bullet/Dome/PTZ/CCTV Bullet
Verifocal Lens AHD Cameras/Wireless Cameras/Network NVR's
AHD DVR's & CCTV All Accessories



MICRO PC SYSTEMS
Plug and Play
Wireless IP NVR Kits
Rs. 62500.00
No.218,Hospital Road Jaffna
E-Mail:jaffna@micropcsystems.com
Web:www.micropcsystems.com
Easy payment scheme available HSBC SampathBank
HOTLINE 0773963280/0773039536/0212225893



1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....
யாழ். கலாலயா
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials) Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- மெஹந்தி போடுதல் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-01-2016**
**ஞாயிறு காலை 9.30 மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 25-01-2016**
**திங்கள் காலை 9.30 மணி**

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)







**மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.**
-இயக்குநர்-

## இணைத்

சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக, உள்நாட்டலு வல்கள் அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித் துள்ளார்.

இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் இணைத் தலைவர்களாக, 64 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த மாத முற்பகுதியில் நியமிக்கப்பட்டனர். மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு என 21 ஆயிரம் மில்லியன் ரூபாவை அரசு வரவு– செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்துள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபய வர்த்தன குறிப்பிட்டார்.

இந்தத்திட்டத்தின் ஊடாக, நாட்டின் 14 ஆயிரம் கிராம சேவையாளர் பிரிவுகளிலும் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என அவர் கூறினார்.

அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கும் அதிகாரங்களை வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டதாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரட்ணசிறி தெரிவித்தார்.

ஒவ்வொரு மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுவுக்கும் தலா நான்கு இணைத் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ள னர். அத்துடன் மாகாண முதலமைச்சர் குறித்த மாகாணத்திலுள்ள மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு இணைத் தலைவர்களாகவுள்ளனர். அத்துடன், மாவட்டச் செயலாளர் குறித்த ஒருங்கிணைப்புக் குழுவின் செயலாளராகச்செயற்படுவார்.

மேலும், மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் மத்திய மற்றும் மாகாணஅரசுகளைஒருங்கிணைக்கும் பொறிமுறையாக, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அமைகின்றது.

இதேவேளை, வடக்கில் புதிதாக நியமிக்கப்பட்ட ஒருக்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்கள் வருமாறு:-

யாழ்ப்பாணம், கிளிநொச்சி – இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன். அத்துடன், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா யாழ்ப்பாணத்துக்கும் எஸ்.சிறிதரன் கிளிநொச்சிக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் – அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் ஆகியோருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் வவுனியாவுக்கும், மருத்துவர் சிவமோகன் முல்லைத்தீவுக்கும், சார்ள்ஸ் நிமலநாதன் மன்னாருக்கும் இணைத் தலைவர் களாக நியமனம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(வ)

## பெப்ரவரி

சந்திப்புகள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் தயாரிப்பு வேலைகளில் வெளிவிவகார அமைச்சும், ஜேர்மனி வெளிவிவகார அமைச்சும் ஈடுபட்டுள்ளன. அத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேர்லின் செல்லவுள்ள பிரதிநிதிகள் குழு இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. எனினும், அமைச்சர் பைசர் முஸ்தபா இந்தப் பயணத்தில் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மைத்திரிபால சிறிசேனவின் பயண நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதற்காக, அடுத்த மாத முற்பகுதியில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பேர்லின் செல்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(வ)

**பணியாளர்கள் தேவை**

யாழ் நகர் மற்றும் பருத்தித்துறையில் இயங்கும் தனியார் பஸ் ஆசனப்பதிவு நிலையத்திற்கு ஆசனப்பதிவாளர் உடன் தேவை. மேலும் பலசரக்கு வியாபார நிலையத்திற்கு உதவியாளர் ஒருவரும் தேவை.

தொடர்பு: 021 492 3724

**Suzuki CELERIO விற்பனைக்கு**

NP CAD xxxx தொடர் இலக்கமுடைய **Suzuki Celerio Lxi Automatic 2015 Model 7400km** ஓடியது. சில்வர் நிறம். நல்ல நிலையில் உள்ளது. முதல் சொந்தக்காரருக்கு உரியது. உத்தேசவிலை 2500000

தொடர்பு:
077 028 7693, 077 414 6298

## மரண அறிவித்தல்

### திருமதி யோகலட்சுமி இராசரத்தினம்



அளவெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி யோகலட்சுமி இராசரத்தினம் நேற்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி எய்தி விட்டார்.

அன்னார் இராசரத்தினத்தின் (கட்டையப்பா) அன்பு மனைவியும், வளர்மதி (சுவிஸ்), வசந்தரூபன் (பிரான்ஸ்), வனிதா (பிரான்ஸ்), யசோதரன் (அளவெட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மநாதன் (தபால் ஊழியர், வவுனிக்குளம்), இராசநாயகம் (சாந்தன்) ஆகியோரின் சகோதரியும், நவரத்தினம், இராஜேஸ்வரி, விக்னேஸ்வரி, செல்வரத்தினம், விக்னேஸ்வரன் (C.T.B), ஜெகதீஸ்வரி (லண்டன்), கமலாதேவி (ஆவரங்கால்), சிவமஞ்சு (மிருசுவில்) ஆகியோரின் மைத்துனியும், ஆரணி (சுவிஸ்), ஆரபி (சுவிஸ்), கார்த்திகா (சுவிஸ்), ஐஸ்வரியா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், சிவகுமார்(சுவிஸ்), நவநீதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (19.012016) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத் தில் தகனம் செய் யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **கணவர்**
**ஐயாத்துரை இராசரத்தினம்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 ஆவது

யாற்றிய போதே முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது, அவர் தனது உரையில்:-

புதிய அரசமைப்பை உருவாக்கும் செயற்பாட்டை தற்போதைய அரசு, நேர்மையாக முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன், அரசு முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளை மறைப்பதற்காக, மக்களை ஏமாற்றும் நோக்கில்யோசனைகள்முன்வைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதென்பது நாட்டின் எதிர்காலத்தை மாற்றும் ஒரு நடவடிக்கை என்பதனால், அதில் மக்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில், நான் முன்வைத்த எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கூட புதிய அரசமைப்பு உருவாக்குவதற்கான முன்னெடுப்புக்கள் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். இதற்காக அரசமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து ஆராய்வதற்காக 2011 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை அமைத்திருந்தேன்.

புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதாக இருந்தால், அது பல்வேறு கட்டங்களாக இடம்பெற வேண்டும். அதில் முதல் கட்டமாக நிறைவேற்று அதிகார முறை நீக்கப்படுதல் மற்றும் தேர்தல் முறையில் திருத்தங்கள் மேற்கொள்ளல் ஆகியன இடம்பெற்ற பின்னரே ஏனைய நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும்.

அதேநேரம் புதிய அரசமைப்பை உருவாக்கும் போது, நடைமுறையில் உள்ள அரசமைப்பில் செயற்படுத்த முடியாத பகுதிகள் நீக்கப்பட வேண்டும். இவ்வாறு புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டதன் பின்னர், அதன் கீழ் புதிய அரசு ஒன்றை அமைப்பதற்காக தேர்தல் நடத்தப்படுவது பொருத்தமானது.

மேலும், புதிய அரசமைப்பில், அதிகாரப்பரவலாக்கல் 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு மிகையாகாமல் இருக்க வேண்டும்.தற்போது செயற்படுத்தப்பட்டுள்ள மாகாண சபை முறைமையே இருக்க வேண்டும்.

தற்போதுள்ள அரசமைப்பில் ஒன்பதாவது அட்டவணையின் இணைப்புத்தான், 13 ஆவது திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்களை கோடிட்டுக்காட்டுகிறது.

பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுமாயின், தேசிய பொலிஸ் படை அதிகாரங்கள் நாளுக்கு நாள் ஒன்பது மாகாணங்களின் பொலிஸ் படைக்குத் தனித் தனியாக மாறிவிடும்.

இந்த அதிகாரப்பரவலாக்கம் இந்தியா போன்ற பெரிய நாடுகளுக்குப் பொருத்தமானது என நான் பரிந்துரைக்க விரும்புகின்றேன். ஆனால் இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு இது போன்ற அதிகாரப்பரவலாக்கம் நடைமுறைக்குச் சாத்தியமற்றது. இந்தியாவின் தமிழக மாநிலம் அளவில் உள்ள இலங்கைக்கு ஒரு பொலிஸ் படை போதுமானது.

எனவே, புதிய அரசமைப்பில் மிகச் சிறிய இலங்கைக்கு இந்தியா போன்ற ஒன்றியமான நாட்டின் அதிகாரப்பகிர்வு மாதிரி சேர்க்கப்படக் கூடாது என எச்சரிக்கின்றேன் என்றார். (வ)

## ஆளும்

முதலமைச்சரினாலேயே ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும் திடீரென, நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளரினால், குறித்த கலந்துரையாடல் தனிப்பட்ட காரணங்களால் நிறுத்தப்பட்டுள்ளதாக உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஆளுங் கட்சி உறுப்பினர்கள் மூவர், நேற்று முன்தினம் மாலை வடக்கு மாகாண முதலமைச்சரை, அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். மிக நீண்ட நேரம் இந்த இரகசிய கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதன் போது, நேற்று இடம்பெற விருந்த கலந்துரையாடலை இடைநிறுத்த வேண்டும் என்று குறித்த மாகாணசபை உறுப்பினர்கள் முதலமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து முதலமைச்சர், ஏனையோருடன் கலந்துரையாடாமல் இந்தச் சந்திப்பை திடீரென இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் பேசப்பட்டிருந்தன. இதற்குப் பதிலளிப்பதற்கு தற்போது நேரம் இல்லை என்று குறிப்பிட்டு, 17 ஆம் திகதி சந்திப்பை நடத்துவோம் என்று நேற்றைய கலந்துரையாடலை, முதலமைச்சரே கடந்த கூட்டத்தின் போது தீர்மானித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் திடீரென சந்திப்பை இடைநிறுத்தியது ஆளும் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்களிடத்தில் பல்வேறு சந்தேகங்களை உருவாக்கியுள்ளது. ஆளும் கட்சி உறுப்பினர்களுடன் பேசுவதை முதலமைச்சர் தவிர்ப்பதாக அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வினைத்திறனான வடக்கு மாகாண சபை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படுதல் ஆகிய விடயங்களே நேற்றுப் பேசப்பட விருந்தது. இந்த விடயங்களைப் பேசுவதிலிருந்தே முதலமைச்சர் பின்வாங்கியுள்ளதாக, ஆளும் கட்சி உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (வ-5)

## உயிரிழப்பில்

வருவதாவது:-

காரைநகர்-வாரிவளவைச் சேர்ந்த கார்த்திகேசு தவராசா (வயது-47) என்பவர் வவுனியாவில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் பணிபுரிந்து வருகிறார்.

தைப்பொங்கலுக்கு முன்னர் அவர் வீடு திரும்புவதற்காக வியாபார நிலைய முதலாளியிடம் சம்பளம் கேட்டபோது, இருவருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தவராசா தாக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த அவர் வவுனியா வைத்தியசாலையில் கடந்த 12 ஆம் திகதியிலிருந்து 2 நாள்கள் சிகிச்சை பெற்றுள்ளார்.

அதன் பின்னர், அவர் காரைநகருக்குத் திரும்பியுள்ளார். இந்த நிலையில் அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அதனால் கடந்த வெள்ளிக்கிழமையன்று குறித்த நபர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மறுநாள் அவர் உயிரிழந்துள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நேற்று அவரது இறுதிக் கிரியைகள் நடத்தித் தகனம் செய்வதாக அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்றுக் கிரியை நடந்து கொண்டிருந்த நிலையில், அவருக்கு வவுனியாவில் நடந்த சம்பவங்கள் பற்றிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் நேற்று காரைநகருக்குச் சென்ற ஊர்காவற்றுறைப் பொலிஸார், சடலத்தை மீட்டனர். தற்போது குறித்த தவராசாவின் சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இன்று சடலம் உடற்கூற்று விசாரணைக்கு உட்படுத்தப்படும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

## கத்தி முனையில்

பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இரவு வேளை வீட்டுக்குள் நுழைந்த 7 பேர் கொண்ட கொள்ளையர்கள் குழு, வீட்டிலுள்ளவர்களைக் கத்தி முனையில் அச்சுறுத்தி, வீட்டிலிருந்த, 12 பவுண் நகைகள் மற்றும் பெறுமதியான கைபேசி உள்ளிட்ட 5 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான உடைமைகளைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த கொள்ளையர் குழு முகத்தைக் கறுப்புத் துணியால் மறைத்திருந்தனர். வீட்டு மதில் மேலாகப் பாய்ந்து வந்து கதவை உடைத்து வீட்டுக்குள் நுழைந்தனர். வீட்டில் உள்ளவர்கள் சத்தமிட்டுக் கத்தியபோது, அவர்களின் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தியுள்ளது கொள்ளையர் குழு என முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-ற-107)

## சிரந்திக்கு

பிலான ஆவணங்களை வெளிவிவகார அமைச்சு திரட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## கண்ணீர் அஞ்சலி



கிங்ஸ் வைத்தியசாலை
யின் வைத்தியர்
Dr. தேவமதுரம் அவர்
களின் அன்பு மனைவி
திருமதி
**தேவமதுரம் இலட்சுமியம்மா**
(முன்னாள் பிரதம தாதிய உத்தியோகத்தர்,
யாழ். போதனா வைத்தியசாலை)
அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவித்துக்கொள்கின்றேன்.

**டேவிற்வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**கிங்ஸ் வைத்தியசாலை**
**முன்னாள் ஊழியர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி இலட்சுமியம்மா தேவமதுரம்

(ஓய்வுபெற்ற பிரதம தாதி உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை)

பிறப்பு 07 . 12 . 1939



இறப்பு 15 . 01 . 2016

கம்பர்மலை, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் ஸ்ரான்லி கல்லூரி ஒழுங்கை, அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமியம்மா தேவமதுரம் (ஓய்வு பெற்ற பிரதம தாதி உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை) அவர்கள் 15.01.2016 வெள்ளிக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - வைராள் தம்பதியரின் பாசமிகு சிரேஸ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்க ளான முருகேசு - சிவக்கொளுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் வைத்திய கலாநிதி முருகேசு தேவமதுரம் அவர்களின் பாசமிகு மனைவியும் சாந்தி(லண்டன்), ஸ்ரீதரன் (லண்டன்), லெனின் (லண்டன்) கலாநிதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் டேவிட்ராஜ் (லண்டன்), கிறிஸ்ரினா (லண்டன்), வலன்ரினா, Dr.சுகந்தராஜ் (வைத்திய அதிகாரி - ஆதார வைத்தியசாலை - ஊர்காவற்துறை) ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் டிவினியா, ஈனோக், மெலிஷா, ஏரன், ரெகபோத், ஈடன், ஓவியா, ஜெருஷன், ஒலிவியா, சுகானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், சிவகுருநாதன் (பொறியியலாளர் - லண்டன்) மற்றும் ரட்ணம் (ஜேர்மனி), மகேஸ்வரி (ஜேர்மனி), ரகுநாதன், சண்முகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தேவமணி மற்றும் தேவசோதி, தேவகுரு காலஞ்சென்ற ரத்தினாவதி மற்றும் பத்மாதேவி, வனஜாதேவி, சந்திரலிங்கம், நேசமலர், ரதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் துரைராஜா, இராசம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (18.01.2016) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கோப்பாய் இராச வீதியில் அமைந்துள்ள காணான் கிறீஸ்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 31 ஸ்ரான்லி கல்லூரி முன்வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
021 222 8511, 077 3399 072

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### தர்மகுலசிங்கம் பசீகரன்



முல்லைத்தீவு, கொக்குதொடுவாயைப் பிறப்பிடமாகவும், முல்லைத்தீவு முள்ளியவளை, ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மகுல சிங்கம் பசீகரன் நேற்று (17.01.2016) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் தர்மகுலசிங்கம் -ராசமலர் தம்பதியரின் அன்புப் புதல்வனும், கேதீஸ்வரன் (கிளியன்-லண்டன்), அகதீஸ்வரன் (ஜெகன்), பவதீஸ்வரன் (நீதன்), பசிகலா, நிலானி, நிதர்சினி, நிஷாஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மேனகா (லண்டன்), சாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2016) திங்கட்கிழமை பி.ப. 03.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மாமுலை, கற்பூரபுல்லு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார்கோயிலடி முள்ளியவளை,
முல்லைத்தீவு,

**தகவல்,**
**குடும்பத்தினர்.**
**077 494 1162**

### கந்தையா தங்கராசா

(ஓய்வுபெற்ற ஊழியர் - மின்சாரசபை, சுன்னாகம்)

பிறப்பு 01 . 05 . 1948



இறப்பு 17 . 01 . 2016

கட்டுவன் மேற்கைப் பிறப்பிடமாகவும் அச்செழு வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தங்கராசா நேற்று (17.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் இலட்சுமி தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், கஜதீபன் (பிரதேச செயலகம் - கோப்பாய் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்), சஜீவன், பகீரதி (B.A 2015 மாணவி), ஜெகதீபன் (இலங்கை மின்சாரசபை வாணிபம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராசா (பிரான்ஸ்), இராசமலர், சிவமலர், செல்வராசா (டென்மார்க்), சிவரூபராசா (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நேசரத்தினம் (ஓய்வுபெற்ற ஊழியர் - மின்சாரசபை, யாழ்ப் பாணம்), காலஞ்சென்ற லீலாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2016) திங்கட்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்செழு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு வடக்கு,
நீர்வேலி.

(67748)(11,15,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்செஸ்டர் யுனைற்ரெட் முகாமையாளருக்கு எதிர்ப்பு



நியூகாசில் அணியுடனான போட்டியில் 3-3 என்ற சமநிலை முடிவைப்பெற்ற பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாள ரொருவரை பருத்த உடற் கட்டுடையவர் என மன்செஸ்டர் யுனைட்டட் அணியின் முகாமையாளர் லூயிஸ்வான்கால் அழைத்தமை எதிர்ப்புக்களைத் தோற்றுவித்துள்ளது.

இந்தப் போட்டியில், வெய்ன் ரூனி இரண்டு கோல்களைப் பெற்ற நிலையில், போட்டிக்குப் பின்னரான ஊடகவியலாளர் சந்திப்பில், இந்தப் பருவகாலத்தில் வெய்ன் ரூனி, அதிகளவிலான விமர்சனத்தைச் சந்தித்துள்ளார் என ஊடகவியலாளரொருவர் கேட்க, அக்கேள்வியை இடைமறித்த வான் கால், 'வெய்ன் ரூனி பற்றி இனிப் பேசப்போவதில்லை. அவரை நீங்கள் விமர்சித்தீர்கள். நான் இல்லை, நீங்கள் தான் -என்றார்.

இதையடுத்து, அச்சந்திப்பை விட்டு அவர் வெளியேறியிருந்தார். அதன்போது, ஊடகவியலாளர்களில் ஒருவர், 'நீங்களும் தான்' எனத் தெரிவிக்க, வெளியேறும் வாயிலிலிருந்து திரும்பிய வான் கால், 'அங்கிருக்கும் பருத்த மனிதரே, நீங்களும் தான் என்றார். இது, விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. (ம)




# தொடரைக் கைப்பற்றியது ஆஸ்திரேலியா மூன்றாவது ஆட்டத்திலும் இந்தியா தோல்வி

இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்திலும் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா 5 ஆட்டங்கள் கொண்ட தொடரை 3:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. ஆரம்ப வீரராக ரோகித் சர்மா, மற்றும் தவான். இம்முறை ரோகித்தின் இன்னிங்ஸ் சிறப்பாக அமையவில்லை. 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தவான் நிலைத்து நின்றாலும் அளவுக்கு அதிகமான பந்துகளை வீணடித்தார். இதனால் இந்திய அணி ஆரம்பத்தில் 4 என்ற சராசரியிலேயே சென்று கொண்டிருந் தது. மறுமுனையில் கோக்லி அசத்திக் கொண்டிருந்தார். தவானும் அரைச்சதம் கடக்க கோக்லியும் அரைச்சதம் கடந்தார். 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் தவான். ரகானே கோக்லி இணை நேற்றும் அசத்தியது. சதம் கடந்தார் கோக்லி, ரகானே அரைச்சதம் கடந்தார். 117 ஓட்டங்களுடன் கோக்லியின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. டோனியும் பின்வரிசையில் விளாச முடிவில் இந்தியா 295-6. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக கஸ்ரிங்ஸ் 4 இலக்குகளையும், ரிச்சாட்சன், பல்க்நெர் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

300 பந்துகளில் 296 ஓட்டங்கள். 310 ஓட்டங்களை விரட்டியடித்த ஆஸ்திரேலி யாவால் இந்த இலக்கும் சாத்தியமாகும். ஆரம்பஇணைப்பாட்டம் சிறப்பாக அமைந்தது. 21 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் பின்ஞ். அரைச்சதம் கடந்தார் மார்ஷ். சிமித் - பெய்லி இணை நேற்றும் நம்பிக்கை தந்தது. இந்தியாவுக்கும் வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால் மக்ஸ்வெல் மிரட்டலில் ஆட்டம் மீண்டும் ஆஸ்திரேலியாவிடம் வந்தது. இறுதியில் 3 இலக்குகளால் வெற்றி பெற்றது ஆஸ்திரேலியா. பந்து வீச்சில் யாதேவ், இசாந் சர்மா, ஜடேயா மூவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக மக்ஸ்வெல் தெரிவானார். (ம)

# பாகிஸ்தானை பழிதீர்த்தது நியூசிலாந்து இறுதி ஆட்டத்தில் கிண்ணம் தீர்மானமாகும்

பாகிஸ்தான் அணிக்கு எதிரான 2ஆவது ரி-20 ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 10 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

பாகிஸ்தான் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரின் முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்நிலையில் 2வது ஆட்டம் நேற்று நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடியது. அதன் படி பாகிஸ்தான் அணி 7 இலக்குகள் இழப்பிற்கு 168 ஓட்டங்கள் குவித்தது. உமர் அக்மல் அதிகபட்சமாக 43 பந்தில் 56 ஓட்டங்கள் எடுத்தார். சோயிப் மாலிக் 39 ஓட்டங்கள் சேர்த்தார்.



பின்னர் 169 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு குப்தில், வில்லியம்சன் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இருவரும் பாகிஸ்தான் பந்து வீச்சை விளாசி தள்ளினர். குப்தில் சிக்சர்களாக பறக்க விட, வில்லியம்சன் பவுண்டரிகளாக விளாசினார். இதனால் நியூசிலாந்து அணி 17.4 பந்துப்பரிமாற்றத்தில் இலக்குகள் இழப்பின்றி 171 ஓட்டங்கள் எடுத்து 10 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. குப்தில் 58 பந்துகளில் 87 ஓட்டங்களும் (9 பவுண்டரிகள், 4 சிக்சர்கள்), வில்லியம்சன் 48 பந்துகளில் 11 பவுண்டரிகளுடன் 72 ஓட்டங்களும் குவித் தனர்.

இதன் மூலம் 3 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது. 3ஆவது மற்றும் கடைசி ரி-20 ஆட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி வெலிங்டனில் நடைபெறும். (ம)

## சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து விடைபெறலாம் —வில்லியர்ஸ்

தென்னாபிரிக்க டெஸ்ட் அணியின் இடைக்காலத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ள வில்லியர்ஸ், நீண்ட காலத்துக்கு டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடுவதற்கான உறுதியை மறுத்துள்ளதோடு, சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் குறிப்பிடத்தக்களவு மாற்றம் ஏற்படாவிட்டால், சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து முன்னணி வீரர்கள் விலகி விடுவர் எனவும் எச்சரித்துள்ளார்.

இங்கே சில வதந்திகள் காணப்படுவதா கவும் அவற்றில் பெரும்பாலானவற்றில் சிறிதளவு உண்மை இருப்பதாக கூறிய வில்லியர்ஸ்,தற்போதில்லாமல் இரண்டு, மூன்று வருடங்களாக சரியான பதில்களைத் தேடிக் கொண்டிருப்பதாகவும், குறைந்த கிரிக்கெட்டை விளையாடி என்னைப் புத்துணர்வாக வைத்து ஒவ்வொரு போட்டியிலும் மகிழ்வாக விளையாட விரும்புகிறேன் எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து, டெஸ்ட் போட்டிகளின் தலைமைப் பொறுப்பு அளிக்கப்படும் போது, தனது வாழ்நாள் கனவு என்று தெரிவித்திருந்தபோதும், தென்னாபிரிக்க டெஸ்ட் அணியை நிரந்தரமாகத் தலைமை தாங்கப் போகின்றார் என்பது தெளிவில்லாமல் உள்ளது.

இந்நிலையில், தற்போது இந்த இரண்டு டெஸ்ட் போட்டிகள் பற்றியே தனது கவனம் உள்ளதாகவும், இதன் பின்னர் அடுத்த டெஸ்ட் போட்டி, ஆறு மாதங்களின் பின்னரே உள்ளது எனவும், இதற்கிடையில் பல விடயங்கள் நடக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தியன் பிறீமியர் லீக் போட்டிகளில் 2017ஆம் ஆண்டு வரை றோயல் பெங்களூர் சலஞ்ஜர்ஸ் அணியினால் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள டீ வில்லியர்ஸ் 9.5 கோடி இந்திய ரூபாயை ஊதியமாகப் பெறுகிறார். இந்தத் தொகையானது, அவர் தேசிய அணியில் விளையாடுவதற் காக பெறும் ஊதியத்தை விடப் பத்து மடங்கு ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து; 20 ஆண்டுகளின் பின்னர் சாதனை

இங்கிலாந்து-தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டத்திலும் வெற்றி பெற்ற இங்கிலாந்து தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. 20 வருடங்களின் பின்னர் தென்னாபிரிக்காவில் வைத்து இங்கிலாந்து தொடரை வெல்வது இதுவே முதல் முறை.


நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்து 313 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக ஸ்ரோக்ஸ் மூன்று இலக்குகளையும், புரோட், பின் இருவரும் தலா இரு இலக்குகளையும் மொயின் அலி, அன்டர்சன் இருவரும் தலா ஓர்இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து இரண்டாம் நாள் முடிவில் 238-5 என்ற நிலையில் இருந்தது. ரூட் 106 ஓட்டங்களுடனும், பரிஸ்ரெளவ் 4 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக களமிறங்கினர். ரூட்டின் இன்னிங்ஸ் 110 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந் தது. பரிஸ்ரெளவ் நிலைத்துநின்றாலும் பின்வரிசையில் இலக்குகள் சரிந்து முடிந்தன. முடிவில் இங்கிலாந்து சகல இலக்குகளையும் இழந்து 323 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக ரபாடா ஐந்து இலக்குகளையும், மோர்கல் 3 இலக்குகளையும், வில்யோன், மொறிஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

10 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இருந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்காவுக்கு ஆரம்ப இணை மீண்டும் தடுமாற்றம் காட்டியது. எல்கர், ஸ்ரியான் இருவரும் பதின்மத்தைத் தாண்டவில்லை. அம்லா 5 ஓட்டங்களுடனும், வில்லியர்ஸ் ஓட்டங்கள் எதனையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். தற்பொழுது தென்னாபிரிக்கா 31-4. பின்வரிசை வீரர்களும் அடுத்தடுத்து விடைபெற 83 ஓட்டங்களில் சுருண்டது தென்னாபிரிக்கா. பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக புரோட் 6 இலக்குகளையும், ஸ்ரோக்ஸ் 2 இலக்குகளையும், பின், அன்டர்சன் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது கைகொடுக்க இங்கிலாந்துக்கு இலக்காக 74 ஓட்டங்கள். குக், ஹேல்ஸ் இணை இணைந்து வெற்றியின் விளிம்புவரை அழைத்துச் சென்றது. இங்கிலாந்து 64 ஓட்டங்களில் இருந்தபொழுது 43 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் குக். கேல்ஸ், கொம்டன் அடுத்தடுத்து வீழ்ந்தனர். முடிவில் 7 இலக்குகளால் வெற்றிபெற்றது இங்கிலாந்து. பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக எல்கர் இரண்டு இலக்குகளையும், மொறிஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக புரோட் தெரிவானார். 20 வருடங்களின் பின்னர் தென்னாபிரிக்காவில் வைத்து இங்கிலாந்து தொடரை வெல்வது இதுவே முதல் முறை. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

**றோயல் வி.கழகத் தொடர்**

யாழ்ப்பாணம், ஜன. 18

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம்வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.

**ஜொலிஸ்ரார் வி.கழகத் தொடர்**

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக்கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் (புளூஸ்)அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கஜன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமைஇரவு7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில்பீனிக்ஸ்அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதவுள்ளது.

(ம-23)





## எவ்.ஏ. கிண்ண பருத்தித்துறைத் தொடரில் சென். அன்ரனிஸ், சென் சேவியர் இறுதிப் போட்டியில்

கரணவாய், ஜன. 18

எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் பருத்தித்துறை லீக்கில் அங்கத்துவம் வகிக்கும் அணிகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும், சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகமும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற குறித்த அரையிறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழகமும் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. ஆட்டத்தின் பெரும்பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த சென்.சேவியர் அணி 3:0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு அரையிறுதியாட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 3:0 என்று வெற்றிபெற்று இறுதிக்குள் நுழைந்தது சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம். (ம-108)

## சென்.மேரிஸ் அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ். கால்பந்தாட்ட லீக்குகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி அபார வெற்றிபெற்றுள்ளது.

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் யாழ். கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்களில், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அரியாலையில் அமைந்துள்ள கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியும், திருக்குமரன் அணியும் பலப்பரீட்சை நடத்தின. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 6:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் பொற்பதி அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதியது. இதில் அரியாலை ஐக்கிய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## விளையாட்டுத்துறை பயிற்சியாளர்களுக்கு விஞ்ஞான நிறுவன சான்றிதழ் கட்டாயம்

கொழும்பு, ஜன.18

இலங்கையின் விளையாட்டுத்துறை பயிற்சியாளர்களுக்கு, தேசிய விஞ்ஞான நிறுவனத்தின் பயிற்சிச் சான்றிதழ் கட்டாயமாக்கப்படவுள்ளது. அத்துடன் தேசிய விளையாட்டுக்கள், விஞ்ஞான நிறுவனத்தினால் நடத்தப்பட்டு வரும் பாட நெறிகளை சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறிகளாக்குதல் மற்றும் அந்த பாடநெறிகள் தொடர்பாக வழங்கப்படும் சான்றிதழ்களை தேசிய தொழில் தகைமைகளுக்கு பெற்றுக் கொடுப்பது தொடர்பாக பேச்சு இடம் பெற்று வருவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு சரியான முறைமையல்லாது விளையாட்டுக்களைப் பயிற்றுவிப்பதால் அவர்கள் பலதரப்பட்ட உடற்பாதிப்புக்களுக்கு உள்ளாகி-விடும் தன்மை அதிகம் இருப்பதாகவும், அதன் காரணமாக திறமை மிக்க வீரர்கள், வீராங்கனைகள் நாட்டுக்குக் கிடைப்பது அற்றுப் போகின்றது என்று தெரிவித்துள்ள தயாசிறி, விளையாட்டுத்துறை பயிற்றுவிப்போரது அறிவாற்றலை சிறப்பான மட்டத்துக்குக் கொண்டு வருவதன் மூலம் 2020 ஆம் ஆண்டில் இடம்பெறும் ஒலிம்பிக் தொடரில் இலங்கைக்கு மிகப்பெரிய வெற்றிகளை பெறமுடியும்என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதனாலேயே குறித்த சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.(ம-ஐ-22)

## றோயலுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 18

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து உருத்திரபுரம் அணி மோதிக் கொண்டது. இதில் ஊரெழு றோயல் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)





## டயமன்ஸ் - யங்கம்பன்ஸ் இறுதியில் இன்று மோதல்

கரணவாய், ஜன. 18

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் இன்று மோதவுள்ளன. நியூட்டன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இரவு 8.30 மணிக்கு இறுதியாட்டம் நடைபெறும். மூன்றாம் இடத் துக்கான ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)

## மன்னார் லீக் அபாரம்

யாழ்ப்பாணம், ஜன. 18

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கான யூனியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமைபிற்பகல்3மணிக்கு மன்னார் இராயப்பு ஜோசப் ஆண்டகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இந்த ஆட்டத்தில் மன்னார் லீக் அணியை எதிர்த்து வலிகாம லீக் அணி மோதிக் கொண்டது. இதில் மன்னார் லீக் அணி 4:2 என்ற கோல்கணக்கில்வெற்றி பெற்றது. (ம-23-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்துத் தொடரில் லெய்செஸ்டர் சிற்றி – அஸ்டன் வில்லா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 1:1 சமநிலையில் முடிவடைந்தது. இந்தச் சமநிலையுடன் ஒட்டுமொத்தமாக 44 புள்ளிகளைப் பெற்றுள்ள லெய் செஸ்டர் தரப்படுத்தலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. (ம)

# முதலிடத்தில் புரோட்; அஸ்வினுக்குச் சரிவு

புதிதாக வெளியிடப்பட்ட பந்துவீச்சாளர்களுக்கான டெஸ்ட் தரப்படுத்தலில் அஸ்வினை இரண்டாவது இடத்துக்குப் பின்தள்ளி முதலிடத்தைப் பிடித்துள்ளார் இங்கிலாந்தின் புரோட். தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களுக்கு இலங்கைப் பந்துவீச்சாளர்கள் எவரும் இடம்பெறவில்லை.

தென்னாபிரிக்கா – இங்கிலாந்து அணிகளுக்கு இடை யிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் நேற்றுமுன்தினம் இங்கிலாந்தின் வெற்றியுடன் முடிவுக்கு வந்தது. இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்கா மண்ணில் சுமார் 20 ஆண்டுகள் கழித்து இங்கிலாந்து தொடரை வென்றது. வெற்றிக்கு காரணமாக இருந்த பிரோட் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் பந்துவீச் சாளர்களுக்கான டெஸ்ட் தரவரிசையில் முதன்முறையாக முதல் இடத்திற்கு முன்னேறினார்.

கடந்த ஆண்டு இறுதியில் இந்தியாவின் அஸ்வின் முதன்முறையாக முதல் இடத்திற்கு முன்னேறினார். கிட்டத்தட்ட 16 நாள்கள் அந்த இடத்தில் இருந்த அஸ்வினை பின்னுக்குத் தள்ளி புரோட் முதல் இடத்திற்கு முதன்முறையாக முன்னேறியுள்ளார்.

புரோட் 880 புள்ளிகள் பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளார். அஸ்வின் 871 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். காயத்தால் அவதிப்பட்டு வரும் ஸ்ரெயின் 850 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்துக்கு இறங்கியுள்ளார். பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் யாசீர் சா நான்காவது இடத்தையும், இங்கிலாந்து வேகப் பந்து வீச்சாளர் அண்டர்சன் 5ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். ஆறு முதல் பத்து இடங்களுக்குள் முறையே ஜடேயா, போல்ட், கசில்வுட், சவுத்தி, பிலண்டர் உள்ளனர். (ம)



# அதிவேக 7000 ஓட்டங்கள் கோக்லி புதிய சாதனை



இந்திய கிரிக்கெட் அணியின் துணைத்தலைவர் விராட் கோக்லி அதிவேகமாக 7 ஆயிரம் ஓட்டங்கள் கடந்த வீரர் என்ற புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

இந்தியா – ஆஸ்திரேலிய அணிகள் மோதிய மூன்றாவது ஒரு நாள் ஆட்டம் மெல்பேர்னில் நேற்று நடைபெற்றது. இதில் விராட் கோக்லி 117 ஓட்டங்களைக் குவித்தார். அவர் 19 ஓட்டங்களை கடந்தபோது குறைந்த இன்னிங்ஸில் 7ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற சாதனையைப் படைத்தார். தென்னாபிரிக்க அணியின் தலைவர் வில்லியர்ஸ் 166 இன்னிங்ஸ்களில் எட்டியதே இதுவரை சாதனையாக இருந்தது. ஆனால் விராட் கோக்லி 161 இன்னிங்ஸ்களிலே இந்த மைல்கல்லை எட்டியுள்ளார். (ம)

# தோல்வியைத் தள்ளிப்போட்டது பங்களாதேஷ் தொடரைக் கைப்பற்றுவதையும் சுலபமாக்கியது



பங்களாதேஷ் – சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ரி-20 ஆட்டத்திலும் வெற்றிபெற்ற பங்களாதேஷ் நான்கு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரில் 2:0 என்று முன்னிலையில் உள்ளது.

நாயணச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 3 இலக்குகள் இழப்புக்கு 167 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக ரகுமான் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும், சர்கர் 43 ஓட்டங்களையும், சகிப் அல் கசன் 43 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் சிம்பாப்வே சார்பாக முசரம்பானி, கிரீமர், மசகட்சா மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை முழுமையாகத் தாக்குப்பிடித்தாலும் 125 ஓட்டங்களையே பெற்றது. அதிகபட்சமாக மசகட்சா 30 ஓட்டங்களையும், வோலர் 29 ஓட்டங்களையும், சிபண்டா 21 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக ரகுமான் 3 இலக்குகளையும், ரகிம் 2 இலக்குகளையும், கொம், கொசைன். மோர்ரசா மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ரகுமான் தெரிவானார். (ம)

# இந்தியா முதலிடத்தில் இலங்கை ஏழாமிடம்



சர்வதேச டெஸ்ட் தரப்படுத்தலில் 5 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது இந்திய அணி. இலங்கை 7ஆவது இடத்தில் உள்ளது.

2011ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 0:4 என்றகணக்கில் இழந்தபோது முதல் இடத்தை இந்தியா பறிகொடுத்திருந்தது. கடந்த டிசெம்பர் மாதம் வீராட்கோக்லி தலைமையிலான இந்திய அணி 3:0 என்ற கணக்கில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரை கைப்பற்றி இருந்தது. மேலும் தென்னாபிரிக்கா அணி தற்போது சொந்த மண்ணில் இங்கிலாந்திடம் 0:2 என்ற கணக்கில் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இதனால் இந்தியாவுக்கு மீண்டும் முதலிடம் கிடைத்துள்ளது. 109 புள்ளிகளுடன் ஆஸ்திரேலியா 2ஆவது இடத்தில் உள்ளது. முதலிடத்தில் இருந்த தென்னாபிரிக்கா மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டது. அந்த அணி கடந்த ஒரு ஆண்டில் எந்த ஒரு டெஸ்டிலும் வெற்றி பெறவில்லை. பாகிஸ்தான் 4ஆவது இடத்திலும், இங்கிலாந்து 5ஆவது இடத்திலும் உள்ளன. ஆறு முதல் பத்து வரையான இடங்களுக்குள் முறையே நியூசிலாந்து, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகள் உள்ளன. (ம)

# சூதாட்ட விடுதிகளுக்குச் செல்ல இந்திய வீரர்களுக்குத் தடை

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வீரர்கள் சூதாட்ட விடுதிகளுக்கு செல்லக்கூடாது என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிரடியாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை டோனி தலைமையிலான இந்திய அணிக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பியுள்ளது. அதில் இந்திய வீரர்கள் யாரும் சூதாட்ட விடுதிக்குச் செல்ல வேண்டாம். அங்கு சில விரும்பத்தகாத நபர்களைச் சந்திக்க நேரிடலாம். இதனால் தர்மசங்கடத்துக்கு உள்ளாக நேரிடலாம் என்பதால் இந்தத் தடை விதிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டப்பட்டுள்ளதாக அறியவருகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.